# சிறு கதைகள்

எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யர்

எழுதியது.

வி. நாராயணன் & கம்பெனி,
புஸ்தக வியாபாரிகள்
4, கோண்டி செட்டி தெரு,
மதராஸ்

1922

காபிரைட்]

[விலை அணா 8

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம். |
| நாகலக்ஷ்மி | ... | ... | 1 |
| தரும சங்கடம் | .... | ... | 16 |
| விஜயன் | ... | ... | 33 |
| ஹிதசத்ரு | ... | ... | 46 |
| கல்யாணப்பித்து | ... | ... | 22 |
| காணமற்போன நோட்டுகள் | ... | ... | 85 |

# நாகலக்ஷ்மி

---

## I

சந்திரசேகரன் தனது நிலைமையைப்பற்றி மிகவும் கவலைப் பட்டான். அவன் பள்ளிக்கூட லீவுக்காக ஊருக்கு வந்திருந்தான். தந்தை பணம் அனுப்புவார் என்ற தைரியத்தில், பள்ளிக்கூடத்தில், பணம் கடன்வாங்கிச் செலவழித்திருந்தான். அடிக்கடி கடிதம் போட்டும், அவன் தந்தை பணம் அனுப்பவேயில்லை. கடன் கொடுத்த அவன் சிநேகிதர்களும் பிறரும் கடனுக்குத் தொந்தரை செய்தார்கள். அதனால் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் லீவு விட இரண்டுநாள் முன்னாலேயே ஊருக்கு வந்துவிட்டான். வந்து தந்தையைக் கேட்டதில் கையில் பணம் இல்லை யென்றும், அதனால்தான் அப்போது பணம் அனுப்பவில்லையென்றும் சொன்னார். கொடுக்கவேண்டியவர்களுக்கு பணத்தை மணியார்டர் செய்யவேண்டுமென்று சொன்னதில், அவர் நாளைக்கு, அப்புறம் என்று சாக்குப்போக்குச் சொல்லிவந்தார். பணம் கடன் கொடுத்து உதவின நண்பர்கள் கடிதம் எழுதத் தலைப்பட்டார்கள். சீக்கிரம் பணத்தை அனுப்பி விடுவதாக அவர்களுக்குக் கடிதம் எழுதி, சந்திரசேகரன் தந்தையைப் பணத்துக்குத் தொந்தரை செய்யலானான். அவரோ தன் இளையாளுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர். உலக இயற்கையை அனுஸரித்து இளையாளும் தாயிழந்த சந்திரசேகரனிடம் வெறுப்புள்ளவளாக இருந்தாள். அவள் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னால், சந்திரசேகரனுக்குப் பணக் கஷ்டம் ஒரு சிறிதுமிராது. தன் பிறந்தகத்திலாவது, தன் புக்ககத்து வம்சத்திலாவது, வேறெவரும் இங்கிலீஷ் படிக்காமலிருக்க சந்திரசேகரன் மாத்திரம் படிப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவள் இடைவிடாது தன் புருஷனுக்கு உப

தேசம் செய்து, அவன் படிப்பை நிறுத்த முயன்றுள். அதனுல் தான் அவர் காலேந்து மாஸமாக சந்திரசேகரனுக்குப் பணம் அனுப்பாமலிருந்து வந்தார்.

அவருக்குக் கையில் பணமில்லே யென்பதில்லே. கடன் கிடைக்காதென்பதுமில்லே. சந்திரசேகரன் வந்த இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் அவர் தமது மனைவிக்கு ஐம்பது ரூபாயில் ஒரு புடவை வாங்கிக் கொடுத்திருந்தார்.

மறுபடி ஒரு வாரத்துக்கெல்லாம் கடன் வாங்கி தமது பெண்ணுக்கு—இளேயாள் வயிற்றில் பிறந்தது—காப்பு செய்து போட்டார். இளேயாள் ஸௌகரியத்துக்காக வேறு பல விதத்தில் அவர் செலவு செய்தவை சந்திரசேகரனுக்கு நன்கு தெரியும். இவை யெல்லாவற்றையும் கண்ட சந்திரசேகரன் ஒரு நாள் தன் தந்தையிடம் பணத்தைப்பற்றிக் கண்டித்துக்கேட்டான்.

தந்தை:—" நீ கண்டபடி செலவழித்துக் கடன் பட்டு வந்தால், அதற்கெல்லாம் நான் பாத்தியப்பட முடியுமா? நூற்றிருபத்தைந்து ரூபாய் கடன் ஏற்படுவானேன்? நீ பிரபு வீட்டுப் பிள்ளேபோல் நாடகத்துக்கும் கூத்துக்கும் போய், காப்பி ஹோட்டலே ஒழித்துக்கொண்டிருந்தால், நீ படிக்கிருயென்று நான் பணம் கொடுத்துக் கொண்டேயிருக்க முடியுமா?"

சந்திர:—" நான்தான் கணக்கு வைத்திருக்கிறேனே, அதைப்பாருங்களேன். நான் அக்கிரமச் செலவு செய்தேனு அல்லது நியாயச்செலவு செய்தேனு என்பது தெரிகிறது."

தந்தை:—"உன் கணக்கெல்லாம் எனக்குத்தேவையில்லே. எனக்குக்கடன் தொந்தரவு அதிகமாக இருக்கிறது. வெள்ளனூர் கோபாலசாமி ஐயருக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்கவேண்டும். இன்னும் இரண்டு நாளில் அவர் வந்து விடுவார். அதற்கென்ன செய்கிறதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறேன். நீ நடுவில் தொந்தரைசெய்கிருய்."

சந்திர:—" நீங்கள் அனுப்புவீர்கள் என்ற நம்பிக்கையில்லவோ நான் கடன் வாங்கினேன்?"

தந்தை:—" அதற்காக நான் என்ன செய்யட்டும்?"

சந்திர:—" அப்போதே பணம் அனுப்பமுடியாதென்றுல்,

நான் படிப்பை நிறுத்திவிட்டு ஊர்வந்திருப்பேனல்லவா?''

தந்தை:—''இப்போது தானென்ன. படிப்பை நிறுத்திவிடு.''

சந்திர:—'' இனிபடிப்பு கிடையாது தான். இதுவரையில் பட்ட கடனுக்கு? கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்து விட வேண்டாமா?''

தந்தை:—'' அதெல்லாம் எனக்குத் தெரியாது. உனக்காக, தொலைகிறது, ஐம்பது ரூபாய் கொடுக்கிறேன். அதுவும் இந்த மாஸக் கடைசியில்தான்!''

சந்திரசேகரன் இனித் தன் தந்தையுடன் போராடுவதில் பயனில்லை யென்று கண்டு, தனது மாமனாரைப் பண உதவி கேட்க எண்ணி அவருக்குப் போனான்.

அவனுக்குக் கல்யாணமாகி ஒன்றரைவருஷமாகிறது. மாமனார் பணக்காரரல்லர். பெரிய குடும்பி. அவருக்கு திடீரென்று நூற்றைம்பது இருநூறு கிடைப்பது அரிது. மேலும் கல்யாணம் முதலிய செலவில் பட்ட கடன் இன்னும் அடைபடாமல் தவித்துக் கொண்டிருந்தார். அதனால் அவர் பண உதவி செய்ய மறுத்து விட்டார். அவர் அதனோடு நின்றிருக்கலாம். கால வித்தியாசத்தால், பையன் நிர்க்கதியாக இருப்பதைக் கண்டு மனமிரங்கவேண்டியது போய், அவனை உதாஸீனமாகப் பேசி விட்டார். அதனால் சந்திரசேகரன் மனந்தளர்ந்து, தன் மாமனாரிடத்திலும், சிறு பிள்ளை யாதலால் தன் மனைவியிடத்திலும் வெறுப்பு கொண்டு, தனக்கு ஆபத்தில் உதவிசெய்யக்கூடியவர் எவரும் இல்லை யென்று கண்டு, இனிக் கண்காணாத் தேசத்தில் போய் வஸிக்கத் தீர்மானித்து விட்டான்.

ஆனால் பட்டகடனைத்தீர்க்காமல் போக அவனுக்கு ஸம்மதமில்லை. அதனால் அவன், தான் வாசித்து வந்த தஞ்சை நகரம் போய், தான் அணிந்திருந்த கடுக்கன்,வைரம்பதித்திருந்த மோதிரம் ஆகிய இரண்டையும் விற்று, கடன் கொடுத்து உதவின தன் நண்பர்களுக்குப் பணத்தை அனுப்பிவிட்டு, சென்னை நகரம் போய் அங்கிருந்து பம்பாய் போகத் தீர்மானித்தான். அவன் தஞ்சைக்குப் போனதும், அங்கிருந்து சென்னைக்குப் போனதும் அவன் தந்தைக்குத் தெரியாது. பையன் மாமனாருடைய வீட்டுக்குப் போயிருப்பதாக எண்ணியிருந்தார்.

அவன் தன் தந்தை வீடு போயிருப்பதாக மாமனார் வீட்டில் எண்ணியிருந்தார்கள். ஆகையால் அவன் பம்பாய் போவது யாருக்குமே தெரியாது. ஆயினும் புறப்பட்டு ஸென்டிரல் ஸ்டேஷனுக்குப் போகும் வழியில், தன் மாமனார் ஊர் வாஸியாகிய ராமசுப்பையர் என்பவரைக் காண நேர்ந்தது. மனம் நொந்து போயிருந்த அவன் அவரைக் கண்டதும், தன் மனக்குறைகளை யெல்லாம் சொல்லி இனி எவர் முகத்திலும் விழிக்காமல் பம்பாய் போய்அங்கேயே வஸிப்பதாய்த்தீர்மானித் திருப்பதாகவும், அதற்காக இரவு மெயிலில் ஏறிப்போவதாகவும் தெரிவித்தான். ராமசுப்பையர் அவனுக்குப பல விதத்திலும் புத்திமதி சொல்லிப் பார்த்தார். ஒன்றும் அவன் காதில் ஏறவில்லை. அவரும் அன்றிரவே தமதூருக்குப் புறப்பட்டார்.

## II

ராமசுப்பையர் சென்னையை விட்டுப்புறப்பட்டு, சிதம்பரம் போய் அங்கிருந்து தமதூருக்குப் போனார். போகும் வழியில் சென்னை டமேர்கு ரெயில் பாதையில் வயலூருக்கு அருகாமையில் பம்பாய் மெயில்வண்டி இன்னொரு வண்டியோடு மோதி நாசமடைந்ததென்று கேள்விப்பட்டார். உடனே அவருக்கு சந்திரசேகரனுடைய ஞாபகம் வந்தது. "அவனும் பம்பாய் போவதாகச் சொன்னானே. அந்த வண்டியில் ஏறிப்போனானோ என்னவோ; அவன் போன தேதியில்தானே வண்டிக்கு ஆபத்து நேர்ந்தது. அவன்கதி என்ன ஆயிற்றோ!" என்று அவர் கவலைகொண்டார். ஊருக்குப்போனால் தெரியும் என்று எண்ணி வழியில் எங்கும் தங்காமல் நேரே ஊருக்குப்போனார். ஊரில் ஏதோ ரெயில் வண்டிக்கு ஆபத்தென்றும், பல ஜனங்கள் சேதம் என்றும் தெரியுமேயொழிய, பூரா விவரம் ஒன்றும் தெரியாது. சந்திரசேகரன் பம்பாய் போனசேதி எவருக்கும் தெரியாததலால், அவன் மாமனார் கவலையற்றிருந்தார். ராமசுப்பையர் வந்து தகவலைச் சொன்ன பிறகு, சந்திரசேகரனது மாமனார் வீட்டில் பெருங்கவலை குடிகொண்டது. மாமனார் பக்கத்து ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஓடி விசாரித்தார். அங்கு ஒன்றும் தெரியவில்லை. சென்னையிலிருநது அவ்வூருக்கு வருகிற பத்திரிகைகளைப் பார்

த்திலும் சந்திரசேகரனுடைய சேதி ஒன்றும் கிடைக்கவில்லை. பட்டணத்தில் தமக்குத் தெரிந்தவர்களுக்குத் தந்தி கொடுத்து விசாரித்தார். அதிலும் தகவல் கிடைக்கவில்லை. சந்திரசேகரனுடைய மைத்துனன் சென்னையில் விசாரிப்பதற்காகப் போனான். மறுநாள் வந்த பத்திரிகைகளில் இறந்தவர்களின் தொகை உத்தேசமாகக் கொடுக்கப் பட்டிருந்தது. விவரந் தெரிந்தவர்களின் ஊர் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த ஜாப்தாவில் சந்திரசேகரன் பெயர் இல்லை. மைத்துனன் போனவன் இரண்டுநாள் கழித்துத் திரும்பி வந்தான். பிணங்களில் பல உருத் தெரியவில்லையென்றும், தான்போய்ச் சேர்வதற்கு முன்னமேயே சில புதைக்கப்பட்டுப்போயின வென்றும், போட்டோபடம் பிடித்திருந்தவைகளைப் பார்த்ததில் ஒரு பிணம் சந்திரசேகரனுடையதைப்போலிருந்ததென்றும் சொன்னான். இதைக் கேட்டதும் யாவரும் துக்கப்படலானார்கள். சிலர் சந்திரசேகரன் இறந்துபோனதாகவே எண்ணினார்கள். சிலர் அவன் தப்பியிருப்பானென்று சொன்னார்கள். தப்பியிருந்தால் இன்னும் சிலநாளில் அவனிடமிருந்து கடிதம் வருமென்று கடிதத்தை எதிர்பார்க்கலானார்கள். கடிதம் ஒன்றும் வரவில்லை. அவன் இறந்து போனதாக எண்ணி அவனுக்குச்செய்ய வேண்டிய கிரியைகள் செய்யவும் எவருக்கும் ஸம்மதமில்லை. இன்னம் கொஞ்ச காலம் பொறுத்திருக்கத் தீர்மானித்தார்கள்.

சந்திரசேகரன் மனைவி நாகலக்ஷ்மி என்பவளுக்கு அப்போது வயது பன்னிரண்டு. விவரம் தெரியாத பெண். தன் புருஷனைப்பற்றிய சேதி கேட்டவுடனேயே அவள் ஏக்கங் கொண்டாள். ஆயுளளவும் தான் விதவையாய் இருக்க நேருமோ என்று பயந்தாள், விதவையாய்ப்போய் ஆதரிப்பாரற்று, பலரிடம் பேச்சு கேட்டு, சோற்றுக்குக் கஷ்டப்பட நேரிடுமே என்று திகிலடைந்தாள். தான் மற்ற பெண்களைப்போல புருஷனுடன் இன்பமாய் வாழ்ந்து சுகப்பட பாக்கியமில்லாமல் போயிற்றே என்று வருந்தினாள். ராமசுப்பையர் வந்தவன்று இரவில் அவளுக்கு ஏக்கத்தில் தூக்கம் பிடிக்கவில்லை. அவனையே நினைத்துக் கொண்டு கண்ணீர்விட்டாள். விடியற் காலையில் சற்று தூக்கம் வந்தது. ஸ்வப்னம் கண்டாள். தன் புருஷன்

சேதியை விசாரிக்கத் தானும் தமையனும் சென்னை போயிருப்பதாகவும், அங்கே ரெயில் விபத்தில் இறந்த பிணங்களைப் பார்க்கையில் தன் கணவன் காலிழந்து, அங்கஹீனமாகிச் செத்துக் கிடப்பதைப் பார்ப்பதாயும் கனவுகண்டாள். அவனுடைய பிணத்தைப் புதைப்பதையும் பார்த்தாள். பிறகு விழித்துக்கொண்டாள். அந்த பயங்கரமான ஸ்வப்னத்தை அவள் எவருக்கும் சொல்ல மனம் துணியவில்லை. அவ்வளவு பயமாயிருந்தது. இரண்டொரு நாளுக்கெல்லாம் அந்தக் கனவு சுபமானதென்று கேள்விப்பட்டு, தன் கணவன் உயிரோடிருப்பதாகவும், கூடிய சீக்கிரத்தில் அவன் திரும்பி வரலாம் அல்லது கடிதமாவது போடலாமென்றும் எண்ணி சற்று தைரியங்கொண்டாள். சில நாளுக்குப் பிறகு கூட கடிதம் வாராமலிருக்கவே சிறிது அச்ச மடைந்தாள். ஆனால் தனது கணவன் தந்தையுடனும் தனக்குப் பண உதவிசெய்ய மறுத்த தன் மாமனாருடனும் கோபித்துக்கொண்டு வெளியூர் போயிருப்பதால், ரெயில் விபத்திலிருந்து தப்பினவர் தமது க்ஷேமஸமாசாரத்தைச் சொல்ல இஷ்டப்படாமலிருக்கிறார்; இன்னும் சில காலமான பிறகு, அவருக்காக மனம் வந்து கடிதமாவது போடுவார் அல்லது தாமே நேராக வருவர் என்று எண்ணி மனதை ஸமாதானம் செய்து கொண்டாள்.

இப்படித் தன் மனத்தை ஒருவழிக்குக் கொண்டு வந்து அவள் புருஷன் விஷயமாகக் கவலை யதிகமின்றி யிருந்தாளென்றாலும், வேறுவிதத்தில் அவளுக்குக் கவலை அதிகமாயிற்று. அவளுடைய தாய்தந்தையும், தமையனும், தமையன் பெண்சாதியும் அவளை அலக்ஷியம் செய்யத் தலைப்பட்டு, வரவர அவளைக்கஷ்டப்படுத்தலானார்கள். அவளை அதிருஷ்டஹீனையென்று தூஷித்தார்கள். அவளுடைய மதனி மற்றெல்லாரையும் விடக் கடுமையாக நடத்தி வந்தாள். இப்படி யிருக்க, வீடு நெருப்புப் பற்றி, அதுவும் அதை யொட்டியிருந்த வீடுகளில் சிலவும் அழிந்து போயின. அதிக நஷ்டம் ஏற்பட்டது. இது நாகலக்ஷ்மியின் துரதிருஷ்டத்தாலென்று சொன்னார்கள். அவளுடைய தமையனுடைய குழந்தை—பல நாளாக நோயாயிருந்தது—இறந்து போனதும் அவளுடைய துரதிருஷ்டத்தாலேயே! அவளுடைய தமையன் பயிர்த்தொழிலில் நஷ்ட மடை

ந்து வயலில் ஒன்றை விற்க நேர்ந்ததும் அப்படியே! அவள் தகப்பனார் பெண்ணின் கதியை நினைத்துத் துக்கித்து அதனாலும், குடும்பக் கஷ்டத்தை நினைத்து அதனாலும் வியாதிக் காளாய்ப் படுத்த படுக்கையாகி இறந்து போனதும் அவளுடைய துரதிருஷ்டத்தாலேயே! தெருவில் போனால்— அவள் அதிகமாகப் போவது கிடையாது— அவளைக்கண்டு போகப் புறப்பட்டவர் நிற்பர். போனவர் திரும்புவர். கண்டவர் திட்டுவர். இப்படி அவள் பலராலும் அலக்ஷியம் செய்து கண்டும் காணாததுமாய்த்திட்டி—முக்யமாய் மதனியால்— சுபா சுபங்களுக்கு இதர வீடுகள் போக போக்ய மில்லாமல் போகவே, வீட்டிலும் உபத்திரவம் அதிகமாகவே— அவள் தாயாருக்கு வீட்டில் அதிகாரம் கிடையாது. நாட்டுப் பெண்ணுக்குத் தான் ஸர்வாதிகாரம்—அவள் என்ன செய்வதென்று தோன்றாமல் பரிதபித்தாள். எங்கேயாவது போய்பிழைக்கலாமா என்று எண்ணுவாள். அதுமுடியாதென்று கண்டுகலங்குவாள். ஆற்றில், கிணற்றில் விழுந்து இறக்கலாமா என்று நினைப்பாள். தன்புருஷன் உயிரோடிருப்பதாக எண்ணி உயிர்வாழ மனங்கொண்டு அந்த எண்ணத்தை விடுவாள்.

பிறகு சில மாஸங்களுக்கெல்லாம் அவளுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. சென்னையில் வைத்தியப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசித்து, வைத்தியத்தில் தேர்ச்சியடைந்து தனியாக கௌரவமாகக் காலங்கழித்து புருஷனுடைய வரவை எதிர் பார்ப்பதாகத் தீர்மானித்து, தமையன் அதிக வெறுப்புக் காட்டும் சமயம்பார்த்து அவனிடம் தன் எண்ணத்தைத் தெரிவிக்க, அவன் இதுதான் சமயம் என்று, அவளைச் சென்னைக்கு அழைத்துப்போனான். அழைத்துப் போகையில்தான் அவனுடைய சகோதர வாத்ஸல்யம் வெளிப்படையாயிற்று. என்ன கஷ்டமோ நஷ்டமோ, அவளைத்தன்னிடமே வைத்துகொள்வதென்று எண்ணி, அவளை ஊருக்குத் திரும்பச் சொன்னான். என்ன மன்றாடிக் கேட்டும் அவள் ஸம்மதிக்கவில்லை. ஒரே பிடிவாதமாகச் சென்னைக்குப் போகவேண்டுமென்றாள். அப்படியே சென்னைக்குப் போய் ஒரு ஆஸ்பத்திரியில் தாதி வேலையில் அமர்ந்து பழகலானாள்.

## III

வாலிபனுக்கு மயக்கம் தெளிந்தது. கண்ணை விழித்துப் பார்த்தான். நாகலக்ஷ்மி கையில் மருந்துடன் அருகில் நின்றிருந்தாள்.

"நீ யாரம்மா! நான் இப்போது எங்கிருக்கிறேன்? ஏன் இங்கு வந்தேன்? ஓஹோ! வண்டிமேலேறினதல்லவா? ஆம், நோய் அதிகமாக இருக்கிறது! இதென்ன ஆஸ்பத்திரியா?"

"அதிகமாகப் பேசினால் உடம்புக்காகாது. இந்த மருந்தைச்சாப்பிடும். மறுபடியும் தூங்கும்."

வாலிபன் நாகலக்ஷ்மியை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு கண்ணை மூடிச் சற்று சிந்தையிலிருந்தான். பிறகு கண்ணைத் திறந்து மருந்தைக் குடித்தான்.

நாகலக்ஷ்மி சீதாபுரத்து ஆஸ்பத்திரியில் தலைமைத் தாதியாக அமர்ந்திருந்தாள். அவள் ஸ்வல்ப வயதினளாயினும் பலராலும் கௌரவிக்கப்பட்டும் மெச்சப்பட்டும் வந்தாள். அவள் தந்தை இறந்துபோய் சில வர்ஷங்களாகின்றன. அவளுடைய தமையனும் இறந்து போய்விட்டான். தனது சம்பளத்தில் ஒரு பாகத்தை தன் தம்பி, தமையன் குடும்பம், இவர்களுடைய ஸம்ரக்ஷணத்துக்காக அனுப்பிவந்தாள்.

அவள் சீதாபுரம் வந்து சுமார் ஒரு வருஷமாகிறது. அவள் ஸ்வல்ப வாடகையில் தனி வீட்டில் குடியிருந்து வந்தாள். யௌவன வயதுள்ள பெண்ணுக்குப் பலவித அசௌகர்யங்கள் ஏற்படக் கூடும். ஆனால் நாகலக்ஷ்மிக்கோ, அவளுடைய நற்குண நற்செய்கைகளால், யாதொரு தொந்தரையும் ஏற்படவில்லை. அவளைப்போல் உத்தம சீலை எங்கும் இராள் என்று சீதாபுரம் முழுவதும் சொல்லும்.

நாகலக்ஷ்மி பிறர் முன்னிலையில் யாதொரு சிந்தனையுமில்லாதவள் போலிருந்தாலும், தனிமையில் அவள் சதா துக்கித்த வண்ணமாக இருப்பாள். தன் புருஷனுடைய செய்தி யாதொன்றும் தெரியாமல், தான் அமங்கலியென்றாவது ஸுமங்கலியென்றாவது ஏற்படாமல், தனியாகத் தவித்துக் கொண்டிருக்க நேரிட்டதைப் பற்றி எப்போதும் சிந்தித்துருகுவாள். புருஷன் தன்னூர் வந்து போய் ஏழு வருஷங்களுக்கு மேலாகியும்

அவளுக்கு தான் அமங்கலை என்ற எண்ணம் கொஞ்சமும் உண்டாகவில்லை. இன்னும் தன் புருஷன் வருவானென்றே எண்ணியிருந்தாள்.

மறுநாள் காலையில் காயம்பட்ட வாலிபனுக்கு சிகித்ஸை செய்யப் புறப்பட்டுப் போனாள். வாலிபன் தனது படுக்கையில் உட்கார்ந்திருந்தான். அவளைப் பார்த்ததும் அவனது முகம் பிரகாசம் அடைந்தது. அவள் சொன்னபடியெல்லாம் நடந்து வந்தான். காயம் என்ன நோவெடுத்தாலும் கொஞ்சமும் பாராட்டாமல், அவளுடைய இனிமையான வார்த்தைகளால் நோவு ஒழிந்தவன்போல் இருந்து வந்தான். நாகலக்ஷ்மி முதலில் வாலிபனைப் பார்த்தபோது அவனைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொள்ளவில்லை. ஆனால் இரண்டொரு நாள்களுக்குப் பிறகு அவன் தன்னை அதிகம் கவனிப்பதாக அவளுக்குத் தோன்றிற்று. அவ்விதம் அவன் தன்னை அதிகம் கவனிப்பது அவளுக்கு விருப்பமில்லை. அவள் இதுகாறும் யாதொரு அபவாதத்துக்கும் உள்ளாகாமல் இருந்தவள். தன்னை எவரும் கெட்ட எண்ணத்துடன் பார்க்கக் கூடு மென்றுகூட எண்ணினவளல்லள். சதா தன் நிலைமையைப்பற்றின எண்ணமே மேலிட்டிருந்ததால், வேறு எண்ணம் எதுவும் அவள் மனதில் புகுந்ததில்லை. இப்போதோ அவளையறியாமலேயே இந்த எண்ணம் அவள் மனதில் உண்டாயிற்று. "ச்சே, நாம் என் அவரைப்பற்றி தப்பபிப்பிராயம் கொள்ளவேண்டும். நோயாளியாயிருக்கும் அவர்மேல் நாம் ஏன் பழி சுமர்த்தவேண்டும். அவர் யோக்கியராகவே இருப்பார். அவர் நம்மை அடிக்கடி பார்ப்பதைக் கொண்டு அவர்மேல் குறை கூறுவது நல்லதல்ல. எப்படியிருந்தாலென்ன. இன்னம் சில நாளில் அவர் ஆஸ்பத்திரியை விட்டுப் போய்விடுவார். அப்புறம் இதைப்பற்றிக் கவலையேயிராது." என்று எண்ணி மனந்தேறுவாள்.

வீட்டுக்குப் போனால் புருஷன் ஞாபகம் வந்து விடும். அப்புறம் வாலிபனுடைய சிந்தனையே யிராது. ஆஸ்பத்திரிக்கு வந்தால் தான் இந்த சிந்தனை உண்டாகும்.

வாலிபன் ஆஸ்பத்திரிக்கு வந்த ஐந்தாம் நாள், அவன் சற்று குணமடைந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். நாகலக்ஷ்மி

அவன் காயங்களைத் துடைத்து மருந்து போட வந்தாள். வந்த தும் வாலிபன், "உங்களை ஒரு கேள்விகேட்கப் பிரியப்படு கிறேன். பதில் சொல்லலாமா?" என்று கேட்டான்.

நாகலக்ஷ்மி ஒன்றும் சொல்லாமல், கேள்வி என்னவென்று அறிய விரும்புவாள்போல் நின்று கொண்டிருந்தாள்.

"உங்களை எங்கேயோ பார்த்ததுபோலிருக்கிறது. எந்த ஊர், யார் என்பதைச் சொல்லவேண்டும்."

நாகலக்ஷ்மிக்கு இவ்விஷயங்களை யாராவது கேட்டால் பிடிப் பதில்லை. பதில் சொல்லாமல் வேறு பேச்சுப் பேசி மறைத்து விடுவது வழக்கம். பிறர் அதை அறியமுடியாதபடி அவள் மறைத்து வைத்திருக்கிருள் என்பதல்ல. தனது குடும்பவிஷயங்கள் பிறர் நகைக்க ஹேதுவாயிருப்பதாலும், அதைச்சொல்லுவதால் தன் னைப்பற்றிப் பிறர் தாழ்வாக நினைக்கக் கூடுமோதலாலும், அவள் ஒன்றும் சொல்லுவதில்லை. ஆனால் அவளுடைய பூர்வ விருத் தாந்தத்தைப்பற்றி எவரும் கொஞ்சமாவது அறியாதவரல்லர். தானாக ஒன்றும் சொல்லவேண்டாமென்பது அவள் கருத்து.

மேலும் அவள் அந்த வாலிபனைப்பற்றி ஏற்கனவே சற்று தப்பபிப்பிராயம் கொண்டிருந்ததால், அவன் தன்னைப்பற்றிக் கேட்பது தகாதென்று எண்ணி, அதற்கு பதில் சொல்ல இஷ்டப்படாமல், "ராத்திரி நோவில்லையே. நன்றாய்த் தூங் கினீரா?" என்று கேட்டாள்.

"நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் வேறு பேச்சுப்பேசுவதைப்பார்த்தால், நான் கேட்டது உமக்குதிருப்தி யில்லையென்று தோன்றுகிறது"—சற்று அவள் முகத்தை மறுபடி எறிட்டுப்பார்த்து விட்டு—"நான் கேட்டது பிசகானால் இனி நான் கேட்கவில்லை," என்று சொல்லிக்கொண்டே வேறுபக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டு துக்கத்துடன் கண்ணீர்விடலானான்.

நாகலக்ஷ்மி முதலில் இதை கவனிக்கவில்லை. மறுபடியும் வாலிபன் திரும்பும்போது, அவன் முகம் துக்கமாயிருப்பதையும் கண்ணீர் விட்டிருப்பதையும் கண்டு, அவனிடத்தில் அனுதாபம் கொள்ளலானாள். மற்ற வம்புக்காரர்கள் போலின்றி, அவன் நல்ல ஸ்வபாவம் உள்ளவனென்று எண்ணினாள். அதனால்

அவனுக்கு பதில் சொல்லுவது தகுமென்று தீர்மானித்தான்.

"நான் எந்த ஊர் என்று சொல்லுமுன், உமது ஊர் பெயர் சொன்னால் நான் சொல்லலாம்."

"நானா? எனக்கு ஊரும் பேரும் இருந்தும் இல்லாதவனாக இருக்கிறேன். எல்லாவற்றையும் துறந்தவனாக இருந்து வருகிறேன்"

நாகலக்ஷ்மி தான் செய்துவந்த சில்லறை வேலையை விட்டு விட்டு அவன் சொல்லுவதை கவனித்துவந்தாள்.

"துறவிபோல் காணப்படவில்லையே. இன்னும் உலக வாழ்க்கையில் பற்றுள்ளவராகவல்லவோ காணப்படுகிறீர்."

"இன்னும் துறவியாகவில்லை. ஆவதற்கும் இஷ்டப்பட வில்லை. என் சரித்திரத்தைக் கேட்டால் ஆச்சரியமாயிருக்கும். எல்லாவற்றையும் விடவேண்டியவனாயிருக்க, ஒன்றுமாத்திரம் இன்னும் விடாமல் உலகப்பற்றுள்ளவனாக இருக்கிறேன். அது கிடைக்குமானால், நான் எண்ணினபடி காரியங்கள் நடைபெறுமானால், துறவி வேஷம் போடுவதாக உத்தேசமில்லை. ஆனால் என் அபிப்பிராயத்துக்கு மாறுபாடாக விஷயங்கள்நடைபெறுமானால்,எனக்கு உலகத்தில் ஆகவேண்டியது ஒன்றுமேயில்லை"

"நீர் சொல்வது ஒன்றுமே விளங்கவில்லையே."

"சற்று விளக்கச் சொல்லுகிறேன். அதைக் கேட்ட பிறகு, என் விஷயமாக சில தகவல்கள் உமக்குத்தெரிந்தால் சொல்லும். நீர் இந்தப்பக்கமானதால், அவைகள் உமக்குத் தெரிந்திருக்கலாம். அல்லது விசாரித்தாவது சொல்லலாம். நானாக விசாரிக்க இஷ்டமில்லை.

"நான் பம்பாயிலிருந்து வருகிறேன். நான் இந்தப் பக்கங்களைவிட்டு பம்பாய்போய் சுமார் எழுவருஷமாகிறது. என் தகப்பனாருக்கு என்மேல் பிரியமில்லாமல் என்னை அலக்ஷியம் செய்து, தமது இளையாள் பேச்சைக் கேட்டுக்கொண்டு என் படிப்புக்குப் பணம் கொடுக்காமல் என்னைக் கெடுக்கப் பார்த்தார். அதன்மேல் நான் என் படிப்பை நிறுத்த இஷ்டப்படாமல், பம்பாய்போய் படித்துத்தேறி இங்கு உத்தியோகம் பார்க்க வந்தேன். வந்த விடத்தில் என்மேல் வண்டியேறிற்று. இது விஷயம் உமக்குத் தெரியும்."

வாலிபன் சற்று பேச்சை நிறுத்தி மறுபடி யோசிக்கலாஞன். பிறகு—

"இவ்விதம் ஒருவாலிபன் தகப்பஞருடன் சண்டையிட்டுக் கொண்டு தூரதேசம் போனதாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டோ ?

"எத்தனையோ பிள்ளைகள் அப்படிப் போயிருக்கிருர்கள். இன்னும் ஏதாவது விவரம் சொன்ஞல்—"

"மாமஞர் வீட்டிலும் எனக்கு மனஸ்தாபம் நேர்ந்தது. அதஞல் அங்கேயும் கோபித்துக் கொண்டுபோனேன்."

"அங்கேன் கோபித்துக்கொண்டீர்?"

"கொஞ்சம் பணம் கேட்டேன். கொடுக்கவில்லை. அதோடு அவர்கள் அவமானமாக நடத்திஞர்கள். அதஞல் அவர்கள் முகத்தில் விழிக்க இஷ்டப்படாமல் தூரதேசம் போய்விட்டேன்"

நாகலக்ஷ்மிக்கு அவன் சொல்லியவிஷயம் ஆச்சர்யமாகப் பட்டது. தன்புருஷன் தானே அவன் என்று சந்தேகப்பட்டாள். அதை நன்ருய் அறிய எண்ணி, "போனதைப்பற்றி துக்கிப்பதில் பயனென்ன?" என்று கேட்டாள்.

"இல்லை, அக்காலத்தில் நான் சிறு பையஞக இருந்ததால், கோபம் மேலாடி அவ்விதம் செய்தேன். கோபம் பொல்லாதது அல்லவா? யார்மேல் கோபம் கொள்ளக்கூடாதோ அவர்மேல் கோபம் கொண்டேன்"

"இன்னும் சற்று விவரமாகப்பேசும்."

"ஒன்றும் அறியாத இளவயதான என் மனைவியை அலக்ஷ்யம் செய்து வந்தது பிசகென்று இப்பொழுது தோன்றுகிறது. அவள் என்ன கதியாஞளோ? எப்படியிருக்கிருளோ? ஒன்றும் தெரிய வில்லை."

"அதற்கென்ன ஊர்போய் விசாரித்தால் தெரிகிறது."

"இல்லை, நான் ஒரு ரெயில்விபத்தில் அகப்பட்டு இறந்து போனதாக ஊரில் வதந்தி ஏற்பட்டுவிட்டதாகப் பின்ஞல் தெரிந்தது. அதஞல்தான் அந்தப் பெண் என்னகதியாஞளோ என்று வருத்தப்படுகிறேன்."

"இத்தனைகாலமாக ஒன்றும் அறியாத ஒரு பெண்ணை துக்கத்துக்கு ஆளாக்கலாமா ?"

"ஆமாம், அது பிசகுதான். அதனால்தான் எனக்கு வருத்தமதிகம். இன்னம் சில நாளில் உடம்பு குண மடைந்தவுடன் போய் விசாரிக்க வேண்டும். இதுவிஷயமாக உமக்கு ஏதாவது தெரியுமா? தெரிந்தால் சொல்லும். அதோடு உம்மை எங்கேயோ பார்த்தாற்போ லிருக்கிறது. இஷ்டமிருந் தால், நீர்யார்என்று சொல்லும். இல்லாவிட்டால் ஒன்றும்சொல்ல வேண்டாம். எனக்கு அவளைத் தவிர மற்றவர்களைப் பற் றித் தெரிந்ததாக வேண்டியது ஒன்றுமில்லை."

"என்ன, அவளிடத்தில் அவ்வளவு அபிமானம்! அதற் காகத்தான் நீர் எழுவருஷகாலமாக அவளைப்பற்றிய நினைவேயில் லாமலிருந்தீரோ?"

"நீர் என்ன என்னை அவமானப்படுத்த அபிப்பிராயமோ?"

"அப்படி ஒன்றுமில்லை. அவள் அப்பொழுது அறியாப் பெண்ணாயிருந்தாலும், அவள் என்னிடத்தில் அதிகப்பிரிய முள்ளவளாயிருந்தாள்—" இப்படிச் சொல்லிக் கொண்டே வேறுபக்கந்திரும்பிக் கண்ணீர் விட்டாள்.

நாகலக்ஷ்மிக்கு வந்திருக்கும் வாலிபன் தன் புருஷன் என்று தெரிந்தாலும் அவன் மனதை இன்னும் சோதிக்க எண்ணி

"நீர் யார் என்பதும், உமது மனைவி யார் என்பதும் என குத்தெரியும். உம்மிடம் அன்பு கொண்ட அந்தப்பெண் இத் தனை காலம் எப்படி உயிருடன் இருக்கக்கூடும். துக்கத்தால் உயிரைவிட்டிருப்பாள் அல்லவா? அவளை எனக்கு நன்றாகத் தெரியும். அவள் போகும்போது என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிப்போனாள். நீர் இறந்துபோனதாகவே எல்லாரும் சொல்லிவந்தாலும் அவள் மாத்ரம் நீர் இறந்து போகவில்லை யென்று எண்ணி யிருந்தாள். ஆயினும், அதிக நாளாகவே, நீர் இறந்து போனதாகவே எண்ணி, துக்கத்தால் உடல் மெலிந்து வியாதிக்களாகி இறந்து போனாள். போகும் முன்—"

வாலிபன் துக்கம் மேலாடி "ஐயோ" என்று மெதுவாய்க் கூச்சலிட்டு தாரைதாரையாகக் கண்ணீர்விட்டான் படுக்கையை விட்டு எழுந்தான். அங்குமிங்கும் உலாவினான். "ஐயோ என்செல்வமே, நீ போய்விட்டாயா? உன்னை நம்பியல்லவோ நான் இத்தனை தூரம் வந்தேன். கல்யாணதினமுதல் நீ என்னி

டம் அன்புபாராட்டி வந்தாயே—அவள் போனது வாஸ்தவந் தானே? எனது வாழ்வு கெட்டுப்போனது வஸ்தவந்தானே? உலகத்தில் உற்றார் உறவினர் இல்லாத எனக்கு நீ ஒருத்தி இருப்பாயென்றல்லவோ நான் இங்கே வந்தேன். நீ போன பிறகு எனக்காக வேண்டியது இங்கு என்ன இருக்கிறது. நான் இருந்தும் இல்லாததுமொன்றுதானே. வண்டியில் அகப்பட்ட போதே இறந்து போயிருக்கக்கூடாதா. இப்போதுதான் என்ன—” நாகலக்ஷ்மியைப் பார்த்து—“நீ இனி போகலாம். எனக்கு உபகாரம் செய்ய விருப்பமிருக்குமானால் நான் சீக்கிரம் இறந்து போகும்படியாக ஏதாவது மருந்து கொடு. இல்லாவிட்டால் காயம் சட்டுவதில் புரையோடும்படியாக ஏதாவது ஒன்று செய் அல்லது ஒன்றும் செய்யாமலாவது இரு.” என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் படுத்துப் புரண்டுதுக்கப்பட்டான். கண்ணீர் உதிர்த்து விம்மிவிம்மியழுதான்.

இதைக் கண்ட நாகலக்ஷ்மி மனந் தாளாமல் அவன்முகத்தை உற்றுப்பார்த்தாள். அவனது தாமரைமுகம் போன்ற முகத்தில் நெற்றியில் திலகம்போல் விளங்கும் மச்சத்தையும் இன்னும் சில அடையாளங்களையும் கொண்டு தன் கணவன்தான் என்று நிச்சயங்கொண்டு அவனருகில்போய், “நாதா, என்னை இன்னும் தெரியவில்லையா? நான் நேரில் இருக்கும்போது கூடவா துக்கப்படவேண்டும்?” என்று சொன்னாள். இதைக் கேட்டதும், வாலிபன் உடனே நிமிர்ந்து பார்த்தான். நாகலக்ஷ்மியை உற்றுப்பார்த்தான். நாகலக்ஷ்மி புன்சிரிப்புடன், “என்னை இன்னும் அடையாளந்தெரியவில்லையா? ஊர்வலத்தில் மெதுவாய் நடந்துவா என்றீர்களே, அதை மறந்துவிட்டீர்களா? கண் பார்க்க லக்ஷணமா யிருக்கிறதென்றீர்களே, அதை மறந்துவிட்டீர்களா?” என்றாள். வாலிபன் உடனே எழுந்து உட்கார்ந்து அவளை அழைப்பதுபோல் இரண்டு கையையும் நீட்டினான். நாகலக்ஷ்மி அருகில் வந்து உட்கார வாலிபன் ஆவேசங்கொண்டவன் போல் அவளைக் கட்டி யணைத்து “நாகலக்ஷ்மி, என்னை வாழவைத்த கண்மணி, உனக்கு எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தேனே. சிறு பையனாயிருந்தபோது தெரியாமல் சொல்லிக் கொள்ளாமல் போனதில் உனக்கு எவ்வளவு

கஷ்டம் நேர்ந்ததோ. எதுவானாலும் மன்னித்துக்கொள். போனது போகிறது. உன்னைக்கண்டேனே. அதுதான் அதிருஷ்டம். நான் போனபிறகு என்ன நடந்தது? சந்திரசேகரன் போய்விட்டானென்றே எண்ணியிருக்கிறார்களோ? என் தகப்பனாரும் தலைமுழுகிவிட்டாரா! நீ ஒருத்திதான் நம்பிக்கையோடிருந்தாயா? நீ ஏன் இங்கிருக்கிறாய்? உன் தாயார் தகப்பனார் உன்னை கவனிக்கவில்லையா—"

"நாதா, உடம்பு அதிர்ச்சி கொள்ளப்போகிறது, போதும், அப்புறம் பேசிக்கொள்வோம். ந்டந்தவைகளைப்பற்றி யென்ன? இப்போது நாம் ஸௌக்யமாயிருக்கிறோம். அதை விட்டுவிட்டு மற்றவர்களைப்பற்றி யென்ன? உடம்பு குணமாகும் வரையில் பொறுமையாக, அதிகமாக உடம்புக்கு அதிர்ச்சி கொடுக்காமல், படுத்துக்கொண்டிருங்கள். இன்னும் இரண்டு மூன்று நாளில் எழுந்துவிடலாம். அப்புறம் எல்லாவற்றையும் பேசிக்கொள்ளலாம். என் சொல்படி கேளுங்கள். அதற்காக இந்தாருங்கள்!" அவள் சந்திரசேகரனை யணைத்து முத்தமிட்டாள்.

# தரும சங்கடம்

---

## I

"உடம்பு சரிப்படவில்லை யென்று கடிதம் வந்திருக்கிறதே. நான் போய் பார்த்துவிட்டு வரட்டுமா? கடிதம் வந்து நாலுநாளாகிறது. ஒரு பதிலும் போடவில்லையே. நான் போடவும் கூடாதென்று சொல்லுகிறீர்கள்."

"கடிதம் என்னபோட இருக்கிறது? அவளைப்பற்றி நமக்கென்ன கவலை?"

"என்டா, அதைத்தான் தொலைத்துத் தலைமுழுகி யாகிவிட்டதே. அதைப்பற்றி என்ன ஸதா ஞாபகம்? கூடாது என்றுதானே பிறந்தகத்திற்கு அவளை அனுப்பினது. பிறகு அவள் எப்படி யானுலென்ன?"

கடைசியில் பேசினவள் தூர்ஜ்ஜடி. முதலில் பேசின சாந்தசீலனுடைய தாயார். அவனுடைய மனைவிக்கு உடம்பு சரியாகவில்லை யென்று பிறந்தகத்திலிருந்து கடிதம் வந்தது. அவனுடைய தகப்பனுர் வீரபத்ரர் கடிதத்தை முதலில் தன் புத்ரனிடம் காட்டவேயில்லை. மறுநாள் தற்செயலாக சாந்தசீலன் அதைப்பார்த்து, இரண்டு நாளாகத் தன் தாயிடம் மாமனுர் ஊர்போக உத்தரவு கேட்டுக்கொண்டிருந்தான். இருவரும் கோபதாபங்களின் இருப்பிடம். பிறர் வாழச் சகியார்கள். எவரும் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். சாந்தசீலனுடைய மாமனுர் கல்யாண காலத்தில் செய்யவேண்டிய சீர்வரிசைகளை சரிவர செய்யவில்லை யென்றும், வரதக்ஷிணை அதிகம் கொடுக்கவில்லை யென்றும் அவர்களுக்குக் கோபம்,

தூர்ஜஜடிக்கு இவற்ருேடு வேறுகோபமும் உண்டு. சாந்தசீலனுடைய மனைவி ஹிரண்மயி கபடு சூது அறியாத இளம்பெண்.

கல்யாண தினம்முதலே சாந்தசீலனிடம் பிரியங்கொண்டவள். அதனால் அவள் சாந்தசீலனை எப்போதும் ஸந்தோஷப்படுத்தி அவனுடைய பிரியத்தையும் ஆதரவையும் ஸம்பாதித்து வந்தாள். சாந்தசீலனும் அவ்விதமே ஹிரண்மயினிடம் அதிக அன்பாயிருந்து வந்தான். இருவரும் இப்படி அன்யோன்யமாயிருப்பது பழைய நாளைய ஸம்பிரதாயம் கொண்ட தூர்ஜ்ஜடிக்குப்பிடிக்கவில்லை. தான் மூன்று குழந்தை பெறும்வரையில் தன் புருஷனிடம் பேசினதே கிடையாதென்று தூர்ஜ்ஜடி பெருமையபாராட்டிக்கொள்வாள். ருதுவாவதற்குமுன்னால் ஒரு பெண் புருஷனுடன் பேசி தன் சுக துக்கங்களைச் சொல்லிக்கொள்வது அவளுக்குப்பிடிக்குமா? பெண் புக்ககத்துக்கு வந்தவுடனேயே தூர்ஜ்ஜடி எடுத்ததற்கெல்லாம் குறை சொல்ல ஆரம்பித்தாள். என்ன தான் ஜாக்கிரதையாக இருந்தாலும் ஹிரண்மயி மாமியாரிடம் வசைமொழி கேட்காமலிருப்பதில்லை. கிழக்கே நின்றாள், மேற்கே நின்றாள், பின்னலைத் தொங்கவிட்டுக் கொண்டாள், சமையலைக் கெடுத்து விட்டாள், சொன்னவுடன் செய்யவில்லை. என்றிப்படிப் பலவிதத்தில், தப்பில்லாமலிருக்கும் போது கூட தூர்ஜ்ஜடி அவளைக்குறைகூறித் திட்டிவந்தாள். மாமனாராகிய வீரபத்திரய்யரும் தமது மனைவிக்குப் பக்கபலமாக இருந்தார். கடைசியில் ஹிரண்மயியைப் பிறந்தகம் அனுப்பி விட்டார்கள்.

சாந்தசீலன் உண்மையில் சாந்தசீலனே. தனது பிரியத்துக்குப் பாத்ரையான மனைவியைப் பிறந்தகம் அனுப்பும்போது கூட அவன் ஒன்றும் சொல்லாமலிருந்தான். தன்பெற்றோர் வார்த்தைக்குக் குறுக்குச்சொல்லக்கூடாதென்பது அவனுடைய சித்தாந்தம். என்ன நேர்ந்தாலும் அவர்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாக நடப்பதில்லை யென்று தீர்மானித்திருந்தான். தன்னை அருமையாக வளர்த்து படிப்புச் சொல்லிவைத்து, ஆளாக்கிவிட்ட தாய் தந்தையரை, இன்றுவந்த ஒரு பெண்ணின் மேலுள்ள ஒரு காதலால், அல்லது ஒரு மயக்கத்தால், அலக்ஷியம் செய்வது கூடாதென்பது அவன் கருத்து. ஆனால் தன் மனைவியிடத்தில் கொஞ்சமாவது பிரியம் குறைந்தவனல்ல. அவளிடம் உண்மையில் யாதொரு குற்றமுமில்லை யென்பது

அவனுக்குத்தெரியும். அனுவசியமாக, ஏதோ வேறு சாக்கு வைத்துக்கொண்டு, அவளைத் தன் பெற்றோர்கள் ஹிம்ஸித்தார்கள் என்பதும் அவனுக்குத்தெரியும். கொஞ்ச காலத்துக்குப் பிறகு எல்லாம் சரியாகிவிடுமென்று எண்ணியிருந்தான்.

தன் மனைவி உடம்பு அசௌகரியமாயிருப்பதாக கடிதம் வந்ததைப் பார்த்ததும், உடனே அவளைப்போய்ப்பார்க்க வேண்டுமென்று எண்ணினான். நாலைந்து மாதமாக அவளைவிட்டுப் பிரிந்திருந்தது, நாலைந்து வர்ஷங்களாக இருந்தன. அதற்காக, தான் எப்போது போவதாயிருந்தாலும் ரஜா கொடுக்கும்படியாக தனது ஆபீஸில் எற்பாடு செய்திருந்தான்.

ஆனால் அவனது தாய் தந்தையர் ஒரே பிடிவாதமாக இருந்து விட்டார்கள். தர்மத்தைப்பற்றிய தனது அபிப்பிராயத்தின்படி, தான் சும்மாயிருக்கவேண்டியது தான் என்று எண்ணி, தன் பெற்றோர்கள் மறுதளிக்கவே, வேட்டகம் போவதை நிறுத்திவிட்டான்.

II

இரண்டு மாஸங்களாயின. சாந்தசீலன் ஆபீஸ் வேலையாக கிருஷ்ணாபுரம் போய், அங்கு ஒரு வாரம் தங்கவேண்டி யிருந்தது. அதற்கும் தன் மாமனார் ஊருக்கும் ஒரு மைல் தூரம் உண்டு. கிருஷ்ணா புரத்தில் சாப்பாட்டுக்குத் தக்க சௌகரியமில்லை. சாந்தசீலன் வைதீகப்பற்று அதிகம் உள்ளவன். அதிக ஆசாரம் கொண்டாடுவான். அனாசாரமான ஹோட்டலில் சாப்பிட்டுப் பழக்கமில்லை. அதனால் அருகிலுள்ள தன் மாமனார் ஊருக்குப் போய்த் தங்கி, அங்கிருந்து தினம் கிருஷ்ணாபுரம் போய் வேலை பார்த்து வந்தான். மாப்பிள்ளை கூட பொல்லாதவன் என்று எண்ணியிருந்த அவனது மாமனார் மாமியார் அவன் வரவைக் கண்டு ஸந்தோஷம்கொண்டு, அவனுக்கு ராஜோபசாரம் செய்து உபசரித்தார்கள். ஹிரண்மயியும் தன் புருஷன் தன்பக்கம் பேசாமல், தன்னை பிறந்தகம் அனுப்பும்போது சும்மாயிருந்து விட்டதைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந்ததால், இப்போதாவது அவர் மனம் திரும்பி இங்கு வந்தாரே யென்று ஸந்தோ

ஷங்கொண்டு, அவளிடம் எப்போதும்போல குதூகலமாயிருந்தாள்.

சாந்தசிலன் ஹிரண்மயியை ஊருக்கு அழைத்துக்கொண்டு போக எண்ணினான். அது தன் பெற்றோர்களுக்கு விருப்பமாயிராதென்று தெரிந்திருந்தும், ஒருகால் அவர்களுடைய மனம் மாறாதா என்று யோசித்தான். ஒரு சமயம் அவர்களைக் கேட்காமல் செய்வது தவறு என்று எண்ணினான். இன்னது செய்வதென்று தோன்றாமல் கடைசியாக அழைத்துக் கொண்டுபோவோம்; அவர்கள் இஷ்டப் படாவிட்டால், திருப்பி ஊருக்கு அனுப்பிவிடுவோம் என்று எண்ணி, தன் மாமனாருடன் சொல்லி, தன் ஆபீஸ்வேலை முடிந்து ஊருக்குப் போகையில், ஹிரண்மயியைக் கூட்டிக் கொண்டு போனான்.

வீடுபோனதும் தன் தாய் தந்தையர் செய்த ஆசீர்வாதத்துக்கு அளவு இல்லை. முதலில் மாமனார் ஊர் போனதே தப்பு; அங்கு அத்தனைநாள் தங்கி யிருந்தது பெரும் பிசகு; ஹிரண்மயியைக் கூட்டிக் கொண்டுவந்தது மன்னிக்க முடியாத தப்பு. ஆனால் இவ்விஷயம் வசை மொழியுடன் அப்போது முடிந்தது. என்னகாரணமோ, ஹிரண்மயியை பிறந்தகம் அனுப்ப வீரபத்திரய்யராவது, தூர்ஜ்ஜடியம்மாளாவது நினைக்கவேயில்லை. அந்த மட்டில் பிழைத்ததாக ஹிரண்மயி நினைத்து ஸந்தோஷப்பட்டாள். சாந்தசீலனும் தன் மனைவியை அழைத்துவந்தது சௌகரியமாய்ப் போயிற்றென்று எண்ணினான். ஆனால், முன்போல வீரபத்திரரும் தூர்ஜ்ஜடியும் ஹிரண்மயியை தூறாமலிருக்கவில்லை. பழையபடியே அவளை நடத்தி வந்தார்கள்.

இப்படி இரண்டு மாஸமாயிற்று. சாந்தசிலனுக்கு சிறிது காய்ச்சல் வந்தது. சாமான்யமாக இருந்து சீக்கிரம் போய்விடும் என்று எண்ணிக் கொல்லையிலிருந்த புல் பூண்டுகளையெல்லாம் பிடுங்கிக் கஷாயம் போட்டார்கள். அது தேகத்தைக் கெடுத்து விட்டது. பணச் செலவில்லாத வைத்யம், அதிலும், ஸுலபமாகக் கிடைக்கக்கூடிய தழை வேர் இதை எது நல்லதென்று, யார்சொன்னபோதிலும், சிரமம்பாராட்டாமல் தாய் தந்தையர்கள் கஷாயமோ, கல்கமோ தயார் செய்து கொடுத்து வந்தார்கள்.

பெரிய வைத்தியர்களையும் யோசனை கேட்பதுண்டு. யோசனை யோடு சரி. இனாமாகக் கிடைக்கும் ஆஸ்பத்திரி மருந்தைத் தவிர தக்க வைத்யர்கள் சொல்லும் வேறு மருந்து எதுவும் கொடுப்பதில்லை. இப்படி இருக்க, குடும்பங்களில் கலகம் மூட்டி, தாயாருக்கும் பிள்ளைக்கும்—தகப்பனுக்கும் பிள்ளைக் கும், புருஷனுக்கும் பெண்சாதிக்கும், அண்ணனுக்கும் தம் பிக்கும்—ஆக வெட்டாமல் செய்வதில் தேர்ச்சிபெற்ற ஒரு கிழ விதவை வந்து சேர்ந்தாள். ஹிரண்மயியின் குணங்களைப் பற்றி தூர்ஜ்ஜடியிடம் அவள் ஏற்கனவே கேட்டிருக்கிறாள். அவளுடைய பெண்ணும் தூர்ஜ ஜடியினு டைய பெண்ணும் புக்ககத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டு தங்கள் புருஷர்களிடம் தினம் அடியும் உதையும் பட்டுக்கொண் டிருக்க, ஹிரண்மயி மாத்திரம் புருஷனுடன் இன்பமாகக் காலங் கழிப்பது அந்த விதவைக்குப்பிடிக்கவில்லை. ஏன் ஒரு ஸ்திரீ மாத்ரம் புருஷனை வசப்படுத்த முடிகிறது, வேறு ஸ்திரீக்கு முடிவதில்லை? வசியப்படுத்த ஏதாவது உபாயம் தெரிந்திருக்க வேண்டுமென்று, பலவித உபாயமும் செய்தும், தன் பெண்ணா வது தூர்ஜ்ஜடியின் பெண்ணாவது புருஷனை வசப்படுத்த முடிய வில்லை. ஹிரண்மயி சாந்தசீலனை வசப்படுத்தினதற்குக் கார ணம் அவள் அவனுக்கு மருந்திட்டிருக்கவேண்டும் என்பது அந்த விதவையின் சித்தாந்தம். ஆகவே, சாந்தசீலனுக்கு புல் பூண்டின் பிரயோகத்தால் வியாதி குணமாகாமல், நாளுக்குநாள் அதிகரிக்கவே, விதவையின் சித்தாந்தம் ஸ்திரப்படுத்தப்பட்டது. ஹிரண்மயி பிறந்தகம்போனாள். விதவையும் மற்றவர்களும் வயிற்றிலுள்ள மருந்தை எடுக்க ஊரிலுள்ள பச்சிலைகளை ஒன்று விடாமல் பரீக்ஷிக்கலானார்கள். மருந்தெடுக்கும் வைத்யத்தில் தேர்ச்சியுண்டென்று பிரவித்திப்பெற்ற வைத்தியர்களை மாத் ரம் வரவழைக்கவில்லை. இருபது முப்பது கொடுத்தாலும், அவ னும் பச்சிலை தானே கொடுப்பான் என்பது அவர்களபிப்பிராயம்.

## III

ஹிரண்மயி பிறந்தகம் போய் இரண்டு மாஸமாயிற்று. சாந்தசிலன் நாளுக்கு நாள் உடம்பு மெலிந்து வந்தான். ஆகாரம் குறைந்து போயிற்று. அதிகமாக எழுந்து நடமாட முடியவில்லை. மருந்து என்ற பேர்கொண்டு கொடுத்துவந்த இலைகளால் அவன் நாக்கு மறத்துப்போய் எதைக் கண்டாலும் தின்னப் பிடிக்கவில்லை. அவன் தகப்பனர் பையனுடைய தேகஸ்திதியைக் கண்டு கொஞ்சமும் கவலைப் படவில்லை. அதைப்பற்றி யாராவது பேசினல், "அதற்கென்ன செய்கிறது. அது அவனே செய்து கொண்டது, சொன்ன பேச்சு கேட்காமல், வேட்டகம் போனன், பலமாக மருந்து வைத்து விட்டார்கள். என்ன வைத்யம் செய்தாலும் குணப்படவில்லை. அவன் செய்ததற்குப் பலன் அவனே அனுபவிக்கிறன்" என்று ஸமாதானம் சொல்லி விடுவார். தக்க வைத்தியர்களை அழைத்து வந்து வைத்தியம் பார்க்கும்படி யாராவது சொன்னல் "எல்லாரும் என்ன கொடுக்கப் போகிறர்கள். ஏதாவது மூலிகையை அரைத்து விழுங்கு என்பார்கள். எல்லா வைத்தியமும் செய்து பார்த்தாயிற்று. ஒன்றிலும் பலிக்கவில்லை. அவன் தலையிலெழுத்து அது. எங்களுக்கு அவ்வளவுதான் கொடுத்து வைத்தது. அவர்கள் அவனுக்கு மிருத்யுவாக வந்து சேர்ந்தார்கள்." என்பார். இனமாக ஒருவர் வைத்தியம் செய்வதாக வந்தபோதுகூட, பின்னல் பணங் கொடுக்காமலிருக்க முடியுமா என்று சொல்லி அதற்காக பயந்து அந்த வைத்யரை சாக்குப் போக்குச் சொல்லி யனுப்பி விட்டார்.

தார்ஜ்ஜடிக்கு புத்ரனிடம் உள்ளவாஞ்சை வீரபத்ரய்யருடையவாஞ்சையைவிட அதிகமல்ல. அவளுக்குத் தன் பெண்ணைப்பற்றிய விசாரமே பெரிய விசாரம். அவள் புருஷன் ஒரு ஏழை. ஏழைக்கேற்றற்போல நான்கு பெண்களும் இரண்டு பிள்ளைகளும் உள்ள ஒரு பெரிய குடும்பி. தாயார் தகப்பனர் உள்ளவன். அறுத்துப்போன ஒரு சகோதரி குடும்பத்தில் நாட்டாண்மை செய்யும் பாக்கியம் பெற்றவன். அந்த சகோதரியின் பிள்ளையை பி. எ.-க்குப் படிக்கவைத்து கலெக்டர் பரீக்ஷைக்கு சீமைக்கு

அனுப்பவேண்டுமென்று ஆகாசக்கோட்டைகட்டிக்கொண்டிருப்பவன். அதனால் அந்தப் பிள்ளையை ராஜோபசாரமாக வளர்த்து வந்தான். இதற்கெல்லாம் செலவுக்கு அவனது பிதிரார்ஜித ஸொத்தில் வரும் வரும்படியும், தனது உத்தியோக—ஜவுளிக்கடையில் கணக்கு வேலை—வரும்படியும் போதா. அதற்காக தனது மனைவியை இரண்டு மாஸத்துக்கொருதடவை பிறந்தகத்துக்கு அனுப்பிவிடுவான். தார்ஜ்ஜடிச்குப் பெண்பிறந்தகம் வந்தால் அதிக ஸந்தோஷம். தன்பேரன் பேர்த்திகளை அன்புடன் ஆதரித்து வருவாள். திரும்பிப் போகும்போது, தன் பெண்ணிடத்தில் வீரபத்திரய்யருக்குத் தெரியாமல் பத்து இருபது கொடுத்தனுப்புவாள். இவ்விதம் பணங்கொண்டு வந்தால் தான் தன் பெண்புக்ககம்போய் அதிக அடியும் உதையும் இல்லாமலிருக்க முடியுமென்பது தார்ஜ்ஜடியம்மாளுக்கு நன்றாய்த் தெரியும். வீரபத்ரய்யர் மாத்ரம் பணம் எதுவும் கொடுப்பதில்லை. அவர் எச்சில் கையால் காக்கையோட்டினால், அவைகள் அடிக்கடி தம் வீட்டைச்சுற்று மென்றும், அதுபோல் ஒரு தடவை பெண்ணுக்குப் பணம் கொடுத்தால், அவள் புருஷன் பணத்துக்குத்தட்டு ஏற்படும்போதெல்லாம் பிறந்தகம் அனுப்பிவிடுவானென்றும் சொல்லுவார்.

இப்போது தார்ஜ்ஜடியின் பெண் "சாகக் கிடக்கும்" தன் தம்பியைப் பார்க்க வந்தாள். "ஐயோ, பாவம், அன்யாயமாக என் தம்பியை மருந்து வைத்துக் கொன்று விட்டார்கள். அவர்கள் அந்த மாதிரிக் கூட்டந்தானே. அது தெரிந்துதானே அவனை வேட்டகம் போகவேண்டா மென்றார்கள். அவன் கேட்கவில்லை. போனான். அகப்பட்டுக் கொண்டான். இப்போது அனுபவிக்கிறான். எது, எனக்குத் தோன்றவில்லை, பிழைப்பா னென்று," என்று வந்தவன்றே தனக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி 'அங்கலாய்த்தாள்.'

ஒருநாள் எல்லோரும் சாந்தசீலன் படுத்துக் கொண்டிருந்த அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சாந்தசீலன் தூங்கிக் கொண்டிருந்தான் அந்த ஸபையில் கிழவிதவையும் உட்கார்ந்து கொண் டிருந்தாள். அவள் ஸம்பாஷணையை ஆரம்பித்தாள். அவளுக்கு மெதுவாய்ப் பேசத்

தெரியாது. அவள் பேச ஆரம்பித்ததும், சாந்தசீலன் விழித்துக் கொண்டான். ஆனால் கண்ணைத் திறக்கவில்லை.

"இருக்கிற தேக ஸ்திதியைப் பார்த்தால் பிழைக்கமாட்டான் என்று தோன்றுகிறது. என்ன பாவம்! அன்னியாயமாக மருந்து வைத்துக்கெடுத்து விட்டார்களே. ஒரு குடும்பம் வீணாகப் போகிறதே!"

ஸபையில் கூட இருந்த பக்கத்து வீட்டுக்காரர், எதையும் ஈச்வர ஸங்கல்பம் என்று சொல்லி ஸமாதானம் செய்து கொள்ளும் ஸ்வபாவமுள்ளவர், "என்ன செய்கிறது, நமக்குக்கொடுத்துவைத்தது தானே கிடைக்கும். அவனுக்கு இப்படி நேர வேண்டுமென்று தலைவிதியிருந்தால், யார் என்ன செய்தால் தான் என்ன? அதை மாற்ற முடியுமா? உங்களுக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். அந்தியகாலத்தில் இந்த துக்கம் ஏற்படவேண்டுமென்று ஈசுவராக்கினை போலும்" என்றார்.

சற்று நேரம் யாவரும் பேசாமல் சிந்தையிலாழ்ந்தார்கள், மறுபடியும் பக்கத்து வீட்டு வேதாந்தி, "உங்களுக்குத்தான் சிரமம் அதிகம்.வயது காலத்தில் ஆதரிப்பார் இல்லாமல், நாளைக்குத் தலை சாய்த்தால், அவன் கையால் ஒரு நெருப்பு வாங்கிக் கொள்ள முடியாமல்,—பாவம்! பாவம்! என்ன உலகம்! எது சாச்வதம்! ஒன்றுமில்லை. இப்படி நேருமென்று யார் நினைத்தார்கள். ஒரு குழந்தையாவது இருக்கிறதா? வம்சம் விளங்க. அதுவும் இல்லை. என்ன ஸம்பாதித்து என்ன, என்ன ஸொத்திருந்தென்ன? புத்திரபாக்கியம், தீர்க்காயுளான புத்திரனில்லாவிட்டால்எது இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன? எதுவும் பிரயோஜனமில்லை." என்று சொல்லி முடித்தார்.

மறுபடியும் எல்லாரும் சற்று மௌனமாயிருந்தார்கள்.

தார்ஜ்ஜடியம்மாள் பேச ஆரம்பித்தாள். "அதற்கென்ன செய்கிறது? அவனாகச்செய்து கொண்டு, எல்லாருக்கும் கஷ்டமுண்டாக்கிவிட்டான். இனிமேல் மேலே நடக்க வேண்டியதை யோசிக்கவேண்டியது தான். வம்சம் விளங்க ஏதாவது செய்ய வேண்டும்."

அவளுடைய எண்ணம் இன்னதென்று எவருக்கும் விளங்காததால் யாவரும் அவளைப் பார்த்தார்கள். உடனே தார்ஜ்ஜடி

"அதுதான், ஏதாவது ஸ்வீகாரமாவது எடுத்துக்கொள்ள வேண்டும். அதைத் தான் சொல்லுகிறேன்."

மறுபடி நிசப்தம்.

"நம்ப ஸாவித்திரி குழந்தைகளில் யாரை யாவது தான் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டும். மாப்பிளை என்ன சொல்லுகிறாரோ, அவர் தகப்பனார் தாயார் என்ன சொல்லுகிறார்களோ." என்றாள்.

"அவர்கள் என்ன சொல்ல இருக்கிறது. எனக்கிஷ்டந் தான். சிவனே யென்று சங்கரனைக் கொடுக்கிறேன். அவன் தான் இங்கே இருக்க பிரியப்படுகிறான். அவன் தான் ஸதா இங்கே வரவேண்டுமென்று சொல்லுகிறான்," என்றாள் தார்ஜ்ஜடியின் பெண் ஸாவித்திரி.

வீரபத்திரய்யர் "அதெதற்கென்ன, யாரையாவது ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும். சங்கரனைத்தான் எடுத்து கொள்வோமே" என்றார்.

சாந்தசீலன் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு துக்கம் பொறுக்க முடியவில்லை. இன்னும் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்க விரும்பி, துக்கத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு இன்னும் தூங்குவதாகப் பாசாங்கு பண்ணிக் கண்ணை மூடிக்கொண்டிருந்தான்.

பக்கத்து வீட்டு வேதாந்தி, "இன்னும் ஏதாவது வேறு வைத்தியம் பார்க்கிறதுதானே. ஒரு சமயம் குணமாகாதா? சங்கபுரி நாராயண பண்டிதன் ரொம்ப கெட்டிக்காரன் என்று சொல்லுகிறார்களே. அவனை அழைத்து வந்து காட்டுகிறதுதானே. ரொம்ப கை ராசியாமே. தொட்ட இடம் கெட்டுப் போனதே யில்லையாமே," என்றார்.

வீரபத்ரய்யர் சற்று கோபம் கொண்டார். "இதுவரை பார்க்காத வைத்தியமில்லை. ஆயிரம் ரூபாய் வரையில் செலவழித்தாயிற்று. தக்க மருந்தாக உடம்பில் ஏறியிருக்கிறது. எதற்கும் அசையவில்லை. வீணாக அவனை அழைத்து வருவதில் பணச் செலவைத் தவிர வேறு பிரயோசனம் எதுவும் இல்லை. கொடுத்த மருந்துக்குக் கணக்கு வழக்குண்டா? எதற்கும் அசையவில்லையே வியாதி" என்றார்.

தூர்ஜ்ஜடியம்மாளும் இதற்கு ஒத்துப்பாடினாள். ஸாவித்திரி வீணாகப் பணம் செலவழிப்பதற்குப் பதிலாகத் தனக்கு ஒரு நல்ல புடவையாக "நாள் கிழமைகளில் கட்டிக்கொள்ள" ஒன்று வாங்கிக் கொடுத்தால் "எந்நாளும் வைத்துக்கொண்டு கட்டிக் கொண்டிருப்பேன்" என்று வாய்கூசாமல், ஆனால் சற்று மெதுவாகச் சொன்னாள். இதைவிட சாந்தசீலனுக்கு ஆதரவான வார்த்தைகள் வேறு என்ன வேண்டும். சம்பாஷணை வேறு விஷயங்களில் சென்றது. சாந்தசீலனும், 'விழித்துக்கொண்டான்.'

நாள் செல்லச் செல்ல சாந்தசீலனுடைய உடம்பு மெலிவடைந்தது. மனமும் தளர்ச்சியடைந்தது சீக்கிரம் யமனுலகு போகவேண்டுமென்று நிச்சயித்துவிட்டு மன அமைதி அடைந்தான். தன் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கெட்டோமென்ற எண்ணம் மாத்திரம் அவனுக்கு உண்டாகவில்லை. தான் உலகில் அனுபவிக்கவேண்டிய அனுபவம் அவ்வளவுதான் என்றுஎண்ணி ஸமாதானம் செய்து கொண்டான்.

ஒரு நாள் காலையில் கஞ்சி சாப்பிட்டுவிட்டு, சாய்ந்து கொண்டு உட்கார்ந்து கொண் டிருக்கையில், திடீரென்று முன்பின் தகவல் தெரிவிக்காமல், அவனது மனைவியும் மாமனார் மாமியாரும்எதிரில் வந்து நின்றார்கள் அப்போதுதான் தூர்ஜ்ஜடியம்மாள் ஆற்றங்கரைக்குப் போனாள். வீரபத்ரய்யர் கழனிக்குப் போயிருந்தார். ஸாவித்திரி வீட்டின் பின் புறத்தில் ஏதோ வேலையாக இருந்தாள்.

திடீரென்று தன் மனைவியும் மாமனார் மாமியாரும் வந்ததும் சாந்தசீலனுக்கு ஒன்றுந்தோன்றவில்லை. வந்தவர்களை வாவென்று உபசரிக்கக் கூடத் தோன்றவில்லை.

மாமனார் "என்ன, சாந்தா, உடம்பு துரும்பாய்ப் போய்விட்டதே. ஒரு தகவல் எங்களுக்குத் தெரிவிக்கக்கூடாதா? இன்னுமா அப்பாவுக்கடங்கி கடுதாசிகூடப் போடாமலிருக்கவேண்டும். ஒரு வைத்தியங்கூட இல்லையாமே. நேற்றுத்தான் தெரிந்தது. ஓடிவந்தோம்" என்றார். சாந்தசீலனுடைய மனைவி ஹிரண்மயி, அவனைப்பார்த்து சற்றுநேரம் ஒன்றுந்தோன்றாமல் நின்று கொண்டிருந்து பிறகு தன் தாயார் தகப்பனாரைக்கூட கவனிக்காமல், ஓடிவந்து "நாதா, இப்படியா அநாதையாகப் போனீர்கள். நானிருந்து கூட உங்களுக்கு ஒரு உபகாரமும் செய்யமுடி

யாதபடி செய்து விட்டீர்களே" என்று சொல்லிக் கொண்டே அவனைக் கட்டிக்கொண்டு "ஹோ" என்று அழுதாள்.

"என் கண்மணி, என்ன செய்வேன். போதாத காலம், இப்படியாயிற்று. என்மேல் தப்புதான், உன்னையனுப்பி விட்டது. உன்னை எப்போது பார்ப்பேன் என்று ஸதா சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனக்கோ எழுந்து நடமாட சக்தி யில்லை. உங்களுக்குக் கடிதம் போடவும் சரிப்படவில்லை. நல்ல வேளை யாக வந்து சேர்ந்தீர்கள்."

"அப்போதும் இப்படித்தான் சொன்னீர்கள். மறுபடி கூட்டிக்கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்து, பிறகு அவர்கள் சொன்னதும் அனுப்பிவிட்டீர்கள்."

சாந்தசீலனுக்கு இதுராமபாணம்போல் தைத்தது. ஒன்றும்பதி சொல்லத்தோன்றவில்லை. கண்ணீர்உதிர்த்து துக்கப்பட்டான்.

"அடி, போதுமடி இளைத்த உடம்பில் இப்படி யெல்லாம் சொல்லாதே. நாளைக்கு உடம்பு ஸௌக்கியமானால் அவனெங்கு போகிறான். வேண்டியமட்டும் கண்டி. இப்போது அவளை ஆதரவாகப் பேசி உடம்பை ஸ்வஸ்தப் படுத்தவல்லவா பார்க்க வேண்டும்.—அப்பா சாந்தா, யார் வைத்தியம் பார்க்கிறார்கள்?"

"அந்த வெட்கக் கேட்டை யென்ன சொல்லட்டும். வைத்தியமே கிடையாது. தழையும் தாம்பும் அரைத்து விழுங்குகிறேன். அது தான் வைத்தியம்."

"என் நல்ல வைத்தியனாக ஒருவனை அழைத்துப் பார்க்கிறது தானே?"

"அதெல்லாம் நடக்கிற காரியமல்ல. அது அவர்களுக்கு யோசனையில்லை. வேறு யோசித்துவருகிறார்கள். யாரைஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுகிறதென்று அவர்கள்யோசித்துவருகிறார்கள்."

"உன்னைப்பற்றி நிச்சயம் செய்து விட்டார்களோ?"

"அவர்கள் கவனிக்கா விட்டால் போகிறதம்மா. நாமே யாராவது வைத்தியனைக் கூட்டிக் கொண்டு வருவோம். இங்கே யாராவது தக்க வைத்தியர்கள் உண்டா?"

"உண்டு, சங்கபுரி நாராயண பண்டிதன் கெட்டிக்காரன். ஆனால் என் தகப்பனுக்கு இஷ்டமில்லை. பணம் அதிகம் கேட்பானென்று பயப்படுகிறார்."

அந்த வைத்தியனையே அழைத்து வருவதாகத் தீர்மானம் செய்தார்கள். வீரபத்ரய்யரும் தூர்ஜ்ஜடியும், வீட்டில் வைத்தியம் பார்க்க ஆக்ஷேபித்தால் வேறு வீட்டில் ஜாகை வைத்துக் கொள்வதாயும், அதுவும் சரிப்படாவிட்டால் (மாமனூர்) ஊருக்குப் போய் விடுகிறதென்றும் தீர்மானித்தார்கள்.

வைத்தியம் பார்க்க வந்தவர்களாதலால், சம்பந்திகளை வீரபத்ரய்யரும் தூர்ஜ்ஜடியம்மாளும் ஒன்றும் தூஷிக்கவில்லை. ஹிரண்மயியும் வசைமொழி கேட்கவில்லை. சங்கபுரிவைத்தியன் மாலையில் வந்தான். சாந்தசீலனைப்பார்த்தான். வியாதி அதிக பலமாயிருக்கிறதென்றும், இரண்டுவாரம் மருந்து கொடுக்க வேண்டுமென்றும், மொத்தமாக நூற்றைம்பது ரூபாய் கொடுப்பதாக இருந்தால் வைத்தியம் பார்ப்பதாகவும் மருந்துச் செலவுக்கென்று நூறு ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னான். நாராயணபண்டிதனிடம் பணம் குறைப்பதைப்பற்றிப் பேசுவது கூடாது. அவன் அது விஷயத்தில் ஒரே கண்டிப்பாயிருப்பான். அவனுக்கு இஷ்டப்பட்டால் ஏழைகளுக்கு பணம் ஒன்றும் வாங்காமல் வைத்தியம் செய்வான். வீரபத்திரய்யர் பணக்காரர் என்றும் லோபியென்றும் தெரியும். அதனால் சரியாகக் கேட்டு விட்டான்.

வீரபத்திரய்யர் அதற்கு சம்மதிக்கவில்லை. இனி பிழைப்பதேது, அனுவசியமாகப் பணம் செலவழிப்பானேன் என்று சொல்லிவிட்டார். தூர்ஜ்ஜடியோ எப்படியாவது போகட்டும் என்று சொல்லிவிட்டு சும்மாயிருந்தாள். சாந்தசீலனுடைய மாமனார் ரொம்ப ஏழை. இருநூற்றைம்பது ரூபாய்க்கு திடீரென்று எங்கு போவார். தமது ஊராயிருந்தாலும் ஏதாவது பிரயத்தனப்பட்டுப் பார்க்கலாம். அயலூரில் அவரை நம்பி யார் அவ்வளவு பெரிய தொகை பணம் கடன் கொடுப்பார். இன்னது செய்வதென்று தோன்றாமல் கையைப் பிசைந்தார். அவர் மனைவியோ அழுதுகொண்டு தன் பெண்ணுக்கு பல வகையிலும் கஷ்டம் வருகிறதே என்று விசாரப்பட்டுக் கண்ணீர் உதிர்த்தாள். வைத்தியன் என்ன சொல்லுகிறீர்கள், போகட்டுமா என்று பலமுறை கேட்கிறான். எவருக்கும் எதுவும் சொல்

லத் தோன்றவில்லை. கடைசியில் வைத்யன் போக எழுந்தான். உடனே ஹிரண்மயி "வைத்யரே, சற்று இரும். பணத்துக்கு விசாரம் இல்லை. உமக் கேதாகுணமாகுமென்று தோன்றுகி றதா? எங்களுக்கு பிரிய வார்த்தையாகச் சொல்லவேண்டாம். வாஸ்தவமாக உமக்கு என்ன தோன்றுகிறதோ சொல்லும்." என்றாள்.

"அம்மணி வியாதி பலமானது, நாள்பட்டது. தேகத்தில் ஊறியிருக்கிறது. சிரமப் பட்டால் முடியுமென்று தான் சொல்லமுடியும். அதற்கு மேல் என்ன சொல்ல சாத்தியப்படும். நாங்கள் என்ன பிரமதேவனா, நிச்சயமாகச் சொல்ல?"

"அம்மா, வைத்யம் செய்யட்டும். பணத்துக்கு விசாரப் படவேண்டாம். என் நகைகளை யெல்லாம் விற்று விடுங்கள். அவருக்கு உபயோகப்படாத நகைகள் எனக்கு இருந் தென்ன இல்லாமலென்ன.—வைத்தியரே, இன்றைக்கே முடியுமானால் மருந்து கொடுக்க ஆரம்பியும். நகைகளை விற்று நாளைக்கு உமக் குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்கிறோம்."—என்று சொல்லிக் கொண்டே ஒவ்வொரு நகையாகக் கழற்றித் தன் தாயாரிடம் கொடுத்தாள்.

வைத்தியன் பிரமித்துப் போய்விட்டான். "அம்மணி, இப்போது வேண்டாம். அப்புறம் வாங்கிக் கொள்ளுகிறேன். சொஸ்தமான பிறகே வாங்கிக் கொள்ளுகிறேன். இன்னும் சற்று நேரம் கழித்து மருந்துகொடுக்கிறேன். பத்யம் மாத்ரம் தவறாமல் பார்த்துவாருங்கள்." என்று சொல்லிவிட்டுப்போனான். சற்று நேரத்துக்கெல்லாம் வைத்தியன் மருந்து கொண்டு வந்து கொடுத்தான். ஹிரண்மயியே அருகிலிருந்து சாந்தசீலனுக்கு மருந்து கொடுத்து உபசாரம் செய்தாள்.

" ஹிரணி, உன்னைப்போல் புத்திசாலியும், என்னைப்போல் 'அசடும்' உலகத்தில் கிடையாது. இரண்டுதடவை உன்னை ஊருக்கு அனுப்பும்போது நான் சும்மாயிருந்தேன். அப்படி யிருந்தும் நீ நகைகளை விற்றுவது வைத்தியம் செய்ய தீர்மானி தாய் எனக்கே வெட்கமாயிருக்கிறது.

"நீங்கள் எப்படியாவது குணப்பட்டு விட்டால் போதுமா னது அப்புறம் நகைகள் கிடைப்பதா கஷ்டம்?"

"உனக்கிருக்கும் சிரத்தையும் கவலையும் என் தாயார் தகப்பனருக்கு இல்லையே நான் பிழைக்கவேண்டுமென்ற கவலையே அவர்களுக்குக் கிடையாது"—'அவர்கள் பேசும் போது வேறு எவரும் அருகிலில்லை.—" நான் போய் விடுவேனென்றே தீர்மானித் திருக்கிறார்கள். நான் போனபிறகு ஸ்வீகாரப்செய்துகொள்வதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்."

"நாதா, அதிகம்பேசினல் உடம்பு அலுப்பாகும். சும்மாயிருங்கள். இப்பொழுதாவது உங்கள் மனம் திரும்பிற்றே என்று எனக்கு ஸந்தோஷம். சற்று நேரம் சும்மா யிருங்கள்." என்று சொல்லி அவனை ஆலிங்கனம் செய்து முத்தமிட்டாள். சாந்தசீலன் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினதாக எண்ணியிருந்தான்.

வர வர பத்தியம் கடுமையாயிற்று. உடம்பும் குணமடைந்து வந்தது. ஆனல் செலவு அதிகமாயிற்று. வீரபத்ரய்யர் அதிக செலவாகிறதென்றும், இப்போது குணமாயிருக்கிறபடியே விட்டு விட்டால், இனி தானுக குண மேற்பட்டுவிடு மென்றும் சொல்லி விட்டார். தார்ஜ்ஜடியும் அப்படியே சொல்லிவிட்டாள். சாந்தசலனுடைய மாமனர் மாமியார் இன்ன சொல்லுவதென்று தெரியாமல் விழித்தார்கள்.

இந்த விஷயத்தைக் கேட்ட சாந்தசீலன் யோசிக்க லானன். "இப்போது நமக்கு குணமாகி வருகிறது. இன்னும் கொஞ்ச நாளில் பூராவும் ஸ்வஸ்தமாகிவிடும். வைத்தியன் சொல்லுகிற படி பத்தியம் முதலியவற்றில் ஜாக்கிரதையாக யிருந்தால் தான் நல்லது இப்போது அப்பாவைக் கேட்போம், வைத்யத்தை நிறுத்த உத்தேசமா? ஏன்? என்று. எனக்கு சாப்பாடுபோட முடியாதா? அவர் சரிவர பதில் சொல்லாவிட்டால், அல்லது வைத்தியத்தை நிறுத்த இஷ்டப்பட்டால்:—அப்புறம் நாம் யோசிக்க வேண்டிய தென்ன ? அப்பா அம்மாவைக் கவனிப்பதா ? மனைவியை கவனிக்கிறதா ? யார்பேச்சைக் கேட்பது? இரண்டுபேர்களும் சேர்ந்திருக்கப் போகிறதில்லை. சேர்ந்திருந்தால் கலகம் தான் உண்டாகும். ஆகவே பிரிந்து தான் இருக்கவேண்டும். அப்படியானல் நான் யார் பக்கம்."

சாந்தசீலன் தன் தகப்பனரைக் கேட்டான். அவர் சரிவர பதில் சொல்லவில்லை. வழவழ வென்று பேசிவிட்டார். "என்ன

சொல்லுகிறது? ராஜ வைத்தியமாக இருக்கிறது. தினம் இரண்டுபடி பாலும் அரைப்படி நெய்யும் என்றால் யாரால் முடிகிறது. கையிலோ பணமில்லை. இன்னும் ஏதோ மருந்து செய்யவேண்டும், பணம் வேண்டுமென்கிறான். ஒன்றிரண்டா? இருபது முப்பதாகக் கேட்கிறான். நான் சொல்லுவதென்ன. இப்போது வைத்தியத்தை நிறுத்தி வைப்போம். நாளடைவில் சரியான சாப்பாட்டில் குணப்பட்டுவிடும்.'' என்றார்.

மேல்கொண்டு என்ன செய்கிறது என்று சாந்தசீலனுக்குத் தோன்றவில்லை. யாரைப் பணம் கேட்கிறது? தன் மனைவியை நகை விற்றுப் பணம் கொடு என்று எப்படிக் கேட்கிறது? அவனுக்கு யார் பணம் கடன் கொடுப்பார்கள். அவன் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்த போது சற்று தூரத்தில் ஹிரண்மயி நின்று கொண்டிருந்தாள். தந்தை போனவுடன் அவள் வந்து புருஷன் துக்கமாக இருப்பதைப்பார்த்து, ''ஏன் விசாரப்படுகிறீர்கள். பணத்துக்காக விசாரப்படுகிறீர்களா? யாரையாவது அழைத்து இந்தச் சரட்டை விற்று விடுங்கள். நாளைக்கு நீங்கள் பண்ணிப் போடுவீர்கள். அந்த தைரியம் எனக்குண்டு. '' என்று சொன்னாள்.

சாந்தசீலன் சற்று யோசித்தான். அவள் முகத்தைப்பார்த்தான். சற்று புன்னகை கொண்டான். ''நான் பணக்காரன் வீட்டில் பிறந்தும் எனக்கு வைத்தியத்துக்குப் பணமில்லாமல் போயிற்றே. நீயல்லவா கொடுக்கும்படியாக நேருகிறது.''

இதன்மேல் சாந்தசீலன் யோசிக்கலானான். தன் தாயார் தகப்பனாருடைய கடின சித்தத்தையும் லோபத்தையும் பிரியமின்மையையும் நன்குணர்ந்து கொண்டான். இனியவனுக்கு ஆப்தமானவர்கள் யார். தாயார் பெண்ணின்மேலும், அவளுடைய புருஷன், குழந்தைகள் இவர்கள் பேரிலுமே கண்ணும் கருத்துமா யிருக்கிறாள். ஏதடா, ஒரு பிள்ளையாயிற்றே, அவன் பிழைக்க நூறு இருநூறு செலவழிந்தா லென்ன என்று தன் புருஷனிடம் சொல்லாமல், புருஷனுடன் சேர்ந்து பாடுகிறாள். வீரபத்திரய்யரோ ஒரு காசு செலவழிவதனாலும் பயப்படுகிறார். புத்ரனுடைய உடம்பு பெரியதாக இல்லை. மாமனார் மாமியாரோ ரொம்ப ஏழை அவர்கள்மேல் ஒன்றும் சொல்லுவ

தற்கில்லை. தற்போது ஹிரண்மயியே ஆதாரவாக இருந்து வருகிறாள். இரண்டு தடவை புக்ககம் விரட்டியும், அதை ஒரு பொருட்டாயெண்ணாமல், தன் நகைகளை விற்றாவது புருஷன் பிழைக்க வைத்யம் செய்யவேண்டுமென்று சொல்லுகிறாள். "அவளை உல்லங்கனம் செய்தது பிசகு' தாயார் தகப்பனாருக்கு பிரதியாக எதுவும் செய்வது கூடாது தான். அதற்கும் ஒரு அளவில்லையா. அதற்காக கட்டின மனைவியை அலக்ஷியம் செய்யலாமா? எது தர்மம்? யாரைக் கைவிடலாம்." என்றிப்படி யோசித்துக் கடைசியில், தன் மனைவியைக் கூப்பிட்டான்.

"ஹிரணி, உன் தகப்பனாரைக் கூப்பிடு. இதுவரையில் புத்திப்பிசகால் செய்யவேண்டியது எது, தள்ள வேண்டியது எது என்பதையறியாமல் தவித்தேன். இப்போது அறிந்துகொண்டேன். நீ என் உயிரைக் காப்பாற்றினாய். என் தாயார் தகப்பனார் என்னை லக்ஷியம் செய்யவில்லை என் வைத்தியத்தை இரண்டு தடவை நிறுத்தப் பார்த்தார்கள். இரண்டு தடவையும் உன்னால் தான் வைத்தியம் நடக்கிறது. இனி அவர்களால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. இனி உன்னைவிட்டுப்பிரிந்திருக்கமுடியாது. நான் அவர்களுடன் சேர்ந்திருந்தால் மறுபடியும் அவர்கள் பேச்சைக்கேட்டு புத்திமோசம் போய் நான் உன்னை விட்டுப்பிரிய நேரிடுமோ என்று பயமாயிருக்கிறது. ஆகையால் இப்போதே வேறு இடம் ஜாகைபோகவேண்டும். உன் தகப்பனாரைக் கூப்பிடு. தெருக்கோடியில் ஒரு வீடு காலியாயிருக்கிறது. இப்போதே அவ்விடம் போவோம்."

"பிரிந்து போவதைப்பற்றி யோசித்துச் செய்யுங்கள். வீணாக என்மேல் அபவாதம் உண்டாகும். நான் ஏதோ உங்கள் மனஸைக்கலைத்து விட்டதாக ஏற்படும்."

"அதெல்லாம் பார்த்துச் சரிப்படாது. இங்கு ஒரு க்ஷணமும் இருக்கமுடியாது. சீக்கிரம் உடம்பு குணமாகிவிட்டால், ஏதோ ஈசுவரன் கொடுத்த உத்யோகம் இருக்கிறது. நமக்குச் சாப்பாட்டுக்குப்போதும். உன்னுடைய ஆதரவும் அன்பும் சம்பளக்குறைவை சரிப்படுத்திவிடும். செலவுக்கு வரும்படி முன்னைப் பின்னாக இருந்தாலும் நிம்மதியாயும் ஸந்தோஷமாயும் இருக்கலாம். இங்கே இருக்கிறவரையில் எனக்கு எப்போதும்

துக்கர்தான். உனக்கோ இங்கு ஒரு நாழிகை இருக்க சரிப்படாது."

ஹிரண்மயி புருஷனருகில் புன்சிரிப்புடன் வந்து உட்கார்ந்தாள். உடனே சாந்தசீலன் அவளை ஆலிங்கனம் செய்து கொண்டு, "இனி எப்போதும் நாம் ஸந்தோஷமாக வாழ்ந்திருப்போம். பழைய துக்கங்கள் எல்லாவற்றையும் மறந்துவிடு" என்று சொல்லி முத்தமிட்டான். அவளும் "அப்படியே ஆகட்டும். அப்பாவை கூப்பிடுகிறேன்" என்று சொல்லியவனைக் கட்டி முத்தமிட்டுக் கொஞ்சிவிளையாட ஆரம்பித்தாள். தார்ஜ்ஜடி அவர்களைக்கண்டு வயிறெறிந்து போவதையாவது, தார்ஜ்ஜடியின் பெண் கண்டு ஹேளனம் செய்து கொண்டு போனதையாவது அவர்கள் கவனிக்கவில்லை.

# விஜயன்

---

1

"என்னைக்கேட்டால், சிவனேயென்று விஜயனுக்கு ஜானகியைக் கொடுத்து விடலாம். நல்ல பிள்ளை, யோக்கியன், புத்திசாலி, குலம் கோத்திரம் விசாரிக்கவேண்டியதில்லை."

"சரிதான்! சொத்துமில்லை, ஒன்றுமில்லை. சோற்றுக்குத் தாளம் போடுகிறான். ஒரு வேலைக்கும் லாயக்கில்லாமல், ஏதோ, அவன் வாத்தியார் சிபார்சு செய்தாரேயென்று அவனை நம்ம கோபுவுக்கு படிப்புச் சொல்லிக்கொடுக்க வைத்துக்கொண்டிருக்கிறேன்; இந்த வேலைக்கு வந்திருக்கிறான். அவனுக்கா ஜானகியைக் கொடுக்கிறது? நல்ல வரன் கிடைக்காதா என்ன? வீரனூர் ஐயாசாமி ஐயர் பிள்ளைக்கென்ன; நல்ல சொத்து, படித்து வருகிறான். இந்த வருஷம் பீ. ஏ. யில் பாக்கி தேறிவிடும். பிறகு வக்கீல் பரீக்ஷைக்கு வாசிக்க உத்தேசமாம்.—"

"நன்றாகச் சொன்னீர்கள். அவன் நடத்தை கொஞ்சமும் சரியாக இல்லையாம். ஒரு நாடகக் கொட்டை, ஒரு ஆட்டம் பாக்கி கிடையாதாம். தேவடியாள் வீடே கதியாகக் கிடக்கும் அவனுக்கு நம்ம குழந்தையைக் கொடுத்து அவள் தினம் கண்ணும் கண்ணீருமாக இருக்க விடவா, அவளை இத்தனை நாள் அருமையாக வளர்த்தேன். அது ஒரு போதும் கிடையாது. நானிருக்கிறவரையில் அந்த இடம் வேண்டாம். வேறு எதாவது ஒரு இடம் பாருங்கள்."

"நான் எந்த இடம் பார்த்தாலுந்தான் உனக்கு ஸம்மதமில்லையே."

"நீங்கள் பார்க்கிற இடம், படிப்பிருந்தால் சொத்தில்லை; சொத்திருந்தால் படிப்பில்லை இந்த இரண்டு மிருந்தால்நடத்தை

சரியாக இல்லே. அல்லது வ்யாதி ஏதாவது இருக்கிறது. அதற்கு நான் என்ன செய்கிறது."

"என்னவோ, பார்ப்போம். இன்னும் எங்கேயாவது வானிருக்கிறதா என்று பார்ப்போம்."

"விஜயனுக்குக் கொடுத்தா லென்ன?"

"அதென்ன, அவன் விஷயத்தில் அவ்வளவு மும்மரமா யிருக்கிறாய்?"

"என்னவோ, அவனுக்குக் கொடுத்தால் நம்ம குழந்தை சௌக்கியமா யிருக்குமென்று தோன்றுகிறது. அவன் வியாஜ்யம் ஜயிக்குமென்று நீங்கள்தான் சொல்லுகிறீர்களே? சொத்தில்லையென்று ஏன் சொல்லுகிறீர்கள்?"

"ஜயித்த பிற்பாடல்லவா அந்தப்பேச்சு- அது வரையில் அவன் ஏழைதானே. மேலும் ஏழையாயிருக்கிறவன் அந்தஸ்தாய் வளர்ந்த நம்ம குழந்தையை சரியாக வைத்துக் கொள்வானா?"

"அவனுக்குக் கோபமென்பதே கிடையாது. வந்து ஏழெட்டு மாஸமாகிறதே. ஒரு நாளாவது, கோபுவையாவது ஜானகியையாவது சீ! என்று சொன்னதே கிடையாது. ஜானகிதான் ஸதா அவனை 'சீண்ட்ரம்' செய்கிறாளே ஏதாவது முகம் கடுத்துப் பார்க்கிறதுண்டா. அவள் என்ன செய்தாலும் சும்மா இருக்கிறான். அவளும் விஜயனென்றால் அவ்வள்வு உயிரா யிருக்கிறாள். என்னவோ இரண்டு பேருக்கும்தான் முடி போட்டிருக்கிறதென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்."

"அவனுக்குக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமா? இப்போது வேண்டா மென்று சொல்லலாமே."

"இரண்டுபேரும் ஒருவருக் கொருவர் ரொம்ப பிரியம். அது நிச்சயமாகச் சொல்லலாம். அதைப் பற்றி சந்தேகம் வேண்டாம். ஜானகிக்கு இஷ்டமா என்று கேட்டு, வேண்டுமானால், சொல்லுகிறேன்."

"சரி, யோசித்துச் சொல்லுகிறேன். பிற்பாடு பேசிக் கொள்வோம்."

## II

விஜயராகவன் ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன். தனது தந்தை சிறு வயதிலேயே இறந்து போக வே, தாயார் அவனுடன் பிறந்தகம் போய் இருந்து வந்தாள். ஸொத்துக்கள் வியாஜ்ய விவகாரத்தில் அகப்பட்டு விட்டன. அவைகள் அவனுக்குக் கிடைக்குமென்பது கூட ஸந்தேகமாகி விட்டது. அவனது சிற்றப்பன் பெரியப்பன்மார்கள் அவனை மோசம் செய்ய எண்ணி யிருந்தார்கள். தனது தாய் மாமன் வீட்டில் வளர்ந்து வாசித்து, மேலே வாசிக்க முடியாமல், தன் உபாத்தியாயர் சிபார்சால் ராமபத்ரய்யருடைய வீட்டில் அவரது பையனுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க அமர்ந்து கொண் டான். விஜயன் தனது குணத்தாலும் நடத்தையாலும் அவ் வீட்டிலுள்ள எல்லாரையும் ஸந்தோஷப்படுத்தி வந்தான். மற்றவர்களைக் காட்டிலும், ஜானகிதான் அவனிடத்தில் அதிக பிரீதியாக இருந்தவள். எப்படியோ அவளுக்கு அவனிடத்தில் ஒரு வித வாத்ஸல்யம் உண்டாயிற்று. முதலில் கல்யாணி அம் மாள் வாலிபனிடம் பிரியமாக இராவிட்டாலும், நாள் செல்லச் செல்ல அவனிடம் நல்லெண்ணம் உண்டாயிற்று. ஜானகி யவனிடம் அதிகமாக விளையாடி அவனைப் பலவிதத்தில் தொந் தரை கொடுத்தாலும் அவன் ஒன்றுக்கும் அசையாமல் சற்றும் கோபம் கொள்ளாமல், அவள் அவ்விதம் தொந்தரை கொடுப் பதையே ஸந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, அவளை உத்ஸாகப் படுத்தி, "படுத்தும் குணமுள்ள" அவளை பணிவுள்ளவ ளாகச் செய்ததையும், மற்ற எவர்கள் பேச்சையும் கேட்காத ஜானகி விஜயன் சொன்னால் மாத்ரம் கேட் பதையும் கண்டு, இருவருக்கும் கல்யாணமாகிவிட்டால் தன் பெண் ஸௌக்யமாயிருப்பாள் என்று எண்ணினாள் கல் யாணியம்மாள். அதற்காக அவனது குலங் கோத்திரங்களை யும் அறிந்து கொண்டாள். ஏற்ற வரனென்று தீர்மானித்தாள் வியாஜ்யம் ஜயிக்கக்கூடியதென்றும் தெரிந்து கொண்டாள். எப் படியோ புருஷனுக்கு உபதேசம் செய்து அவரை அரைகுறை யாகவாவது இணங்கச் செய்தாள். தன் பெண்ணுக்கும் அவ

னைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டந்தான் என்று அறிந்து கொண்டாள். கல்யாணப் பேச்சு வந்ததும் ஜானகிக்கு சற்று நாணல் கோணல் ஏற்படலாயிற்று.

"ஜானகி, வா, இனிமேல் நீ என்னுடன் அதிகமாக விளையாடக்கூடாது, தெரியுமல்லவா?" விஜயனுக்கு இவ்விஷயம் சற்றுத் தெரியும்.

ஜானகி சற்று புன் சிரிப்புடன், முன்போல் தாராளமாகப் பேசாமல், மெதுவாய், "என்ன ஸமாசாரம்? ஏன்?" என்றாள், ஒன்றுந் தெரியாதவள்போல் பாசாங்கு செய்துகொண்டு.

"ஏன் தெரியாதா, என்ன? எல்லாம் நிச்சயமாகிவிட்டதே, எனக்கும் உனக்கும் கல்யாணமென்று. இனிமேல் நீ புருஷனுடன் அட்டஹாஸமாக விளையாடிச் சிரித்துப்பேசினால், பார்க்கிறவர்கள் கேலி செய்வார்கள். ஜாக்கிரதை!"

ஜானகி சிறிதுநேரம் பேசவில்லை. உண்மையில் அவளுக்கு அவனுடன் விளையாட கூச்சமாகவே யிருந்தது.

"உனக்கு சற்று துக்கமாகக்கூட இருக்கும். பணக்காரப் பெண்; உன்னை, ரொம்ப ஏழை, எனக்குக்கொடுக்க யோசித்திருக்கிறார்களே. அது வருத்தமாக இல்லையா? உன் தாயாருக்கு உன்மேல் சற்று கோபந்தான் என்று தோன்றுகிறது. நல்ல இட மெல்லாவற்றையும் தள்ளிவிட்டு, எனக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னாளாம். உன் அப்பா, விவரம் தெரிந்தவர்; நான் ஏழை என்பது தெரியும்; அதனால் கூடாதென்றாராம். கடைசியில் அவரும் சரிஎன்று சொல்லிவிட்டாராம். சீரும் சிறப்பாக வளர்ந்து ஒரு ஏழைக்கா வாழ்க்கைப் படப்போகிறாய். உன்னோடொத்த பெண்கள் பி. ஏ., எம். ஏ., வாசிக்கும் பிள்ளைகளுக்கு வாழ்க்கைப் பட்டிருக்க, நீ மாத்ரம் ஒரு ஏழைக்கு வாழ்க்கைப்படப் போகிறாயே."

ஜானகி புன் சிரிப்புடன் சற்று தலைகுனிந்து சும்மாயிருந்தாள். பின்பு பேச்சை மறைக்க எண்ணி, "உங்களுக்கு உடம்பு சரிப்படவில்லை என்று சொன்னீர்களே. இப்போது எப்படி யிருக்கிறது?" என்று கேட்டாள்.

"இப்போது கேட்பதில் பயனென்ன? கல்யாணமான பிறகு கேட்டால் ஏதாவது மருந்தாவது செய்து தரச்சொல்லு

வேன். சமையல் என்ன செய்வ தென்றுவது சொல்லு வேன்.''

''இந்த விளையாட்டுப் போதும். உடம்பு எப்படி யிருக் கிறது ?!''

''அதைப்பற்றிச் சொல்லுவது உனக்கு இஷ்டமில்லையா, என்ன ? இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம். எனக்கு உடம்பு சரியாகிவிட்டது. சுக்குப் போட்ட வெந்நீர் மாத்திரம் வேண்டும். கோபு எங்கே போயிருக்கிறுன்? ''

''கோவிலுக்குப் போயிருக்கிறுன்.''

''சரி, நானும், சற்று வெளியில் போய் வருகிறேன். நீ தான் என்னுடன் முன்போல சரியாகப் பேசக்காணும். இங்கே உட்கார்ந் திருப்பதைவிட வெளியிலாவது போய் வருவோம்''

''நான் ஒன்றும் சொல்லவில்லையே. என்னவோ அவர்கள் பேசிக்கொண் டிருக்கிறுர்கள். அவர்கள் இன்னும் ஒரு தீர் மானத்துக்கும் சரியாக வரவில்லை, அப்பாவுக்கு இன்னும் ஸம்மதமில்லை.''

'' என், தீர்மானமாகி விட்ட தென்றவல்லவோ நினைத் தேன். அப்பாவுக்கு என் இஷ்டமில்லை ?''

'' என் அத்தைக்கு மச்சினன் பிள்ளை ஒருவனிருக்கிறுன். பி. எ. வாசிக்கிறுராம். அவரை உத்தேசித்திருக்கிறுர்.''

'' அப்பா ! அது தான் சரி, நான் சொன்னபடியே, நல்ல பி. எ. வாசிக்கும் பையன், நிச்சயமாகி விட்டதா ?''

'' இன்னும், தெரியவில்லை. கடுதாசி எழுதியிருக்கிறுர் அம்மாவுக்கு அது இஷ்டமில்லை.''

'' என் ?''

'' தெரியாது. ''

'' ஸொத்துண்டோ இல்லையோ ?''

'' ஸொத்து யதேஷ்டமாக உண்டு.''

'' பின்னென்ன காரணம் ? ''

''தெரியாது.''

'' உனக்கு இஷ்டந்தானே ?''

ஜானகி பேசாமல் இருந்தாள்.

விஜயன் அவளை இனி வற்புறுத்திக் கேட்பதில் பயனில்லையென்று எண்ணி, சம்பாஷணையை வேறு விதமாக மாற்றினான். ஆனால், அவன் அவளுடைய முக ஜாடையால் பந்துவைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமில்லையென்பதை மாத்திரம் கண்டு கொண்டான். அதோடு மாத்திரமல்ல. அவன் தன்னிடம் முன்னை விட அதிக வாஞ்சையாக இருப்பதாகவும் எண்ணிக்கொண்டான். முன் போல் அவள் தாராளமாகப் பேசாவிட்டாலும், முன் போல் அவள் குதூஹலமாக இராவிட்டாலும், அவள் ஸதா சற்று கவலை கொண்டவள் போலக் காணப்பட்டாலும், விஜயனிருக்கும்போது மாத்ரம் அவள் கவலையை ஒழித்து சற்று ஸந்தோஷமாகக் காணப்பட்டாள். இதை விஜயராகவன் நன்கு கவனித்து வந்தான்.

## III

ராமபத்ரய்யருடைய தமக்கை லக்ஷ்மியம்மாளும் அவளுடைய மைத்துனர் பிள்ளை ஸீதாபதியும் வந்து நான்கு நாளாகிறது. கல்யாணியம்மாளுக்கு ஸீதாபதியை மாப்பிள்ளையாகக் கொள்வதில் சற்றேனு மிஷ்டமில்லை. அவன் பி. எ. வாசிக்கிறான் என்பதும் கெட்டிக்காரன் என்பதும் அவளுக்கு நன்றாகத் தெரியும். எம். எ. யோ, பி. எல். லோ படிக்கப்போவது நிச்சயமென்பதும் தெரியும். ஸீதாபதி லக்ஷண முள்ளவன், ஜானகிக்கு ஏற்றவயதுள்ளவன், ஸொத்துமுண்டு, இதைவிட நல்லவரன் எங்கு கிடைக்கப்போகிறது? ஆனால், அவன் தாஸீ லோலன் என்று வதந்தியுண்டு. அதோடு அவனுடைய தாயார் முதல் நாட்டுப் பெண்ணைப் படுத்துகிறாள், என்று ஒரு அபவாதம் உண்டு. தான் அருமையாகப் பெற்று வளர்த்த ஒரே பெண்ணை தாஸீ லோலனுக்குக் கொடுத்து மாமியாரிடம் கஷ்டப்படும் படிக்கும் புருஷனுடைய ஆதரவு இல்லாமல் தவிக்கும்படிக்கும் விட கல்யாணிக்கு இஷ்டமில்லை. அதனால், லக்ஷ்மியம்மாள் என்ன சொல்லியுங்கூட, தன் புருஷன் என்ன சொல்லியுங்கூட அந்த ஸம்பந்தத்துக்கு சிறிதுகூடப் பிடிகொடுத்துப் பேசவில்லை. லக்ஷ்மியம்மாள் மாத்ரம் தன் தம்பியை தினம் "கரைத்து"க் கொண்டு வந்தாள்.

இன்னும் மூன்று நாள்களாயின. கல்யாணம் எவ்வழியிலும் தீர்மானமாகவில்லை. கல்யாணியம்மாள் முதலில் எண்ணின எண்ணத்தையே சாதிக்க விரும்புகிருள். அவள் புருஷன் வீதாபதியின் மேல் அபிமானம் கொள்ளலானார். ஜானகிக்கு விஜயராகவன்மேல் அபிமானம் அதிகமாயிற்று. அப்படியே விஜயனுக்கும் ஜானகியின்மேல் அபிமானம் ஏற்பட்டது. அவளை யே, கூடுமானல், கல்யாணம் செய்து கொள்ளவேண்டும். யிது சரிப்படாவிட்டால் பிரம்மசாரியாகக் காலம்கழிக்கவேண்டு மென்று தீர்மானித்துவிட்டான். வீதாபதியோ எப்படியாவது ஜானகியை "தட்டிக் கொண்டு" போய் விடுகிறதென்று ஸங் கல்பித்துவிட்டான். லக்ஷ்மியம்மாள் தான் பிடித்த காரியத்தை சாதிக்காமல் விடுவதில்லை யென்று தீர்மானித்து விட்டாள்.

காலை பத்து மணியிருக்கும். விஜயன் தன் அறைக்குப் போய் தன் பெட்டியைத் திறந்து ஏதோ எடுக்கப் போனன். அப்போது வீதாபதி உள்ளே ஓடிவந்து, "அப்பா, விஜயராக வா, எனது கடிகாரத்தைக் காணேம், நீ பார்த்தயா? எனது பணப்பையையும் காணேம். எனது சட்டைப்பையி லிருந்தன" என்று கேட்டான்.

"நான் பார்க்க வில்லையே, எப்போது முதல் காணேம்?"

"காலையில் சட்டையில் வைத்துவிட்டுப்போனேன். இப் போதுபார்த்தேன் காணேம்.

"சட்டையை எங்கு மாட்டி யிருந்தாய்?"

"கூடத்தில் மாட்டியிருந்தேன்."

"நான் பார்க்கவில்லையே."

"சரி." என்று சொல்லிக்கொண்டே வீதாபதி திரும்பி ஞன். அப்போது விஜயராகவன், தன் பெட்டியைத் திறந் தான். திறந்ததும் போகத் திரும்பின வீதாபதி பெட்டி பக்கம் திரும்பி, பெட்டியைப் பார்த்து, "இதோ இருக்கிறதே, கடியாரமும், பர்ஸும் (பணப்பை). அட, பேஷ். இப்படியும் உண்டா? நன்ருயிருக்கிறது." என்று சொல்லும் போது லக்ஷ்மியம்மாள் அவ்விடம் தோன்றினுள்."

"என்ன அகப்பட்டு விட்டதா?"

"ஆம், அகப்பட்டு விட்டது இந்தப் பெட்டியில் இருந்

யது. முதலில் கேட்டேன், தெரியவே தெரியாது என்ருன். அப்போதே ஸந்தேகித்தேன். கேட்கும்போது பெட்டியைத் திறக்காமலிருந்தான். நான் போகத்திரும்பினதும் பெட்டியைத் திறந்தான். திரும்பிப்பார்த்தேன். கையுங் களவுமாக அகப் பட்டு விட்டான். பேஷ்! உங்கள் தம்பி நல்ல ஆஸாமியாக வாத்தியார் பார்த்தார். இன்னம் என்ன போயிருக்கிறதோ?''

இதற்குள் கூட்டங் கூடி விட்டது. ராமபத்திரய்யர், கல் யாணியம்மாள் இருவரும் வந்து விட்டார்கள்.

விஜயராகவன் ஒன்றும் பேசாமல் விழித்தான். களவுங் கையுமாகப் பிடிபட்ட பிறகு அவன் என்ன செய்ய முடியும்?

ராமபத்திரய்யர் நாலைந்து வீடு தள்ளிக் குடியிருக்கும் போலீ ஸ் ஸப் இன்ஸ்பெக்டருக்குச் சொல்லி யனுப்பினுர். போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் வந்தார். விஷயங்களைச் சொல்லக்கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"என்ன, அப்பா, வந்த இடத்தில், உன்னை நல்ல ஸ்தி திக்குக் கொண்டு வர உத்தேசித்திருப்பவர் வீட்டிலா இந்தத் தொழில் செய்வது? கொஞ்சங் கூட நன்ருக இல்லையே. நீ ரொம்ப ஸாது, யோக்கியன் என்றல்லவா எண்ணியிருந்தோம். ஏன் இப்படி உனக்கு புத்திபோயிற்று. கடிகாரம் இல்லாமல் உனக்கு என்ன குறைவாகப்போயிற்று? நீதானே அவைகளைத் திருடிவைத்துக் கொண்டாய்?''

விஜயராகவன் சற்றுநேரம் பேசாமலிருந்தான். மறுபடியும் ஸப் இன்ஸ்பெக்டர் கேட்கவே, "கையும் களவுமாகப் பிடித்த பிறகு கூடவா, நான் ஆக்ஷேபிக்கவேண்டும். போதாதவேளை, இந்த மாதிரியாயிற்று. ஆனல் போதாதவேளை யென்ருல் குற் றம் போய்விடுமா. அதன் பலனையும் அனுபவிக்க வேண்டாமா. ஆம், இந்தக் குற்றத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.''

"சரி, இன்ஸ்பெக்டர்வாள், அவனை ஸ்டேஷனுக்குக் கொண்டு போங்கள், கம்ப்ளெய்ண்ட் எழுதிக்கொடுக்கிறேன்.''

ஸப் இன்ஸ்பெக்டர் சற்று தயங்கினுர். விஜயன் பார் வைக்கு குற்றவாளியாகக் காணப்படவில்லை.

அந்த ஸமயம் ஜானகி அவ்விடம் வந்தாள். நடந்து கொண் டிருந்தவைகளை உடனே யறிந்து கொண்டாள். அவளுக்கு

இன்ன செய்வதென்று தோன்றவில்லை. தனது பிரிய நண்பன் போலவும் ஸகோதரன் போலவுமிருந்து வந்த விஜயன் கடிகாரத்தைத் திருடியிருப்பானென்று அவளுக்குத் தோன்றவில்லை. என்ன காரணத்தாலோ இவ்விதம் அவன் மேல் குற்றம் ஏற்பட்டிருக்கிறதென்று தோன்றிற்று. அவஸரப்படாமல் இந்த விஷயம் ஆராய்ச்சி செய்யப்படுமானால், கடைசியில் அவன் நிரபராதியென்று ஏற்படுமென்று எண்ணினாள். ஆனால் விஜயன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விட்டால்,—அப்புறம் அவன் குற்றவாளியல்ல வென்று ஏற்பட்டாலும் அவமானம் போகாதே, தன் தகப்பனாரிடமும் தன்னிடமும் விஜயனுக்கு வெறுப்பு ஏற்படுமே என்று வருத்தப்பட்டாள்.

அவள் தன் தகப்பனண்டை போனாள்.

“அப்பா, அவஸரப்படவேண்டாம். இதில் ஏதோ சூது இருக்கிறதென்று தோன்றுகிறது.” என்று மெதுவாய்ச் சொன்னாள்.

“என்ன சூது? கையுங்களவுமாகப் பிடித்திருக்கிறபோது வேறு என்ன சாக்ஷி வேண்டும்? ”

“திருடும்போதா பிடித்தீர்கள் ?”

“திருடி வைத்திருந்தான். தன் பெட்டியிலிருந்து எடுக்கும் போது பார்த்து விட்டான் வீராபதி.”

“வீராபதியிருக்கும் போதா பெட்டியைத் திறந்தார்?”

“ஆமாம்.”

“அவரே திருடியிருந்து பெட்டியில் மறைத்து வைத்திருந்தால், ஸொத்துக்காரர் இருக்கும் போதா பெட்டியைத் திறந்து திருடின ஸொத்தைக் காட்டுவார்?”

அய்யர் யோசிக்கலானார். ஸப் இன்ஸ்பெக்டரும் இந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தார். அதனால் அவரும் சற்று யோசித்தார்.

“ஐயர்வாள், இதற்கு முன்னால் இவன் மேல் உமக்கு சற்றும் ஸந்தேகம் வந்ததில்லையே. வந்து ஒரு வருஷத்துக்கு மேலாகிறதே. இது வரையில் இவன் நடத்தையைப்பற்றி எப்போதாவது குறை கூற நேர்ந்ததோ. இது தான் முதல்

தடவையோ? எப்போதாவது, எதற்காவது இவன் மேல் நீங்கள் ஸந்தேகப்பட்டதுண்டோ?"

"இதுவரையில் ஒன்றுமில்லை."

"அப்படி யிருக்க திடீரென்று இவன் இப்படிச் செய்யக் காரணமென்ன? இரண்டொரு வாரமாக நீர் உமது பெண்ணை அவனுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கிறீர் அல்லவா? அப்படியிருக்க, அதுவும் மாப்பிள்ளையாகப் போகிற ஸந்தர்ப்பத்தில் தனது கௌரவத்தைக் குறைத்துக்கொள்வானா? இது விநோதமாகத் தோன்றவில்லையா? உமது பெண் சொல்லுகிறபடி இதில் ஏதோ சூது இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் சற்று யோசித்துச் செய்யும்நீர். கம்ப்ளெயண்ட் கொடுப்பதாயிருந்தால், நான் ஆக்ஷேபிக்க வில்லை. இருந்தாலும் அவஸரப்படுவது உசிதமல்ல."

வீதாபதி, சொத்தைப் பறிகொடுத்தவனுதலால், கோபம் மேலிட்டு, ஸப் இன்ஸ்பெக்டரை ஆக்ஷேபித்தான். கையும் களவுமாகப் பிடித்த பிறகுகூட தயை தாக்ஷண்யமென்னவென்று கேட்டான். தன் கடியாரம் நூறு ரூபாய் விலையுள்ளதென்றும், பணப்பை விலையுயர்ந்ததென்றும், இதைக்கண்டு பிடிக்காவிட்டால், தான் பணத்துக்கு அதிகம் அல்லாடவேண்டியிருக்குமென்றும் சொல்லி, அவ்விதம் தன்னைக் கஷ்டத்துக்கு ஆளாக்கமுயன்ற விஜயனை இலகுவில் விடக்கூடாதென்று வற்புறுத்தினன்.

ராமபத்திர ஐயர் சற்று யோசித்தார். அப்போது வீடு கூட்டும் வேலைக்காரி, அங்கு நடக்கும் விஷயங்களைப் பற்றித் தெரியாதவள், அறையில் யார் இருக்கிருர்கள் என்பதைக்கூட கவனியாமல் "கடுதாசி ஒன்று கீழே கிடந்தது." என்று சொல்லிக்கொண்டு அறைப்பக்கம் வந்தாள். போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் கதவண்டை யிருந்ததால், உடனே கையை நீட்டி அதை வாங்கிக் கொண்டார். அதை வாசித்துப் பார்த்ததும் அவருக்குக் கோபம் உண்டாயிற்று. வேலைக்காரியைப் போகச் சொன்னர்.

"ஐயர்வாள். இந்த கடிதம் நல்ல வேளையாக இப்போது கிடைத்தது. இந்தக் கேஸ் இப்படியே நிற்கவேண்டியது

தான். கடியாரம் திருடினது யார், என்திருடினன், என்ற எல்லா விவரமும் இந்தக்கடிதத்தால் தெரிய வரும்.

"அப்பா, ஸீதாபதி இந்தக் கடிதம் உன்னுடையதுதானே. உனது நண்பன் எழுதினதுதானே. அவன் யோசனையைக் கேட்டுத்தானே விஜயன்மேல் பழி போட்டாய்? திக்கற்றவனுக ஒருவன் பிழைக்க வந்தால் அவன் வாயில் மண்ணைப் போட்டுக் கெடுக்கவா பார்த்தாய்?"

இவ்விதம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்னதும் ஸீதாபதிக்குக் கோபம் உண்டாயிற்று.

"என்ன இன்ஸ்பெக்டர்? தாறுமாறுமாக உளறுகிறீர். யார் என்ன செய்தது. நானு அவன் மேல் பழி சுமர்த்துகிறேன். என்ன கடிதம்? யார் எழுதினது? யாருக்கு வந்தது? என்னென்னவோ சொல்லுகிறீரே." என்று கேட்டான்.

"என்ன கடுதாசி, வாசியுங்கள்!" என்றூர் அய்யர்.

கடிதம் இங்கிலீஷில் எழுதியிருந்தது.

ஸப் இன்ஸ்பெக்டர் கடிதத்தை வாசித்தார். யாவரும் திடுக்கிட்டார்கள்.

"அன்புள்ள ஸீதாபதி,

"உன்கடிதம் கிடைத்தது. உனக்குப் போட்டியா யிருக்கிறவனை எப்படியாவது ஒழித்துவிட முயலவேண்டியது நியாயந்தான். ஏதாவது அல்ப திருட்டு முதலிய ஏதாவது பழி போட்டு, அவனை அயோக்கியன் என்று ஸ்தாபித்து விட்டால், பெண்ணுக்குத் தகப்பனும் அவர் மனைவியும் பெண்ணும் அவன் மேல் கொண்டுள்ள அபிமானத்தை ஒழித்து விடுவார்கள். அப்புறம் உன்னை விட தகுந்த வரன் வேறு யார் அவர்களுக்குக் கிடைக்கபோகிருன். அந்தவீட்டுக்குச் செல்வமாக இருக்கும் விஜயனைத்துரத்த இதைத்தவிர வேறு வழியில்லை. காரிய சித்தி சீக்கிரம் ஏற்படுமென்று நம்பியிருக்கும் உனது நண்பன்,

"ரகுநாதன்."

ஸப் இன்ஸ்பெக்டர் "ஸீதாபதி, நீ தான் என்னுடன் வர வேண்டும். விஜயன், நாங்கள் எப்போதும் எண்ணி யிருக்கிறபடி, யோக்கியன்தான். அய்யர்வாள் என்ன யோசனை?"

"யோசனை யொன்று மில்லை. வீதாபதி இவ்வளவு அயோக்கியன் என்று நினைக்கவில்லை. அப்பா, இதோடு போதும். இப்பொழுதே, இந்த நிமிஷமே இந்த வீட்டை விட்டு,—இன்னும் அரைமணியில் ரெயில் புறப்படுகிறது—அந்த வண்டியில் நீ ஊர் போகவேண்டும் போகாவிட்டால், உன் மேல் கேஸ் நடக்கவேண்டியது தான். ஏன் இப்படிச் செய்கிறேன் தெரியுமா. உன் பெரியப்பா அவ்வளவு கடுமையா என்று என்னைக் கேட்பார். அதற்காக உன்னை விட்டு விடுகிறேன். இன்ஸ்பெக்டர், நீரும் என் மேல் தயை செய்து, இதை இப்படியே மறந்துவிடவேண்டும்.

"அப்பா, விஜயா, உன் விஷயத்தில் நான் ரொம்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன். உன்னை அனுவசியமாகக் கோபித்துக் கொண்டேன். ஏதோ அவன் பந்து, வந்தான், சிபார்சுடன் வந்தான். அதனுல் அவன் மேல் சற்று அபிமானம் ஏற்பட்டது. அதற்கு அவன் பாத்ரனல்ல. இனி நீ நம்ம வீட்டைச் சேர்ந்தவன், ஜானகி உன்னைச் சேர்ந்தவள். உனது வியாஜ்யத்தை முடித்து வைப்பது என்னைச் சேர்ந்தது. (இன்ஸ்பெக்டரைப் பார்த்து) இவன் இத்தனை நாளாக எங்கள் வீட்டில் வித்தியாஸமில்லாமல் எனது புத்ரன்போ லிருந்து கோபுவையும், ஜானகியையும் தன் தம்பி தங்கைபோல் பார்த்துவந்து ரொம்ப ஸாதுவாகத் தங்கக் கம்பியாக இருந்து வந்ததை லக்ஷ்யம் செய்யாமல் முன் பின் யோசியாமல் அவனை ஸ்டேஷனுக்குக்கொண்டு போகச் சொன்னேன். அதற்குப் பிராயச்சித்தம், ஏற்கனவே யோசித்ததுதான்; நடுவில் சற்று தயங்கினேன், ஜானகியை அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து, அவனை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியது."

"சரியான யோசனைதான். முன்பே நீங்கள் சொன்னது தானே." என்றுர் ஸப் இன்ஸ்பெக்டர்.

ராமபத்ரய்யர் வீதாபதியை வழியனுப்பப் போனுர். போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டரும் கூடப் போனுர். விஜயனும் ஜானகியும் தனிமையாக இருந்தார்கள்.

"நான் அப்போதே யோசித்தேன். ஏதோ அவனும் அத்தையும் குசுகுசு வென்று பேசிக்கொண் டிருந்தார்கள், 'எப்படி

யாவது அவனை ஒழித்து விடுகிறேன்' என்று. என்னவோ என்று ஸந்தேகமாயிருந்தது. அதனால்தான் அப்பாவை சற்று நிதானிக்கச் சொன்னேன்."

"என்னவோ ஈசுவரன் புண்ணியத்தில் இன்று என்மானம் தப்பிற்று. நீ பரிந்து பேசினாய். அதோடு தர்க்கங் கூடச் செய்தாய். அதனால்தான் ஸப் இன்ஸ்பெக்டர் கூட யோசித்தார். உனக்கு என்ன பிரதி உபகாரம் செய்யப் போகிறேன்?" என்று சொல்லிக்கொண்டே ஜானகியைப்பிடித்து அணைத்துக் கொண்டு கொஞ்சி விளையாடினான்.

"யாராவதுவந்து விடப்போகிறார்கள். அவன் போகிறதைப்பார்ப்போம். வாருங்கள்" என்றுசொல்லி எழுந்தாள் ஜானகி.

# ஹித சத்துரு

காலையில் சுமார் பத்து நாழிகையிருக்கும். சாலையில் அதிக நடமாட்டம் இல்லை. சுமார் நாற்பத்தைந்து வயதுள்ள ஒரு பிராமணர் சாலையோரமாக உள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு ஒரு பற் குச்சியால் பல் துலக்கிக்கொண்டிருந்தார். சிறிது நேரம் பல் துலக்குவதும், எச்சில் உமிவதும், பிறகு சுற்று முற்றும் பார்ப்பதும், சற்று நேரம் ஆழ்ந்த யோசனை யிலிருப்பதுமா யிருந்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு வாலிபன், சுமார் பதினெட்டு வயதிருக்கும், அவ்வழியே வந்தான். அவனைக் கண்டதும், அந்தணர் எழுந்து வாலிபன் அருகில் வருவதை எதிர்பார்த்தவராக நின்று கொண்டிருந்தார். வாலிபன் வந்ததும், அவர் முன் நின்று, "ஐயா, வேதபுரிக்கு இன்னும் எத்தனை கல்லிருக்கும்?" என்று கேட்டான்.

"வேதபுரி இன்னும் பத்து கல் உள்ளது. அங்கு எங்கே போகிறாய்?"

"சும்மா தான் போகிறேன்."

"சும்மா என்றால், அங்கே யாராவது பந்துக்கள் இருக்கிறார்களா?"

"இல்லை. அங்கே ஒருவரும் இல்லை."

"பின்னே?"

"இல்லை——" சற்று யோசித்தான் வாலிபன். அவரிடம் சொல்லலாமா சொல்லக் கூடாதா என்று தயங்கினான். பிறகு, "ஊரிலிருக்க சரிப்படவில்லை. அதனால் வயிறு வளர்க்க வேண்டி அந்த ஊர் போகிறேன்."

"ஏன், எதாவது தாயார் தகப்பனுடன் சண்டை போட்டுக்கொண்டு வந்து விட்டாயோ?"

"தாயார் தகப்பனுர் காலமாகி வெகு நாளாகிறது."

"என்னிடம் உன் விருத்தாந்தத்தைச் சொல்லுவாயானுல், என்னுல் ஏதாவது உபகாரம் செய்ய முடியுமானுல் செய்கிறேன. —வா, என்னுடன். இந்த வாய்க்காலுக்குப் போவோம்—சொல், உன் சங்கதியை."

பிராமணர் பல் குச்சியை எறிந்து விட்டு கால்வாயண்டை போனுர். பையனும் அவருடன் போனுன். அந்தணர் பல் துலக்கினதும், துணிதுவைக்கப் போட்டிருந்த ஒரு கல்லில் உட்கார்ந்தார்: பையனை கரையில் புல்லில் உட்காரச் சொல்லி,

"என்னப்பா, சொல், கேட்போம்" என்று கேட்டார்.

"நானிருப்பது மருதங்குடி. மகாதேவ தீக்ஷதருடைய ஸீமந்தபுத்ரன். நான் பிறந்து ஐந்து வருஷமான பிறகு எனது தாயார் இறந்து போனுர். மறுபடி கல்யாணம் செய்து கொண்டார். எனது சிறு தாயாருக்கு என்னிடத்தில் அபிமான மென்பதே கிடையாது. அது தான் ஸகஜம். லோகம் முழுவதும் அப்படித்தான். அதைப்பற்றி நான் குறை கூறுவதற்கில்லே. அவளுக்கு என் தகப்பனுர் விஷயத்திலும் அபிமானம் கிடையாது. அவளுக்குப் பிறந்தகத்து ஜனங்களிடத்தில் தான் பிரியம் அதிகம். ஸொத்துக்களை யெல்லாம் பல விதத்தில் அழித்து விட்டாள்; தன் உடன் பிறந்தார்களுக்கு பல விதத்தில் பண உதவிசெய்து அவர்களைப் பணக்காரர் கள ாக்கினுள். என் தகப்பனுரைப் பலவிதத்தில் ஹிம்ஸை செய்து வந்தாள். இவை யெல்லாம் கூட வருத்தமில்லே. என் தகப்பனுரிருந்தால் நான் கொஞ்சங் கூடக் கஷ்டப்படவேண்டியதில்லே. அவருக்கு எனது சிறு தாயார் மருந்திட்டு மனஸை மாற்றின பிறகு கூட, அடிக்கடி அவர் என்னை ஹிம்ஸித்து வந்தாலும், சில ஸமயத்தில் என்னிடம் பிரியமாகவே யிருந்து வந்தார். வாஸ்தவத்தில் நான் ஸ்வல்பம் கஷ்டப்பட்டாலுங் கூட அவர் ஸகிக்க மாட்டார்: எனது சிறு தாயார் முன்னிலேயில் தான் அவர் மனம் என்மேல் வெறுப்பாயிருக்குமே யொழிய, அவள் பிறந்த ஊர் போயிருந்தாலுஞ்சரி, வீட்டுக்கு வெளியில் நாங்கள் தனிமையாக இருந்தாலுஞ் சரி, அவர் என்னிடம் பிரியமாகவே இருந்தார். ஆனுல்

எனது சிறு தாயார் இதோடு நிற்கவில்லை. ஸொத்துக்களைப் பலவிதத்தில் அழித்து, மிச்ச மானவைகளைத் தன் ஸ்வாதீனம் செய்து கொண்டு, என் தந்தையை விஷம் வைத்துக் கொன்று விட்டாள். அதன் பிறகு நான் இருப்பது கூட அவர்களுக்குப் பொறுக்கவில்லை. எனக்கும் விஷம் வைக்க பிரயத்தனப்பட்டாள். ஆனால் தெய்வம் என் பக்கமிருந்தது. நான் தப்பி வந்து விட்டேன். அவளுடைய உடன் பிறந்தார்கள் துஷ்டர்கள். அங்கிருந்து ஸொத்தை யடையப் பிரயத்தனப்படுவது ஆபத் தென்று தோன்றிற்று. அதனால் வேதபுரி போய்ப் பிழைக்கலா மென்று புறப்பட்டேன்."

அந்தணர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு, "சரி, ஸ்நானம் செய். வீட்டுக்குப் போவோம். வெயில் அதிகமாயி ற்று. இனிமேல் நீ வேதபுரி போகமுடியாது. இன்று, இங்கேயேயிரு. வேதபுரியில் எனக்குத் தெரிந்தவர்கள் உண்டு. அவர் களிடம் சொல்லி உனக்கு பிழைப்புக்கு ஏற்பாடு செய்கி றேன். அல்லது இங்கேயே ஏதாவது வழியிருந்தாலும் சரி" என்றார்.

வாலிபன் "ஆகா" என்று ஒப்புக் கொண்டான். இருவ ரும் ஸ்நானம் செய்தார்கள். வாலிபன் தன் துணியை உலர்த் தி உடுத்திக் கொண்டான். அந்தணரும் அது வரையில் அவனு க்காகக் காத்திருந்து அவனையழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

கீரனூர் என்பது வேதபுரிக்கு பத்து நாழிகை தூரத்தில் உள்ளது. அது ஒரு சிற்றாற்றங்கரை யோரத்திலுள்ளது. அதற் கும் வேதபுரிக்கும் நல்ல சாலை கிடையாது. அவ்வூரைச்சுற்றிலும் பத்து நாழிகை வழிக்கு வேறு கிராமம் ஒன்றுமே கிடையாது. அதிலுள்ள ஜனங்கள் ஒரு சிறு குடியரசுபோல் தங்கள் சொந் வியவகாரங்களை கவனித்து வந்தார்கள். வேதபுரியில் உள்ள தாசில்தார் வருஷத்துக்கு ஒரு முறை கீரனூருக்கு சிப்பாய்களு டன் வந்து வரியை வாங்கிக் கொண்டு போவார். அவருக்குக் கீழ்ப்பட்ட எந்தராஜாங்க உத்யோகஸ்தரும் அவ்வூருக்கு ராஜாங்க வேலை யாகப் போவதில்லை. அவ்வூரில் மாந்தரீகர்களும் அதர்வ ண வேதம் பயிற்சியுள்ளவர்களும் அதிகம். ஏதாவது உத்யோக

தோரணையாகப் போய் அதிகாரம் காட்டினால், கண்டிப்பாக ஏதாவது ஆபத்து வந்து சேரும். ஆனால் வேதபுரி தாசில் தாருக்கு மாத்ரம், அங்கு தாராளமாக வந்து போக அனுமதியு ண்டு. ஏனென்றால், கிராமம் முதல் முதலில் ஏற்பட்ட போது வேதபுரியில் முன்பு ஆண்டுவந்த அரசர் ஒருவர் தம்மை ஆபிசா ரப்பிரயோகங்களிலிருந்து காத்துக்கொள்ள வேண்டி, கிராமத்தை ஏற்படுத்தி, அதில் தமக்கு வேண்டியவர்களாக சில பிராம்ம ணர்களைக்குடியேற்றினர். அவர்கள் தங்கள் அரசருக்கு யாதொரு கெடுதலும் வராமல் பார்த்துக் கொள்வதோடு அரசருடைய பிரதிநிதிகளுக்கும் அவ்விதம் அபயதானம் செய்வதாயும் வாக் குக் கொடுத்திருந்தார்கள். வேதபுரி தாசிலுக்கு மாத்ரம் அரசரு டைய பிரதிநிதியாக, ராஜவிருதுகள் உண்டு. கிராமத்துக்கு அவர் வரும்போது, ராஜாவருவதாகவே ஜனங்கள் பாவித்து, ராஜமரியாதைகள் செய்வார்கள். அவர் விஷயமாக எந்தக் கெ டுதலும் எவரும் செய்ய மாட்டார்கள். வருவதற்கு ஒரு மாஸத் துக்கு முன்னமேயே அறிவிப்புவரும். அதற்குள்ளாக, ஜனங் கள் வரித்தொகையைவஸூலித்து சேர்த்து வைத்திருந்து, தாசி ல்தார் வந்த வன்று, ஊர்த்தலைவர், ஜனப் பிரதிநிதியாக இருந்து வரியென்று சொல்லாமல் காணிக்கையாக ஸமர்ப்பிப்பார். பண மேயன்றி வேறு வகைக் காணிக்கைகளும் ஸமர்ப்பிப்பதுண்டு. தாசில் வருவதற்கு இன்னம் மூன்று வாரம் இருந்தன. ஒரு நாள் மேலே சொன்ன அந்தணர்-விசுவேசுவா தீக்ஷிதர் என்று பெயர்—வாலிபனையழைத்துப் பேசினர். வாலிபன் அந்தணர் வீட்டுக்கு வந்து மூன்று நாளாயிற்று. தக்க துணையகப்படாததால் வாலிபனை வேதபுரிக்கு அவர் அனுப்பவில்லை. "பையா, இன் னும் இருபது நாளில் தாசில் வருகிறார், காணிக்கையை ஏற் றுக்கொள்ள. அப்போது அவரிடம் சொல்லி ஏதாவது வழி உனக்குச் செய்கிறேன். அதுவரையில் பொறுத்திரு. இங் கேயே இருப்பதற்கும் மார்க்க மிருக்கிறது. நாட்டா ண்மை நாராயண சர்மாவுக்கு ஒரு ஆள்வேண்டியிருக்கிறது. நல்ல யோக்கியனும் புத்திசாலியாயும் ஒருவன் கிடைத் தால், வைத்துக் கொள்வதாகச் சொன்னார். பத்து பொன்னு க்குக் குறையாமல் பதினைந்து பொன்வரையில் வேதனமாகக்

கொடுப்பார். தொகை கொஞ்சம் முன்னைப்பின்னாக இருந்தாலும் அவர் நல்லவர். உன்னை நல்ல ஸ்திதிக்குக்கொண்டு வருவார். அவர் வீட்டிலேயே சாப்பிடலாம். அவர் வீட்டில் நித்யம் வேளைக்கு இருபத்தைந்து, முப்பது இலைக்குக் குறையாமல் விழும். ஆகையால் நீ சாப்பிட்டால் அவருக்குக் குறைந்து போய்விடாது.''

''ஏதோ, நீங்கள் தான் என்னை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும், எந்தவிதம் தங்களுக்கு யுக்தமென்று தோன்றுகிறதோ அப்படியே செய்யுங்கள்.''

'' கீரனூர் நாட்டாண்மை யென்றால் வேதபுரி முழுவதும் நடுங்கும். ராஜாவுக்குக் கூட சற்று பயந்தான். இப்போதிருக்கும் ராஜாவுக்கு பிரபிதாமகன் முன்பு வேதபுரியில்தான் இருந்தார். அப்போது பலவகையில் அவருக்குக் கஷ்டங்கள் நேர்ந்தன. நாட்டாண்மையின் பிதாமகருக்குப் பிதாமகனை யடுத்து அவருடைய ஸகாயத்தால் கஷ்டங்களி விருந்து நீங்கினார். அவரை வேதபுரிக்குக் கூட்டிக்கொண்டு வந்து அவருடைய உத்தாவின் பேரில் நடுக்காட்டிலுள்ள இந்த ஊரை ஏற்படுத்திக் கொடுத்தார். அந்தப் பெரியவர் நாளில்தான் இந்த ஊர் ஏற்பட்டது. அவருடைய உபாஸனா தெய்வமாகிய காளி ரொம்ப சக்திவாய்ந்தது. கேட்ட தெல்லாம் கொடுக்கக்கூடியவள். அவளே லக்ஷ்மி, அவளே துர்க்கை, அவளே ஸரஸ்வதி, அவளே எல்லாம் என்ற பாவத்துடன் அவளை உபாஸிக்க வேண்டும். நீ நாட்டாண்மையின் அரண்மனையி விருந்தாலுஞ்சரி, வேதபுரிக்குப் போவதானாலுஞ்சரி நான் உபகாரம் செய்கிறேன். உனக்கு எங்கிருக்க வேண்டுமென்று அபிப்பிராயமோ சொல்.'' என்றார்.

விசுவேசுவர தீக்ஷிதரைக் கண்டது முதல் வாலிபனுக்கு —ஸ்ரீதரன்— அவர்மேல் அதிக பிரியம் உண்டாயிற்று. தனது தந்தைபோல் பாவித்தான். அவர் மனைவி லலிதாம்பாளும் அவனிடம் அதிக அன்பும் ஆதரவுமாக இருந்தாள். தாயையும் தந்தையையும் இழந்து, மாற்றாந் தாயால் அடித்துத் துரத்தப்பட்டு, திக்கற்று, பிழைக்க வழியின்றித் தவிக்கும் பையனுக்கு இவ்விடம் ஸௌக்கியமாயிருந்தது. விச்வேசுவர தீக்ஷிதருக்கு ஒரு பெண் உண்டு. அவள் பார்க்க வெகு ஸுந்தரமாயும், அவள் முகமலர்ச்சியாயும், சிரித்த பார்வையாயும், சந்திரனை விடத்

தெளிவாயுமிருந்ததால், அவளுக்குச் சந்திரவதனியென்று பெயரிட்டார்கள். சந்திரவதனிக்கு பத்து வயதுதா னிருக்கும். அவ்வூரில் அவளுக்கேற்ற வயதுள்ள வரனில்லாததாலும், வேறு சில காரணங்களாலும், இன்னும் கல்யாண மாகவில்லை. லலிதாம்பாள் ஸ்ரீதரன் வந்த வன்றே அவனுடைய குலம் கோத்திரங்களை விசாரித்து, தன்பெண்ணுக்கு ஏற்ற புருஷன் தான் என்று தீர்மானம் செய்து விட்டாள். தன்புருஷ னிடமும் தன் அபிப்பிராயத்தைச் சொல்லி அவரைஸம்மதிக்கச்செய்தாள். சந்திரவதனியும் ஸ்ரீதரனிடம் வாத்ஸல்யம் கொண்டு, அவனையே புருஷனாக அடையப்போவதாய் எண்ணி ஸந்தோஷமடைந்தாள். ஏனென்றால் ஸ்ரீதரன் நல்ல அழகு வாய்ந்தவன். குணசாலி. இன்பமாகப் பேசக் கூடியவன்.

## III

ஸ்ரீதரன் கிரனூருக்கு வந்து ஒரு வர்ஷமாயிற்று. நாட்டாண்மை நாராயண சர்மாவிடம் அவன் வேலைக் கமர்ந்துகொண்டான். அவனுக்கு சம்பளம் கொஞ்சமென்றாலும், அவன் செல்வாக்கிலும் அந்தஸ்திலும் உயர்ந்து வந்தான். சிலநாள் விச்வேசுவர தீக்ஷதர் வீட்டிலும், சிலநாள் நாட்டாண்மை அரண்மனையிலும் சாப்பிட்டுவந்தான். ஊரிலுள்ள எல்லாரும் அவனைக் கொண்டாடினார்கள். நாட்டாண்மையும் அவனிடத்தில் அதிகப் பிரியமும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். அநாதையாகச் சோற்றுக்குத் துணிக்கு வழியில்லாமல் தவித்து வந்த ஒரு பையன் இவ்விதம் தம்மைக் கூட அடக்கியாளக் கூடிய அந்தஸ்தை யடைந்தது, விச்வேசுவர தீக்ஷதருக்கு சற்று பொறுக்கவில்லை. அவனுக்குத் தம் பெண்ணைக் கல்யாணம் செய்துவைப்பதாக இருந்த எண்ணங் கூட சற்று குறைந்தது. அறியாத பெண்ணாகிய சந்திரவதனி மாத்திரம் அவனிடம் பிரியம் கொண்டிருந்தாள். அந்தப் பிரியம் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தது.

இப்படியிருக்க விச்வேசுவர தீக்ஷதர் ஸ்ரீதரன் மேல் தீராப் பகை கொள்ள ஒருஸந்தர்ப்பம் நேர்ந்தது. நாட்டாண்மை உத்தரவின் பேரில் ஸ்ரீதரன் தீக்ஷதரிடம் சற்று அதிக கண்டிப்பாயிருந்து விட்டான். அவ்வளவு கண்டிப்பாக இருந்திருக்க

வேண்டிய தில்லே. சிறுவயதின னுகையாலும், புதிதாக அந்தஸ்து ஏற்பட்டதாலும், அவன் தன்னைமறந்து விட்டான். இதற்குத் தக்கபதில் செய்ய வேண்டுமென்று தீக்ஷதர் வைராக்கியம் கொண்டார்.

கீரனூர் முதலில் ஏற்பட்டபோது ஆபிசாரப் பிரயோகம் தெரிந்தவர்கள்தான் அதிகம். அந்த முறைகள் நாளடைவில் குறைந்து போயின. அது தெரிந்தவர்கள் இப்போது ஸ்வல்பந் தான். அவர்கள் நாட்டாண்மையினிடம் அனுமதிபெற்றே பிரயோகங்கள் செய்யலாம். அதுவும் பிற ஊர்களில்தான். ஊருக்குள் எதுவும் செய்யக்கூடாது. அவ்வித கட்டுப்பாட் டுக்குள் அடங்கி நடப்பதாக நாட்டாண்மைக்கு ஸத்தியம் செய்து கொடுத்திருந்தார்கள். விச்வேசுவர தீக்ஷதர் மாத்ரம் ஸத்தியம் செய்து கொடுத்திருந்தும், அதற்குக் கட்டுப்படாமல் இரண்டொருதடவை முறைதவறி நடந்து விட்டார். இதனல் அவருக்கு ஊரில் மதிப்பே கிடையாது. அவர் பெண்ணுக்கு வரனகப்படுவதும் அரிதாகி விட்டது. நல்ல வேளேயாக ஸ்ரீதரன் வந்தான். அநாதை, அவனைக் கெடுத்தால் தம் பெண் ணும் கெடுவாள்; ஆகையால், அவர் ஸ்ரீதரனைக் கெடுக்கமாட்டார் என்று எவரும் ஸ்ரீதரன் விஷயத்தில் தலையிடவில்லை.

ஆனல் இப்போதோ, தீக்ஷதர் தீராப் பகை கொண்டுவிட் டார். அதுமாத்ரமல்ல, வெளிக்கு அதிக விசுவாஸம் பாராட்ட லானர். நிஷ்கபடியான ஸ்ரீதரனும் ஒன்றும் ஸந்தேகப்படாமல் எப்போதும் போலவே இருந்து வந்தான்.

கீரனூர் காளிகோயிலுக்கு அரை நாழிகை வழி தூரத்தில் ஒரு சிறு கருவேலங்காடு உண்டு. அதில் ஒரு அரசமரத்தடியில் ஒரு பெரும் புதையலிருப்பதாக வெகு காலமாக ஒரு வதந்தி உண்டு. அதைக்காளியேகாத்து வருவதாகவும், அதையடையவிரு ம்பினல் ஸர்வலக்ஷணமும் அமைந்த ஒரு பிராமணரைப் பலியிட வேண்டு மென்றும் ஐதீகம். ஊர் முழுவதும் இது தெரியும். ஆனல் எவரும் அதையடைய முயலக் கூடாதென்று நாட் டாண்மையின் ஆஜ்ஞை. அதனல் அந்தப் புதையலே இதுவரை எவரும் அடைய முயலவில்லே.

விச்வேசுவா தீக்ஷதர் தமது பகையைத் தீர்த்துக்கொள்ள

வும் புதையலைப்பெறவும் நல்ல ஸந்தர்ப்பம் நேர்ந்ததென்று ஸந்தோஷப்பட்டார். ரகஸ்யமாக இந்தக்காரியத்தை முடித்து விட்டு, அது வெளியில் வாரதபடி ஸேதுயாத்ரை போவதாகப் பாசாங்கு செய்ய உத்தேசித்தார். அதன்படியே ஸேதுயாத்திரை செய்யப்போவதாக ஊரில் சொல்லிக்கொண்டார்.

## IV

சந்திரவதனி கொஞ்சகாலம் ஸ்ரீதரனுக்கு வாழ்க்கைப்படப்போவதாக எண்ணியிருந்தாள். அது அவளுக்கு பிரியமாகவே இருந்தது. ஸ்ரீதரனுக்கு வாழ்க்கைப்படுவதில் அவளுக்கு ஸந்தோஷந்தான். ஆனால் அவளுடைய ஸந்தோஷத்துக்கு சீக்ரம் அழிவுவந்தது. தீக்ஷிதர் அவன்மேல்பகைகொண்டதில் வேறு வரன்தேட நிச்சயித்துவிட்டார். அவர் மனைவி லலிதாம்பாளும் இதற்கு ஸம்மதித்தாள். அவ்வூருக்குப்புதிதாக ஒரு அந்தணர் வந்திருந்தார். வந்து இரண்டு மூன்று வாரமாயிற்று. லலிதாம்பாளுக்கு ஐந்தாறு முறைகள் விட்டு ஏதோபாத்தியமாம். அவர் மதுராபுரிக்கு அருகில் விஜயபுரியில் உள்ளவர். சந்திரசேகரய்யர் என்று பெயர். ஆசிசாரம் கற்றுக்கொள்ள வேண்டி கீரனூர் வந்தார். உறவு தெரிந்ததும் தீக்ஷிதர் வீட்டில் குடி கொண்டார்.

அவருக்கு ஒரு புத்திரன் உண்டு. நன்றாய் அத்யயனம் செய்தவன். புத்திசாலி, ஸொத்துண்டு. இதைத் தவிர, வேறு நல்லவரன் என்ன வேண்டும்! கல்யாணம் நிச்சயமாயிற்று. நாளும் ஏற்பாடாயிற்று.

இவ்விதம் ஏற்பாடானது சந்திரவதனிக்கு வருத்தம். ஆனால் அவள் என்ன செய்யக்கூடும். நாளுக்கு நாள் அவளுக்கு ஸ்ரீதரன் மேல் பயபக்தியும் அன்பும் அதிகமாகிக் கொண்டு வந்தன. எவ்விதமாகவாவது இந்த ஏற்பாடு தவறிப்போகக் கூடாதா என்று காளியை தினந்தோறும் வேண்டிக்கொண்டுவந்தாள்.

இப்படியிருக்க ஒரு நாள் தன் வீட்டில் ஒரு அறையில் பகலில் படுத்துக்கொண் டிருந்தாள். சற்றுத் தூக்கக் கலக்கமாயிருந்தது. அருகில் கூடத்தில் அவள் தகப்பனாரும் தாயாரும் பேசிக்கொண் டிருந்தார்கள். அவள் தாயார் கூப்பிட்டாள். "'குழந்தே''—எழுந்து போனால் ஏதாவது வேலை செய்யவேண்

டிவரும் என்று சோம்பலால் தூங்குபவள்போல் பாசாங்கு செய்து பதில்சொல்லாம லிருந்துவிட்டாள். கூப்பிட்டதனுல் தூக்கக்கலக் கம் போய்விட்டது. அவர்கள் பேசுவதைக் கவனிக்கலானுள்.

"இப்போது எதற்காக ஸேதுயாத்ரை?"

"ஸேதுயாத்ரைக்கு நாளென்ன, நக்ஷத்திரமென்ன?"

"இல்லை, எப்போது வேண்டுமென்ருலும் போகலாம். கல்யாணத்துக்கு நாள் வைத்திருக்கிறது. இன்னும் சரியாக ஒரு மாஸமில்லை. பெண்ணே குதிர்போல் வளர்ந்து விட்டது. ஊரெல்லாம் ஹேளனம் செய்கிருர்கள். அதைக் கவனிக்காமல் ஊர் சுற்றிக் கொண்டா இருக்கிறது?"

"ஸமாச்சாரம் வேறு. இரண்டு காரணத்தை உத்தேசித்து இந்த ஏற்பாடு."

"என்ன?"

"அந்தப் பையன் ஸ்ரீதரன், அவனை ஒழித்து விடவேண் டும். அவன் திமிர்பிடித்துப் போய்விட்டான்."

"என்ன?"

"அவன் என்னை மிகவும்அலக்ஷியம் செய்து உதாஸீன மாகப் பேசினுன். அது எனக்குப் பொறுக்கவில்லை. அவனை ஒழித்துவிடவேண்டும். அதற்குவழி அவனைக் காளிக்கு பலி யிட்டுப் புதையலை எடுத்துக்கொண்டு, அது தெரியாமலிருப்ப தற்காக ஸேதுயாத்திரை வியாஜம் சொன்னேன். கொஞ்ச தூரம் போய்க் கல்யாணத்துக்கு அவர் அவஸரப்படுத்துவதாகச் சொல்லித் திரும்பி விடுவோம். அவன் எங்கேயோபோய் விட்ட தாகக் கதை கட்டிவிடுவோம்."

"அவன் இப்போதுசற்று திமிர்பிடித்துத்தான் அலைகிருன். முன்பிருந்த ஸ்திதியைக்கொஞ்சமும் நினைக்கவில்லை. அவனை ஆளாக்கிவிட்டது நாம் என்பதைக்கட்டோடு மறந்துவிட்டான். ஆனுல்இதுவிஷயத்தில்அதிகஜாக்கிரதையாகஇருக்கவேண்டும்."

"இதை ஒருவரிடமும்சொல்லிவிடாதே."

லலிதாம்பாள் இவ்விஷயத்தைபரமரகஸ்யமாக வைத்திருப் பதாய் ஒப்புக்கொண்டாள். பிறகு பேச்சு வேறு விஷயங்களில் சென்றது.

சந்திரவதனி இதைக்கேட்டதும் பரம துக்கத்தை யடைந்

தாள். மகாபாபமான ஒரு செயலைத் தன் தகப்பனார் செய்ய உத்தேசிக்க, அதற்குத் தன் தாயார் ஸம்மதித்தாளே என்று வருத்தப்பட்டாள். அவர்களுக்கு தான் பெண்ணாய்ப் பிறக்க நேர்ந்தது தனது துர்ப்பாக்கியமென்று கலங்கினாள். அவனிடம் பிரியமாக நடந்து அவனைக் கெடுக்க உத்தேசிக்கிறதை எண்ணி "ஆஹா! அவருக்கு இவர்களுடைய சூது ஒன்றும் தெரியாதே. நிஷ்கபடியாக அவர் இவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் நடந்து கடைசியில் இவர்களுடைய சூதில் அகப்பட்டு உயிரிழக்க நேரிடுமே. யார் அவருக்கு தக்க சமயத்தில் உதவி செய்யப் போகிறார்கள். நானே அவருக்கு விஷயங்களைச் சொல்லி அவரைத் தப்பித்துக்கொள்ளும்படி சொல்லட்டுமா? அதனால் நமது தாய்தகப்பனாருக்குக் கெடுதலேற்படக்கூடாதே. இரண்டுபேர்களுக்கும் யாதொரு ஆபத்தும் வராமல் நானும் இதில் அகப்பட்டுக்கொள்ளாமல் இருக்கும்படி என்ன உபாயம் செய்யலாம்" என்று பலவாறு யோசித்தாள். அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கடைசியில் அவள், இன்னும் என்ன நடக்கிறதென்று பார்ப்போம், அதற்குத் தகுந்தபடி யோசிப்போம் என்று தீர்மானித்தாள். மறுநாள் தீக்ஷதர் ஸ்ரீதரனிடம் ஸேதுபோவதாகவும் அவனும் கூடவந்தால் ஸௌகர்யமாயிருக்குமென்றும் சொன்னார். அவன் ஒப்புக்கொண்டான். யாத்திரைக்கு நாள் குறிப்பிட்டாயிற்று. இனிமேல் தாமஸித்தல் காரியம் கெட்டுப் போகுமென்று பெண்மணி பயந்தாள். ஸமயம் வாய்த்தவுடன் வாலிபனிடம் சொல்லி விடுவதாகத் தீர்மானித்தாள். அன்று மாலையில் அவள் தாயார் வீட்டுக் கொல்லையில் வேலையாயிருந்தாள். தீக்ஷதர் வெளியில் போயிருந்தார். சந்திரவதனி ஒரு சமயம் ஸ்ரீதரன் வரலாமென்று அவனுக்காக வீட்டின் முன்புறத்தில் காத்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீதரனும் வந்தான். உடனே உட்கார்ந்து கொண்டிருந்த பெண்மணி எழுந்து நின்றாள்.

"உன் தகப்பனார் இருக்கிறாரோ?"

"இல்லை"

"வந்தால், நாளையதினம் நாலையில் நான் எழுப்பவருவதாகச் சொல்."

இவ்விதம் சொல்லிவிட்டுப் போகத் திரும்பினான்.

"அவஸரமோ? ஒரு வார்த்தை சொல்லவேண்டும்."

தான் ஒருவரனென பேச்சு வந்தது முதல் ஸ்ரீதரன் அவளுடன் அதிகம் பேசுவது இல்லை. அவளும் அவனிடம் பேச நாணுவாள். இப்போது தைரியமாக அவள் நின்று வார்த்தை சொல்லவேண்டினது அவனுக்குச் சற்று வியப்பா யிருந்தது. அவளை ஏற இறங்கப் பார்த்தான். என்ன தன்னிடம் தனிமையில் பேச விரும்புகிறாள் என்று ஆலோசித்தான். பிறகு "என்ன விசேஷம்? அவஸர மொன்றுமில்லை. இன்னும் அரைநாழிகை தாமஸிக்கலாம்." என்றான்

பெண்மணி பேசத் தயங்கினாள். என்ன ஆபத்து நேருமோ விஷயங்களைச் சொன்னால், என்று கலங்கினாள். பிறகு தன் மனஸை ஒருவாறு திட்டப்படுத்திக் கொண்டு, "தங்களிடம் ஒருவிஷயம் சொல்லவேண்டும்." என்றாள்.

"சொல்லேன்."

"அதற்கு முன் ஒன்று கேட்கவேண்டும். நான் சொல்லும் விஷயத்தை வெளியில் சொல்லக்கூடாது."

"என்ன அப்படிப்பட்ட விஷயம்?"

"ரகஸ்யமாக வைத்திருப்பதானால் சொல்லுகிறேன்."

"விஷயத்தைச் சொல்லாமல் நான் எப்படி வாக்குக் கொடுக்கமுடியும்?"

"வாக்குக் கொடுத்தால்தான் நான் சொல்லலாம். அது எப்படிப்பட்ட விஷயமானாலும் நீங்கள் வெளிவிடுகிறதில்லையென்று வாக்குக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் சொல்ல முடியாது. இருந்தாலும் நான் சொல்லவேண் டியதாகவும் இருக்கிறது. வெளியில் தெரியவும் கூடாது. உங்கள் ஸௌகர்யத்தை உத்தேசித்துத்தான் அவ்விஷயம்."

"சரி, எவரிடமும் சொல்லவில்லை."

"அப்படிச் சொன்னால் போதாது. விஷயத்தைக் கேட்ட பிறகு கோபங்கொண்டு—"

"ஸ்ரீதரன் ஒரு தடவை வாக்குக்கொடுத்து விட்டால் மறுபடி ஸூர்ய சந்திரர்கள் தென்வடலாகப் போனாலும் மாறமாட்டான்."

"சரி, சொல்லுகிறேன். அவஸரப்படாமல், கோபங் கொள்ளாமல் கேளுங்கள். முன்பு என் தகப்பனுரை நாட்டாண்மை பேச்சைக் கேட்டுக்கொண்டு உதாஸீனமாகப் பேசினீர்களே, ஞாபகமிருக்கிறதா?"

"ஆம், அதற்கென்ன? சற்றுப் பதட்டமாயிருந்துவிட்டேன். மறுநாளே அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். அதற்கென்ன இப்போது?"

"இப்போதும் அவர் அதைஞாபகத்தில் வைத்திருக்கிருர்."

"அதற்காக என்ன செய்யப் போகிருர்?"

பெண்மணி மறுபடியும் தயங்கினுள்.

"என்ன சொல், பயப்படாதே. எவரிடமும் நான்சொல்ல மாட்டேன்."

"உங்களைக் காளிக்குப் பலிகொடுக்க உத்தேசித் திருக்கிருர். பலிகொடுத்துப் புதையலை எடுத்துக்கொண்டு அதை மறைபதற்காக ராமேசுவரம் போவதாக நடிக்கப்போகிருர்."

"சிவ, சிவ, ஆனுல் அப்படிச் செய்யக்கூடியவ ரல்லவே. மேலும் எனக்கு உன்னைக் கொடுப்பதாக வல்லவோ சொல்லியிருக்கிருர். அது நாட்டாண்மைக்கும் தெரியுமே."

"அந்த ஏற்பாடெல்லாம் மாறிவிட்டது. இங்கொரு மாமா வந்திருக்கிருரே, அவர் பிள்ளையை நிச்சயம் செய்திருக்கிறது."

"இது நிச்சயந்தானு. என்னிடம் அதிகப் பிரியமாகப் பேசுகிருரே."

"அதெல்லாம் மேலுக்கு. ஆகையால் ஜாக்கிரதையாக இருங்கள். ஆனுல் ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் தப்பித்துக்கொள்ள வழிதேடுங்கள். இதற்காக என் தகப்பனுரைக் கெடுக்க வேண்டாம்."

ஸ்ரீதரன் சற்று யோசித்தான்.

"என்று நாள் வைத்திருக்கிறது?"

"அது இன்னும் தெரியவில்லை. தெரிந்தவுடன் சொல்லுகிறேன். நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். ரகஸ்யமாயிருக்கவேண்டும். கோபமும் கூடாது. அம்மா வருகிருள். நான் சொன்னதற்கு பதில்?"

"சரி, அப்படியே ரகஸ்யமாயிருக்கும். கோபமுங்கிடையாது."

லலிதாம்பாள் அங்கு வரவே, ஸ்ரீதரன் அவளுடன் சற்றுப் பேசியிருந்து போனான். அவள் தன் பெண்ணிடம் சற்றுஞ் சந்தேசங் கொள்ளவில்லை.

V

ஸ்ரீதரன் சந்திரவதனியினிடம் தனக்கு வந்திருக்கும் ஆபத்தைக் கேட்டதுமுதல் அவன் மனம் துடித்தது. அதை நாட்டாண்மையினிடம் சொல்லிவிடலாமா என்று யோசித்தான். ஆனால், அவன் சந்திரவதனிக்கு வாக்குக் கொடுத்திருந்ததால், அது சரிப்படவில்லை. தீக்ஷதர்மேல் கோபமுண்டாயிற்று அதையும் சந்திரவதனிக்காக அடக்கிக்கொண்டான். தனக்கு சந்திரவதனி கிடைப்பதாக இருந்து தவறிப்போனதைப்பற்றி வருத்த மடைந்தான். அவள் தன்னிடம் பிரியமா யிருப்பதை எண்ணி ஸந்தோஷப்பட்டான். அவள் தனக்கே கிடைக்கும் படி அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று காளியை ஸ்தோத்திரம் செய்தான். தீக்ஷதரிடம் ஸர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்வதென்று தீர்மானித்தான்.

மறுநாள் தீக்ஷதரைப்பார்க்கப் போனான். அவர் அவனை அதிக பிரியமாக வரவேற்று, அன்புடன் பேசினார். இது பாசாங்கு என்று அவனுக்குத் தெரியுமாதலால், அவனுக்கு உள்ளூற சிரிப்பு வந்தது. சிறிதுநேரம் இருவரும் ஊர் விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். பிறகு தீக்ஷதர், "அப்பா, ஸ்ரீதரா, நாளைய ஸோமவாரம் ஸேதுவுக்குப் புறப்பட வேண்டும். நாட்டாண்மையினிடம் சொல்லி, அனுமதியும் அனுக்கிரகமும் பெற்றுக்கொள். போய் ஒரு மாஸத்தில் திரும்பி விடலாம்." என்றார்.

"ஸேதுவா, ஆம். முன்பே சொன்னீர்களே. ஆனால் எனக்கு உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறது. இரண்டு மாஸமாக அதிக அலைச்சல்; அது உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை. இன்று ராத்திரி நாட்டாண்மையினிடம் சொல்லி ஏதாவது வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்றிருக்கிறேன். நீங்களும் சற்று சொன்னால் நன்றாயிருக்கும். ஆகையால் ஸேது

வுக்கு நான் வரவில்லை. நீங்கள்போய் வரும்போது எனக்கென்று சிறியதாக ஜ்யோதிஷத்துக்கு ஏற்றதாக கொஞ்சம் சோழி கொண்டுவர வேண்டும்.''

"வரவில்லையா? நீ வருவாயென்றல்லவோ நினைத்தோம். நீ வந்தால் துணையாக இருக்கும். எனக்குவயதாயிற்று. நீ இல்லாமல் எப்படி நான் போகப்போகிறேன். நான் நாட்டாண்மையிடம் சொல்லுகிறேன். சீக்கிரம் உடம்பு குணமாகும்படி மருந்து தரச் சொல்லுகிறேன். இன்னும் நான்கு நாளிருக்கின்றன. வித்தியாஸாகர பண்டிதர் அதிக கெட்டிக்காரர். ராஜவைத்தியர். வேதபுரி தாசிலுக்கு அவர்தான் வைத்தியம். அவரிடமும் சொல்லி அவரைக்கொண்டே வைத்தியம் செய்யச் சொல்லுகிறேன். நாட்டாண்மைசொன்னால் வித்தியாஸாகரர் தட்டமாட்டார்.''

"ஏது, நான் வருவது ஸந்தேகந்தான். வித்தியாஸாகரர் மூன்று நாளில் குணப் படுத்திவிடுவாரா?''

"மூன்றுநாளா? ஒரே வேளையில் குணப்படுத்தக்கூடிய மருந்து அவரிட மிருக்கிறதே.''

"சரி, செய்யுங்கள். நானும் நாட்டாண்மையிடம் கேட்கிறேன்.''

சிறிது நேரத்துக்கெல்லாம் ஸ்ரீதரன் அரண்மனைக்குப் போனான். போகும்வழியில் யோசனை செய்யலானான்.

"உடம்பு சரிப்படவில்லையென்றோம். வைத்தியம் பார்க்கிறேன் என்கிறார். அவர் உண்மையில் பாசாங்குக்காகவா சொல்லி யிருப்பார். நம்மை முன்னுக்குக் கொண்டுவந்த அவரா, அல்பம், நான் ஏதோ உதாஸீனமாகப் பேசினதை மனவில் வைத்துக்கொண்டு 'கெடுக்கப்பார்ப்பார். நம்பத்தக்கதாயில்லை. ஆனால் சந்திரவதனி பொய் என் சொல்லவேண்டும். அவள் வாஸ்தவத்தைத்தான் சொல்லி யிருப்பாள். கல்யாணங்கூட நின்று போயிற்று. வேறுவரன் நிச்சயம் செய்துவிட்டார்கள். ஆகையால் நாம்ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். ஆனால்எப்படி ஸேதுவுக்கு வரமாட்டேன் என்று சொல்லுகிறது. பண்டிதரோ ரொம்ப கெட்டிக்காரர். உண்மையில் எனக்கு உடம்பு ஒன்று மில்லை. கையைப் பார்த்து ஏதாவது ரஸாயனம் கொடுப்பார். அவரைக்கண்டு ஸேது போகாதவழிக்கு ஏதாவது மருந்து

கொடுக்கும்படி கேட்போமா. நமக்குத் தட்டமாட்டார். ஆனால் அவர் ஸத்தியஸந்தர், தப்புவழிக்குப் போகமாட்டார். அவரிடம் உண்மையைச் சொன்னாலொழிய தப்பவழியில்லை. ரகஸ்யத்தை வெளியிடுவதில்லை யென்று வாக்குக் கொடுத்துவிட்டோம். என்னசெய்யலாம். ஈசுவரன்தான் காப்பாற்றவேண்டும்.''

நல்ல வேளையாக வித்தியாஸாகர பண்டிதர் வேதபுரிக்கு அன்று காலைதான் போயிருந்தார். வர நாலைந்து நாள் செல்லும். அந்த மட்டுக்குத் தான் தப்பினதாக ஸ்ரீதரன்ஸந்தோஷித்தான். விசுவேசுவர தீக்ஷதருக்கு இது வருத்தமாயிருந்தது. வேறு வைத்தியர்களைக் கொண்டு வைத்தியம் பார்க்க எண்ணினார். இதற்காக ஸ்ரீதரனை அழைத்துப் பேசினார். ஆனால் அவன் வித்தியாஸாகரரைத்தவிர வேறு யாரிடமும் நம்பிக்கையில்லை யென்றும், அவர் வந்தபின் வைத்தியம் பார்த்துக்கொள்வ தாகவும் சொல்லிவிட்டான்.

மறுநாள் மாலையில் இருவரும் ஆற்றங்கரையில் ஸந்தித்தார்கள். பேசிக்கொண்டே தீக்ஷதருடைய வீட்டுக்கு வந்தார்கள். லலிதாம்பாளும் சந்திரவதனியும் அவர்கள் வந்தபின் கோவிலுக்குப்போனார்கள். தீக்ஷதரும் ஸ்ரீதரனும் உள்ளேபோனதும் தீக்ஷதர் திடீரென்று ஸ்ரீதரனைக்கட்டிப்பிடித்து வாயில் துணியை அடைத்து கையையும் காலையும் கட்டிவிட்டார். வேறு சிந்தனையிலாழ்ந்து அஜாக்ரதையாயிருந்தனாலும், ஒருமூலிகையை தீக்ஷதர் அவன் மூக்கில் காட்டினதில் அவன் சற்று மயக்கமாகி ஒன்றும் செய்யமுடியாமலிருந்ததாலும், அவன்ஸுலபத்தில் அகப்பட்டுக்கொண்டான். அவனை தீக்ஷதர் ஒரு அறையில் தள்ளி ஒரு கட்டிலில் படுக்கவைத்து, மயக்கம் பலமாகும்படி மூலிகையை அதிகமாக முகத்தினருகில் வைத்து, கதவைச்சார்த்திப் பூட்டிவிட்டார்.

## VI

மறுநாள் காலையில் ஸ்ரீதரனைக்காணவில்லை. ஊரெங்கும் யாவரும் தேடலானார்கள். விச்வேசுவர தீக்ஷதர்தம்மேல் ஸந்தேகமுண்டாகாமலிருக்க வேண்டியும், வாலிபன் விஷயமாக எவரும் அதிக முயற்சி யெடுத்துக் கொள்ளாமலிருக்கவேண்டியும், அவன் வேதபுரிக்குப் போய்வருவதாய் முதல் நாள் மாலையில்

தன்னிடம் சொன்னதாக பிரஸ்தாபித்தார். அதைக் கேட்டு யாவரும் கவலை நீங்கியிருந்தார்கள்.

தீக்ஷதர் மாந்தரீகத்தில் தேர்ந்தவர். வைத்தியமும் தெரியும். அதனால் அவர், வேண்டும்போது ஸ்ரீதரனை பிரஜ்ஞைக்கு கொண்டுவந்து, அவன் பேசமுடியாதபடி மந்திரத்தால் கட்டி, ஆகாரம் செய்யச்சொல்லிய பிறகு அவனைப் படுக்கவைத்து விடுவார். இப்படி இரண்டு நாள் சென்றது. இவ்விஷயம் லலிதாம் பாளுக்கு மாத்திரம் தெரியும். அவள் தன் புருஷனுக்கு துணையாக இருந்தாள். ஸ்ரீதரன் இருந்த அறையைத் திறக்கும்போதும் ஆகாரம் போடும் போதும், அவர்கள் சந்திரவதனியை ஏதாவது காரியமாக வெகு நேரம் கழித்து வரும்படி வெளியில் அனுப்பிவிடுவார்கள். அவளுக்கு ஸ்ரீதரன் வேதபுரி போயிருப்பதாகவே எண்ணம். அந்தமட்டில் அவன் தப்பினதாக எண்ணி ஸந்தோஷப்பட்டாள். அவன் தன்வீட்டில் ஒரு அறையில் அடைபட் டிருப்பதாக அவள் ஸ்வப்னத்திலும் நினைக்கவில்லை.

மறுநாள் காலையில் அவள் வழக்கம்போல பெற்றோர்களால் அனுப்பப்பட்டு வெளியில் போனாள். போனவள் சீக்கிரமாகவே திரும்பிவிடநேர்ந்தது. வழியில்சற்று தன் ஸகிகளில் இரண்டொருவருடன் பேசிவிட்டுத் திரும்பிவந்தவள் வீட்டுக்குள் நுழையும்போது கால்தடுக்கவே, சற்று உட்கார்ந்தாள். ஸ்ரீதரனைப்பற்றி நினைவு வந்தது. சற்று நேரத்துக்கெல் லாம் தன் பெற்றோர்கள் பேசும்குரல் கேட்டது. அதை கவனித்தாள்.

"சந்திரா வந்துவிடப்போகிறாள். சீக்கிரம் அவனைப்படுக்க வையுங்கள்."

"இப்போதுதானே போனாள்."

"இல்லை, போய் நேரமாயிற்றே."

"நாளையதினம் சாயந்திரம் புறப்படவேண்டும்."

"சரி, அப்புறம் பேசிக்கொள்வோம்."

"இது கைகூடுமானால் நம்மைப்போல் அதிருஷ்டசாலி கிடையாது. தலைமுறை தலைமுறையாக தனவந்தர்களாகவே இருப்போம்."

பிறகு கதவைச் சார்த்திப்பூட்டும் சத்தம் கேட்டது. இனி உள்ளே போகலாமா மென்று எண்ணி மெதுவாகநடந்து போ

ளுள். தாயாரைக்கண்டதும் போன வேலையைப்பற்றிப் பேசி ஸந்தேகம் கொள்ளாதபடி செய்தாள். இருவருக்கும் அவள் மேல் சற்றும் ஸந்தேகம் ஏற்படவில்லை.

சந்திரவதனிக்கு ஸ்ரீதரன் பாடு ஆபத்துதான் என்று தோன்றிற்று. அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டு மென்றும் அதிலும் சீக்ரமாக முயற்சிசெய்ய வேண்டு மென்றும் எண்ணினுள். தன் தாயார் தகப்பனுரைக் காட்டிக் கொடுக்கா மல் எப்படி அவனைக்காப்பாற்றுவது என்பது அவளுக்குத் தெரியவில்லை. பலவாருகப் பகல் முழுவதும் யோசித்தாள். அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. தனது பெற்ருேர்கள் வெளியே போயிருந்த சமயம் பார்த்து கதவின் சந்தால் ஸ்ரீதரன் அறையில் ஒரு கட்டிலில் படுத்திருப்பதைப் பார்த்தாள். அவள் மனம் பகீரென்றது. அவளுக்கு மகாதுக்கமாயிருந்தது. அவ ளுக்கு சற்று நேரம் அழவேண்டும் போல் கூடஇருந்தது. ஒரு தனி அறையில் உட்கார்ந்து கண்ணீர் விட்டாள். பிறகு எழுந்து எப்போதும் போல கூடமாடினுள். இருந்தாலும் அவளுக்கு ஸ்ரீதரனைப்பற்றிய ஞாபகம் ஸதா இருந்து கொண்டிருந்தது. அவனை எப்படிக்காப்பாற்றுகிறது என்பதைப்பற்றி ஸதா சிந் தையாக இருந்தாள். ஸாயந்திரம் அவளுடைய தாயார் குளத் தங்கரைக்குப் போனுள். அவளுடைய தகப்பனுர் வெளியில் போயிருந்தார். சற்று நேரம் சென்றபின் விஜயபுரி பந்து வும் வெளியில் போய்விட்டார். சந்திரவதனிக்கு தைரியம் வந் தது. கொத்துசாவி சுவரில் ஒருமூலையில் தொங்கவிட்டிருந்தது. அதை எடுத்து ஸ்ரீதரன் இருந்த அறையைத் திறந்தாள். அவ னைப்பார்த்தாள். நித்திரையிலிருப்பவன்போல் படுத்திருந்தான். அவனைப்பார்த்ததும் மெய்ம்மறந்து நாலேந்து விஞடிநின்று விட் டாள். பிறகு தன்னிலைக்கு வந்து சிறிதுநேரம் துக்கப்பட்டு விட்டு யாராவது வந்துவிடப்போகிருர்களே என்றுபயமடைந்து வெளியில் வந்து கதவைப்பூட்டினுள். முற்றத்தில் ஒரு கட்டி லில் வந்து உட்கார்ந்து யோசிக்கலானுள்.

" இனி என்ன செய்வது. நாளையதினம் ஸேது யாத் திரைக்குப் புறப்படப்போகிருேம். போகும் வழியில் காளி கோயிலுக்குப்போவோம். போகும்போதோ அதற்கு முன்

ஞலோ அவரை கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போய்விட ஏற்பாடாகும். பிறகு அவரைக்காப்பாற்ற முடியாது. ஆகை யால் சீக்கிரம் ஏதாவது செய்யவேண்டும். என்ன செய்யலாம். நாட்டாண்மையிடம் சொல்லலாமா? அதனால் அப்பாவுக்குக் கெடுதலே. அம்மாவுக்கும் கெடுதல்தான். அவர்களுக்குக் கஷ்டம் வந்தால் நமக்கும் கஷ்டந்தான். என்ன செய்கிறது. இதைப் பார்த்தாலோ அவர் போய்விடுவார். அவரைப்பலிகொடுக்கிற தென்றால், எனக்கு வருத்தமாயிருக்கிறது. அதை எப்படியா வது தடுக்கவேண்டும்.—" என்றிப்படிப்பலவாறு யோசித்தாள்

அவள் தாயார் வந்து சேர்ந்தாள். அவளைப்பார்க்கும்போது மிருத்யு போல் தோன்றிற்று: சந்திரவதனிக்கு தன் தாயார் முன்னிலையில் இருக்கப்பிடிக்கவில்லை. ஒரு வாலிபனை பணத் தாசை பிடித்துக்கொல்லத்துணிந்த ஒருத்தி வேறு என்ன தான் செய்யத்துணியாள். " இங்கிருக்கவேண்டாம். சற்று வெளியில் போவோம். கோவிலுக்காவது போய் வருவோம். அங்குபோய் என்ன செய்வதென்று யோசிப்போம்" என்று தீர்மானித்து தன் தாயாருடன், கோயிலுக்குப்போய்வருவதாகச் சொல்லி வெளியில் போனாள்.

நேரே கோயிலுக்குப் போனாள். அங்கு அதிக பயபக்தி யுடன் ஈசுவரனை உபாஸித்தாள். அங்கு இரண்டொரு நாழிகை இருந்து பலவாறாக யோசித்து, கடைசியில் எது வந்தாலும் வரட்டும், நாட்டாண்மையிடம் தெரிவித்து விடுகிறது என்று தீர்மானித்தாள். ஸ்ரீதரனிடம் அவளுக்கு அவ்வளவு பிரியம் ஏற்பட்டிருந்தது. அதனால் தன் பெற்றோர்களிடம் வெறுப்பும் அதிகரித்தது.

நாட்டாண்மை வஸிக்கும் தெருவில் போகும் போது அவள் மனம் கலங்கிற்று. சிறு பெண், இவ்வளவு தைரியமாகப் போய் அவரிடம் எப்படிப் பேசுகிறது என்று பயந்தாள். திரும்பிவிடலாமா என்று எண்ணினாள். அரண்மனையண்டை போனதும் திரும்பிப்போக எண்ணி சற்று நின்றாள். பிறகு மறுபடியும் தைரியங்கொண்டு வெளிக்காவலண்டைபோனாள். அப் போது அஸ்தமித்து மூன்று நான்கு நாழிகையிருக்கும். ஸ்வல் பம் நிலா இருந்தது. காவல்காரன் அவளைப் பார்த்து " ஏனம்

மா இருட்டில் வந்தாய்? வீட்டுக்குப்போக வழி தெரிய வில்லையா? யாரையாவது துணையனுப்பட்டுமோ?'' என்றான்.

"இல்லையப்பா, நாட்டாண்மையைப்பார்க்க வேண்டும். இப்போது சரிப்படுமோ. அவஸரமாகப்பார்க்க வேண்டும். சற்று கேட்டுச் சொல்.''

"அப்படியே கேட்டுச் சொல்லுகிறேன்'' என்று சொல்லி காவல்காரன் தன் அருகில் தூங்கிவிழித்து கொண்டிருந்த மற்ற காவலாளியை எழுப்பி நாட்டாண்மையிடம் அனுப்பினான்.

நாட்டாண்மையிடம் யார் வேண்டுமென்றாலும் புகார்சொல்லிக்கொள்ளப்போகலாம். யாசகம் கேட்கப்போகலாம். அதற்குக் கால வரையறை கிடையாது. ஆனால் வீண் வம்புபேச அவர் இணங்கமாட்டார். எதாவது காரியமாகத்தான் பேசலாம். ஒரு குழந்தை வந்தாலும் குளிர்ந்த முகமாகப் பேசுவார். அவரிடம் தமது குறையைக்கூறப்போய் அதிருப்தியாகத் திரும்பினவர் கிடையாது. யார் வந்தாலும், ஸமயத்தை முன்னாடிகேட்டுத் தெரிந்து உள்ளே விடும்படிகாவலுக்கு உத்தரவு. வெளிவாயிலில் எப்போதும் நான்குகாவலாளிகள் இருப்பார்கள். அரண்மனையின் இந்த வாயில் வழியாகத்தான் நாட்டாண்மையைப்பார்க்கப்போக வேண்டும். மற்ற வாயில்களின் வழியாக—இன்னும் இரண்டு உண்டு—சாப்பிடவும், இதர அலுவலாகவும் போகலாம்.

நாராயண சர்மா போஜனமாகித் தாம்பூலந் தரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். சந்திரவதனி காவலாளியுடன் போய் நாராயணசர்மாவைக்கண்டு நமஸ்காரம் செய்தாள். அவர் ஆசீர்வாதம் செய்துஎழுந்திருக்கச்சொல்லி, "அம்மா, நீ விசுவேசுவர தீக்ஷதர் பெண்ணல்லவா! எது இருட்டில் இவ்வளவு நேரங்கழித்து இங்கே வந்தாய். என்ன ஸமாசாரம். இப்போது வந்திருப்பதைப்பார்த்தால் ஏதோ அவஸரமான காரியமாக வந்திருக்கிறாயென்று தோன்றுகிறது. உன் தகப்பனாருக்கு எதாவது உடம்பு சரிப்படவில்லையா?'' என்று கேட்டார்.

சந்திரவதனி பேசத்தயங்கினாள். நாராயண சர்மாவின் முகத்தை ஏறிட்டுப்பார்த்துப் பிறகு தலைகுனிந்து சிந்தனையிலாழ்ந்தாள்.

"என்னம்மா? சொல்லேன்."

"சொல்லவும் வேண்டியிருக்கிறது. பயமாகவும் இருக்கிறது."

"பயப்படாதே. உனக்கு ஒரு கேடும் வராமல் பார்த்துக் கொள்ளுகிறேன்."

"சொன்னால் ஒரு பக்கம் ஆபத்தாயிருக்கிறது. சொல்லா விட்டாலோ இன்னொரு பக்கம் ஆபத்தாயிருக்கிறது. ஆகையால் என்ன செய்கிறதென்று தவிக்கிறேன்."

"என்னவென்று சொல்லேன். கேட்போம். எவ்விதத்திலும் ஆபத்து நேரிடாதபடி பார்த்துக் கொள்ளுகிறேன்."

"அந்த மாதிரி அபயம் கொடுத்தால் போதும். சொல்லுகிறேன்."

"அப்படியே அபயம் கொடுத்தேன். சொல்."

"உங்களிடம் புதிதாக காரியஸ்தராக வந்தாரே. அவ இப்போது எங்களகத்தி லிருக்கிறார்."

"வேதபுரியிலிருந்து வந்து விட்டானு ஸ்ரீதரன். சிறுபிள்ளை; சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டான்."

"அவர் வேதபுரி போகவில்லை. எங்களகத்திலேயே இருக்கிறார்."

"வேதபுரி போகவில்லையா? அப்படியானால் ஏன் இங்கே வரவில்லை. உடம்பு ஏதாவது சரிப்படவில்லையா? அப்படியிருக்கவும் நியாயமில்லை. உங்கள் வீட்டிலிருந்தால் தீக்ஷிதர் சொல்லியிருப்பாரே? அவர்தானே வேதபுரி போயிருப்பதாகச் சொன்னார். அவர் பொய்யா சொன்னார்?"

"அவர் சொன்னது வாஸ்தவமில்லை."

"பின்னே ஸ்ரீதரன் உங்கள் வீட்டிலா இத்தனை நாளாக இருந்தான்? ஏன் இங்கு தலைக்காட்டவில்லை? உன் தகப்பனார் ஏன் பொய் சொன்னார்?"

பெண்மணி மறுபடியும் தயங்கினாள்.

"என் தகப்பனார்தான் அவனை இருக்கச் செய்தார். ஸ்ரீதரர் தானாக இருக்கவில்லை. வலுக் கட்டாயத்தின் பேரில் இருந்து வருகிறார்."

"நீ சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே."

"விவரமாகச் சொல்லுகிறேன். என் தகப்பனருக்கும் ஸ்ரீதாருக்கும் கொஞ்ச நாளாக மனஸ்தாபம். அதனல் என் தகப்பனர் அவரைக் காளிக்குப் பலியிட்டுப்புதையலை எடுத்துக்கொள்வதாக எண்ணியிருக்கிறார். அதற்காகத்தான் ஸேது யாத்திரை போவதாகச் சொல்லி, போகும் வழியில் காளிக்குப் பலியிட்டுப் புதையலுடன் ஸேது போய்த் திரும்புவதாக உத்தேசம். ஸ்ரீதரர் ஸேதுவுக்குப் போக இஷ்டப்படவில்லை. அதனல் பலியிடுவது தவறக் கூடாதென்று ஸ்ரீதரரை வீட்டில் ஒரு அறையில் பூட்டி வைத்திருக்கிறார். மந்திரத்தாலோ மருந்தாலோ அவர் படுத்த படுக்கையாக இருக்கிறார். நாளையதினம் ஸேதுவுக்குப் புறப்படுகிறோம். அதற்குள் அவரைக் காப்பாற்றவேண்டும். அதோடு ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். என் தகப்பனரையும் கெடுக்கக்கூடாது, ஏற்கனவே அபயதானம் செய்து விட்டீர்கள். அவருக்குக் கெடுதல் வந்தால் எனக்கும் கஷ்டந்தானே."

"அதிருக்கட்டும், உன்னை ஸ்ரீதரனுக்குக் கொடுப்பதாக ஏற்பாடல்லவா? அப்படியிருக்க, தீக்ஷதர் இப்படிச் செய்வானேன்?"

"அந்த ஏற்பாடு இப்போது நின்று விட்டது. வேறு ஏற்பாடு செய்திருக்கிறார்."

"என்ன ஏற்பாடு."

"விஜயபுரியி லிருந்து ஒரு பந்து வந்திருக்கிறார். அவர் புத்திரனுக்கு நிச்சயமாகியிருக்கிறது."

"அதனல்தான் நாட்டாண்மை காரியஸ்தன் என்பதைக் கூட லக்ஷியம் செய்யாமல் தீக்ஷதர் மிதம்மீறி விட்டாரோ?"

சிறிது நேரம் இரண்டு பேரும் பேசாமலிருந்தார்கள். பிறகு நாராயண சர்மா எழுந்து, "சரி, உன் வீட்டுக்குப் போவோம். யாரது, காவல்? பத்துபேர் ஸன்னத்தமாகட்டும். வெளியில் போகவேண்டும். சீக்கிரம்" என்றார்.

சொன்ன ஸ்வல்ப நேரத்துக்கெல்லாம் காவலாளிகள் பதினைந்து பேர்கள் ஆயுதபாணிகளாய் வந்து சேர்ந்தார்கள். நாராயண சர்மா, முன்னல் ஐந்து பேர், பின்னல் ஐந்து பேர், பார்சங்களில் ஐந்து பேராக தம்மைச் சூழ்ந்து வர, சந்திரவதனியுடன்

வேகமாக தீக்ஷதர் குடியிருக்கும் வீட்டை நோக்கிப்போனார். சிறிது தூரம் போனதும் தமக் கெதிரில் தெருவின் கோடியில் ஒரே கூட்டமாகவும் கூச்சலாகவும் இருந்தது. நாட்டாண்மை வேகமாக நடந்து போனார். கூட்டம் அவரை நாடி வந்து கொண் டிருந்தது. ஸமீபத்தில் வந்ததும், கூட்டத்தின் மத்தியிலிருந்து தீக்ஷதர் கையில் ஒரு கட்டப்பாரையை எடுத்துக் கொண்டு ஆவேசத்துடன் ஒரே பாய்ச்சலாக ஓடி வந்து நாட்டாண்மையின் முன் நின்றார். நாராயணசர்மா தமது கையைத் தூக்கி "பொறு" என்கிற பாவனையாகக்கையைத் தாழ்த்தவே, தீக்ஷதர் பெட்டியில் அடங்கின பாம்புபோல் ஆட்டம் அடங்கி நின்றார். பிறகு பேசினார்.

"இந்த ஊர்க்கு அரசராக விளங்கும் தங்களுக்கு ஒரு விஜ்ஞாபனம். இந்தக் கட்டபாரையை எனது ஆயுதமாகக் கொண்டு இரண்டு ஜீவன்களை ஹதம் செய்தேன். அது அவர்களுக்கு ஏற்றது. அவர்கள் செய்த குற்றத்துக்கு அதுதான் சரியான தண்டனை."

நாட்டாண்மை வெகுநேரம் அவரிடம் பேச்சுக் கொடுத்த பிறகுதான் விஷயம் முழுவதும் வெளிவந்தது. அவர் அன்று மாலையில் வெளியேபோய் திரும்பி வந்தபோது வீட்டில் தமது மனைவியும் விஜயபுரி பந்துவும் ஏகாந்தத்தில் உல்லாஸமாகப் பேசி காமமயக்கத்திலிருக்கக் கண்டு மனம் பொறுமல் கோபங் கொண்டு, சித்தம் கலங்கி ஆவேசம் கொண்டு ஒரு கட்டப்பாரையால் இருவர் தலையையும் பிளந்து கொன்றுவிட்டார். பிரும்மஹத்தி சூழவே பைத்யம் கொண்டு நாட்டாண்மையிடம் வந்து முறையிட்டுக் கொண்டார். இந்த ஸம்பாஷணையில் ஸ்ரீதரன் பேச்சு வரவேயில்லை. தீக்ஷதருக்கு அவனைப்பற்றி ஞாபகமேயில்லை.

நாராயண சர்மா தமது காவலாளிகளில் பலசாலிகளான ஐந்து பேர்களை தீக்ஷதரைப் பிடித்துக் காவலில்வைக்க ஏற்பாடு செய்து விட்டு தீக்ஷதர் வீட்டுக்குப் போனார்.

அங்கே பார்க்க சகிக்காத காட்சியா யிருந்தது. தீக்ஷதர் மனைவிஒருபுறம் மண்டைகிறந்து ரத்தம் ஆறுய்ப் பெருக தேகமெல்லாம் ரத்தம் பூசிப் பார்க்கவிகாரமாக இருந்தாள். விஜயபுரி

அந்தணரோ கழுத்து முறிந்து, ரத்தங் கக்கி வேறு ஒரு மூலையில் விழுந்து கிடந்தார். தெரு ஜனங்கள் ஏற்கனவே அங்கு கூடி, வைத்யர்களைக் கொண்டு ஏதாவது சிகித்ஸை செய்ய முடியுமா என்று பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

நாட்டாண்மை, வீட்டண்டை வந்ததும், பெண்மணியை வெளியில் நிறுத்தி உள்ளே போய்ப் பார்த்து, பிணங்களை அப்புறப்படுத்தவும் சுத்தம் செய்யவும் உத்தரவிட்டுவிட்டு, மறுபடி பெண்ணண்டை வந்து,

"அம்மா, நான் எதுவும் செய்யு முன் ஜகதீசுவரியே செய்ய வேண்டியதைச் செய்து விட்டாள். ஆகையால் நான் ஒன்றும் நல்லதோ கெடுதலோ செய்யப்போகிறதில்லை. உன் தகப்பனுருக்கு என்ன செய்யவேண்டு மென்பதைப் பற்றி நாளைக்கு யோசித்துக் கொள்வோம். ஸ்ரீதரன் எங்கே? காட்டு பார்ப்போம்." என்றார்.

சந்திரவதனிக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பிரமை பிடித்து விட்டது. நாராயண சர்மாவின் ஆதரவான பேச்சால் சற்றுத் தெளிந்து, அவருடன் வீட்டினுள் போய், திறவு கோல்களை எடுத்து ஸ்ரீதரன் இருந்த அறையைத் திறந்தாள். முன் பார்த்த படியே அவன் படுத்திருந்தான். நாராயண சர்மா சிறிது நேரம் அவனைத் தொட்டுப் புரட்டிப்பார்த்துப் பிறகு சில விநாடி ஏதோ மந்திரம் ஜபித்தார்.

உடனே அவன் தூங்கி விழித்தவன் போல் எழுந்து உட்கார்ந்தான்.

## VII.

இரவில் பன்னிரண்டு நாழிகைக்கு நாட்டாண்மை அரண்மனையில் ராஜமண்டபத்தில் தர்பார் நடந்தது. ஸுமார் ஐம்பது காவல்வீரர்கள் ஆயுதபாணிகளாய் நாட்டாண்மையைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். நடு மண்டபத்தில் ஒரு பெரிய ஆஸனத்தில் நாராயண சர்மா உட்கார்ந்திருந்தார். அவருக்கெதிரில் விசுவேசுவர தீக்ஷதர் இரண்டு காவலாளிகளால் பிடிக்கப்பட்டு நின்று கொண்டிருந்தார். இரு பாரிசங்களிலும் ஊரில் உள்ள பெரிய மனிதர்கள் வந்து நின்று கொண்டிருந்தார்கள்.

சற்று நேரம் எங்கும் நிசப்தமாயிருந்தது. பிறகு நாட்டாண்மை உட்கார்ந்தபடியே பேசலானார்.

"மகா ஜனங்களே, இதுவரையில் நமது கிராமத்தில் இப்படிப்பட்ட விஷயம் எதுவும் நடந்ததில்லை. முதலாவது நாட்டாண்மைக்கு அபசாரம் ஏற்பட்டது. நம்மிடம் காரியம் பார்க்கும் ஒரு பையனை இந்த விசுவேசுவர தீக்ஷதர் தம் வீட்டில் அடைத்துவைத்தார். வேறு யாராவதென்றாலும் போகிறது. நாட்டாண்மை கார்யஸ்தர்களுக்கே இவ்வித ஆபத்து வருமென்றால், அதைத் தடுக்க நாட்டாண்மைக்கு சக்தியில்லை யென்று வேதபுரி முதலான இடங்களுக்குப் பரவுமானால், இந்த கிராமத்துக்கும், நாட்டாண்மைக்கும் உள்ள கௌரவம் போய்விடும். நாளைக்கு ராஜாங்ககாரியமென்று சொல்லிக்கொண்டு எவன் வேண்டுமானாலும் இங்கு வந்து அட்டஹாஸம் செய்யக்கூடும். ஆகையால்நாட்டாண்மையின்செல்வாக்குக்குறையவில்லை; இந்த ஊரில் அவரிட்டதுதான் தர்மம் என்பது யாவருக்கும் தெரிய வேண்டும். இரண்டாவது இந்த ஊரில் யாவரும் ஊரிலுள்ளவர்களிடம் ஆபிசாரம் பிரயோகிக்கக் கூடாதென்று கட்டுப்பாடு; நமது பிரபிதாமகர் நாளில் ஏற்பட்ட ஆஜ்ஞை. அது இப்போது தவறிவிட்டது. இந்த ஊரில் வெகுநாளாக வஸித்துவருகிற ஒரு வாலிபனை மூன்று நாளாகக் கட்டிப்போட்டு வைத்தார் விசுவேசுவர தீக்ஷதர். அதிலும் நமது காரியஸ்தரை.

"மூன்றாவது அவர் அவன் விஷயமாகப் பொய் சொன்னார். நாம் ஸ்ரீதரனைத் தேடாமலிருக்க வேண்டி வேதபுரி போனதாகச் சொன்னார்."

"காளிதேவி நாட்டாண்மையின் குலதெய்வம். காளியின் திரவ்யம் நாட்டாண்மைக்குப் பிறகுதான் மற்றவர்களுக்கு. அப்படியிருக்க அந்தப்புதையலை எடுக்க முயன்றதுபிசகு. மேலும் நரபலி கொடுக்க நமது அனுமதிவேண்டும். அதைக் கேட்கவில்லை. போதாக் குறைக்கு அரண்மனைக் காரியஸ்தர் ஒருவரை பலிகொடுக்க ஏற்பாடு செய்தார். ஆகவே விசுவேசுவர தீக்ஷதர் செய்த அபசாரங்கள் அதிகம். இதற்கு அவருக்கு தக்க தண்டனை செய்யவேண்டும்.

"ஆனல் அவர் பெண் சந்திரவதனிக்கு நாம் ஏற்கனவே அபயதானம் கொடுத்திருக்கிறோம், அவர் தகப்பனையாவது, ஸ்ரீதரனையாவது கெடுக்கிறதில்லை யென்று. இந்த விஷயங்களையெல்லாம் அவள் நம்மிடம் சொல்லுமுன், சொன்னலும் ஆபத்து, சொல்லாவிட்டாலும் ஒரு வகையில் ஆபத்து; இரண்டு விதத்திலும் கேடுவராமல் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டாள். ஆகையால் விசுவேசுவர தீக்ஷதருக்கு குற்றத்துக் கேற்ற தண்டனை ஒன்றும் ஏற்படுத்தப்போகிறதில்லை. தேவி இவ்விஷயத்தில் தக்க தண்டனை ஏற்படுத்திவிட்டாள். பிறரைக் கெடுக்கப் போகத் தன் மனைவி தன்னையே மோசம் செய்ய, அதனல் அவர் மனைவியும், அவளுடைய பந்துவும் பரலோகம் போனர்கள். இப்போது தீக்ஷதரும் பைத்தியம் பிடித்துப் போனதாக வைத்தியர்கள் தெரிவிக்கிறார்கள். ப்ரும்மஹத்திக்கு அதன் தோஷமே தக்க தண்டனையாயிற்று. ஆனல் அவர் வெளியில் திரிந்தால் ஊரிலுள்ளோருக்குக் கெடுதலாகையால், அவர் காவலில் இருக்கவேண்டு மென்பது நமது ஆஜ்ஞை. அவருக்கு வேறு மனிதர்களால் ஏற்படக் கூடிய கெடுதல் எதுவும் ஸம்பவிக்கக் கூடாதென்பதும் நமது ஆஜ்ஞை

"நமது ஊரில் விசுவேசுவர தீக்ஷதர் வீடு இனி இருக்கக் கூடாது. ஸூர்யன் அதைப் பார்க்கக் கூடாது. உதயத்துக்குள் அதை இடித்து தரையோடு தரையாகச் செய்து விடவேண்டும். வீட்டிலுள்ள ஸாமான்களும் மற்ற ஆபரணதிகளும் அவர் பெண் சந்திரவதனியைச் சேர்ந்தவை. அவைகளை அவளிடம் சேர்க்கும் வரையில் அரண்மனையிலிருக்க வேண்டியது."

"சந்திரவதனியை நாம் காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்த படியால், அவளை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து அவளை ஸௌக்கியமாக இருக்கும்படி செய்யவேண்டியது நமது கடமையாகும். ஏற்கனவே விசுவேசுவர தீக்ஷதர் அவளை ஸ்ரீதரனுக்குக் கொடுப்பதாக ஏற்பாடு செய்தது பிரஸித்தமாகையால், அதை யனுஸரித்து சந்திரவதனியை ஸ்ரீதரனுக்குக் கொடுக்கிறோம். அவர்களிருவரும் அரண்மனையில் இருக்கட்டும். அவர்களுடைய ஸௌகர்யங்களுக்கு குறைவு வராமலிருக்கட்டும்.

"நமது ஊரில் இப்படிபட்ட விஷயங்கள் ஏற்பட்டதற்கு தேவிக்கு அபிஷேகம் நடக்கட்டும். அன்று கல்யாணமும் நடந்தேறட்டும். "இது நமது ஆஜ்ஞை."

பிறகு சபை கலைந்தது. அவரவர் தம் தம்வீடு போனார்கள். தீக்ஷிதர் காவல் கூடம் போனார். சில வேலையாட்கள் வீட்டை இடிக்கப் போனார்கள். ஸொத்துக்களை ஜாக்கிரதையாக எடுத்துவைக்க அரண்மனை காரியஸ்தர்கள் ஐவர் ஓலையும் எழுத்தாணியுமாகப் போனார்கள். நாட்டாண்மையுடன் சந்திரவதனியும் ஸ்ரீதரனும் அரண்மனை போனார்கள். அங்கே போனதும் நாராயண சர்மா சந்திரவதனிக்கும் ஸ்ரீதரனுக்கும் ஆதரவாக சிறிது நேரம் பேசிவிட்டுப் படுக்கப்போனார். வேலையாட்கள் அவர்கள். இருவரையும் ஒரு பெரிய அறைக்கு அழைத்துப் போய் அங்கு தங்கி யிருக்கச் செய்தார்கள்.

'உன்னாலல்லவா நான் தப்பினேன். இல்லாவிட்டால் அவஸ்தைப்பட வேண்டியதுதான்."

"அதைப்பற்றிப் பேசாதேயுங்கள். எனக்குப் பயமாயிருக்கிறது. ராத்திரி எப்படித் தூங்கப்போகிறேனோ தெரியவில்லை. அவர்கள் செத்துக்கிடந்ததைப் பார்த்தது முதல் ஸதா பயங்கரமாக இருக்கிறது. என் தகப்பனார் பைத்தியம் பிடித்து கட்டப்பாரையுடன் ஓடி வந்ததை நான் பார்த்தேன். அது இன்னம் என் முன்னிருப்பது போல் தோன்றுகிறது."

அவர்கள் இருவரும் ஒரு கட்டிலில் உட்கார்ந்திருந்தார்கள். சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்த பிறகு, சந்திரவதனி "எனக்குத் தூக்கம் வருகிறது" என்று சொல்லிக் கொண்டே அவன் முன் கட்டிலில் படுக்கப்போனாள். பிறகு "என்னவோ பயமாயிருக்கிறது" என்று சொல்லி அவன் மடியில் தலை வைத்துப் படுத்துக்கொண்டாள். அவனிடத்தில் அவ்வளவு நம்பிக்கை, அவ்வளவு பிரியம். ஸ்ரீதரனும் "நானிருக்கிறேன். நீ பயப்படாதே. விசார மற்றுத் தூங்கு" என்று சொல்லி அவளைத் தட்டிக்கொடுத்துத் தேற்றினான். அவளும் பயமும் கவலையும் நீங்கினவளாக ஆனாள். இருவரும் தமக்கு இனி நேரப் போவதை நினைத்துக் கொண்டு படுத்துக்கொண்டார்கள்.

# கல்யாணப் பித்து.

---

ராகவய்யர் அடிக்கடி கல்யாணம் செய்து கொள்ளும் பாக்கியம் பெற்றவர். அவருக்கு அவர் கணக்குப்படி ஐம்பது வயது தானாயிற்று. ஊராருடைய மதிப்புப்படி ஐந்து வயது அதிகம். உண்மையில் சஷ்டி பூர்த்திக்கு இன்னும் ஒரு வர்ஷந்தான் பாக்கி. அதுவும் கணக்காய்ச் சொல்லப் போனால் பத்து மாஸமும் பதினைந்து நாளும்தான் பாக்கி. அவருக்கு அநேக மனைவிகள் வந்து போனார்கள். கடைசியாக இருந்தவள் பரலோகம் போய் மூன்று மாஸமாகிறது. அவள் புருஷனுடன் குடித்தனம் செய்ததெல்லாம் ஆறு மாஸந்தான். இது வரை ஐந்து பெண்மணிகள் அவருடைய மனைவிகளாக, ஸுமங்கலிகளாக "மஞ்சளும் குங்குமமாகப்" போனார்கள்.

அவருக்கு 'அதிக' ஸொத்துண்டென்று ஊரில் சொல்லிக் கொள்வார்கள். அவருக்கு வாழ்க்கைப் பட்டு அறுத்துப் போனால், பெண்ணுக்கு சோற்றுத் துணிக்குக் கஷ்டமிராது. ஆனால் உண்மையில் அவருடைய ஜாதகப்படி தன் மனைவி எவளுக்கும் அவ்வித கஷ்ட ஸ்திதியைக் கொடுக்கக் கூடியவரல்லர். இவ்விஷயம் அவரிருக்கும் ஊரிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் யாவருக்கும் தெரியும். ஆகையால் பெண்ணைக் கொடுக்கப் பிரியப்படுகிறவர்கள், பெண் அறுத்து நிற்குமே என்று விசாரப்படுவதில்லை.

அவருக்கு முதல் முதலில் கல்யாணப்பேச்சு ஆரம்பித்தது முதற்கொண்டு நாளது வரையில் வந்த பெண்களின் தொகை 365 என்று பெருமை பாராட்டிக் கொள்வார். அது உண்மையென்றுயாவரும் நம்பலாம். அந்தப் பெண்களின் ஜாதகங்களை

யெல்லாம் அவர் பத்ரமாகப் புஸ்தகமாய் பைண்ட் செய்து வைத் திருக்கிறார்.

வாஸ்தவமான கல்யாணங்களேயன்றி பொய்க் கல்யாணங்கள் சிலவும் அவருக்கு நடந்திருக்கின்றன. இவற்றில் எருக்கன் செடிக்கு அவர் கல்யாணம் செய்தது சேரவில்லை. ஒரு சமயம் அவர் பெண்பித்து பிடித்து—இரண்டாவது தாரம் நவ றின் பிறகு—அலைகையில், ஒரு தரகரிடம் கல்யாணத்துக்குச் சொல்லியிருந்தார். அவர் ஒரு போக்கிரியின் குடும்பத்தில் கமிஷன் வாங்கிக்கொண்டு, அவ்வீட்டுப் பெண், பதினைந்து வயதுள்ள ஒரு விதவையை, கன்னிகையாகக் காட்டி நிச்சயம் செய்து ஆயிரம் ரூபாய் அவர்களுக்குச் சேர்ப்பித்தார். கல்யாணம் ஒரு புண்யக்ஷேத்திரத்தில் அதிக ஆடம்பரமொன்று மின்றி நடந்தது. ரூபாயும் நகையும் பெற்றுக்கொண்டு பெண்ணுடன் ஸம்பந்திகள் ஊர் போனார்கள். ருதுவானவுடன் பெண்ணை அனுப்புவதாகச் சொல்லியிருந்தார்கள். ராகவய்யரும் ஒப்புக் கொண்டிருந்தார். சில நாள் கழித்து ராகவய்யர் ஸம்பந்திக்குக் கடிதம் போட்டார். பதில் ஒன்றும் வரவில்லை. ஸம்பந்தியின் ஊருக்குப்போனார். விதவைப் பெண்ணுக்குக் கல்யாணமாவது, ஏதோ பைத்தியம் பிடித்திருக்கிறாற் போலிருக்கிறதே என்று சொல்ல, ஊரில் விசாரித்து, பெண் உண்மையில் விதவைதான் என்று அறிந்து, வெளியில் சொன்னால வெட்கக்கேடென்று திரும்பி வந்து விட்டார்.

இன்னொரு சமயம், அவருடைய விரோதிகளில் சிலர் ஒரு தாஸிப் பெண்ணை அவருக்குக் கல்யாணம் செய்வித்து வேடிக்கை பார்த்தார்கள். அதிலும் கொஞ்சம் பணம் நஷ்டம் ஏற் பட்டது.

இப்படிப் பல அவமானங்கள் ஏற்பட்ட போதிலும், ஸந்ததி யில்லாவிட்டால் ஸ்வர்க்கத்தை யடைய முடியாதென்றும், தனக்கு எள்ளும் ஜலமும் இறைக்க ஒருவருமில்லாமல் தான் புத் என்னும் நரகத்தில் விழுந்து கஷ்டப்பட நேரிடுமென்றும் எண்ணி மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்தார். அப்போது தான் அவருக்கு மேலே சொன்ன வயது. அன்றையதினம் காலையில் அவர் தமது வீட்டுவாயிலில் உட்

சார்ந்துகொண் டிருந்தார். தெருவில் தரகர் சாமா சாஸ்திரிகள் போய்க்கொண் டிருந்தார்.

"சாஸ்த்ரிகளே, எது அவஸரமோ."

"இல்லே, அவஸரமொன்று மில்லே." என்று சொல்லிக்கொண்டே, சாஸ்த்ரிகள் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். ஏதோ லாபகரமான விஷயமிருக்கு மென்று சாமா சாஸ்திரிகள் எண்ணினர்.

"உங்களிடம்தான் பேசவேண்டுமென்றிருந்தேன். நல்ல வேளையாக நீங்களாகவே வந்து விட்டீர்கள்."

"என்ன ஸமாசாரம்?"

ராகவய்யருக்கு டணத்தின் மேலும் சாமா சாஸ்திரிகளின் மேலுந்தான் விசேஷ பிரியம். எந்த ரகஸ்யமான விஷயமானாலும் அவரிடம் சொல்லப் பின் வாங்கமாட்டார். தனக்காக அவர், பெண் தேடும் விஷயத்தில், பட்டபாடு கணக்கு வழக்கில்லே யென்று ஸந்தோஷப்படுவார்.

"ஸமாசார மென்ன. இப்படியே எனது கோரிக்கை நிறைவேறுமலே போகிறதே என்றுதான் கவலே. அதுதான், ஸந்ததியில்லாத குறைதான்."

"வாஸ்தவந்தான். ஈசுவரன் தான் கிருபை செய்யவில்லே. மற்றபடி நம்மாலானதை யெல்லாம் செய்து விட்டோம்."

"அப்படியே விட்டு விடலாமா. ஈசுவரன் மேல் பாரத்தைப் போட்டு விட்டு நாம் கையைக் கட்டிக்கொண் டிருக்கலாமா?"

"முன்பு சொன்னபடியே செய்கிறது தானே. உங்கள் ஒன்று விட்ட தம்பி பேரனே ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுகிறதாகச் சொன்னீர்களே."

"அதெல்லாம் பிரயோசனப்படுமா. நம்மது என்றிருக்க வேண்டாமா?"

ஐந்தாவது மனைவி இறந்த பிறகு அவர் கல்யாணத்தில் வெறுப்புக்கொண்டு, ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள எண்ணினர். அதைத்தான் சாஸ்திரிகள் குறிப்பிட்டார். ஆனல் இப்போது அவர் மனம் மாறியதைக் கண்டு, நமக்காகவேண்டிய தென்ன, கல்யாணம் செய்துகொண்டு கஷ்டப்படுவதும் ஸுகப்படுவதும்

அவரைச் சேர்ந்தது. நமக்கு தாகு கிடைக்கின்ற வரையில் கல்யாணம் செய்துவைக்க ஏற்பாடுசெய்ய வேண்டியது தான் நமது கடமை என்று தீர்மானித்தார் சாஸ்திரிகள்.

"அப்படியானால் மறுபடியும் கல்யாணம் செய்ய உத்தேசமா?"

"ஆம், அதுதான் யுக்தமென்று எண்ணுகிறேன். பெரிய பெண்ணாக கொஞ்சம் லக்ஷணமாகவும் இருக்கட்டும். வயஸாகி விட்டது. ஆ' த்துக்குவர நாளாக்கக் கூடாது."

"அப்படியே பார்க்கிறேன்."

"ஏதாவது நோக்கத்திலுண்டோ?"

"இருக்கு. ஆனால் கொஞ்சம் விசாரித்துச் சொல்லவேண்டும். இன்னும் ஒரு வாரத்தில் தெரிவிக்கிறேன்."

II

சாமா சாஸ்திரிகள் ஏற்கனவே ஒரு இடம் குறிப்பிட்டிருந்தார். தக்கவரானாக இருந்தால் பெண் வீட்டாருக்கு அதிக பணம் வாங்கிக் கொடுத்து, அதில் மூன்றில் ஒரு பங்கு பெறுவதாக ஏற்பாடு செய்திருந்தார். அவர் குறிப்பிட்டிருந்த பெண்ணுக்கு வயது பதின்மூன்று. தகப்பனாரில்லை. தாயார் மாத்திரம் இருந்தாள். இதரபந்துக்கள் பலர் இருந்தபோதிலும், உறவு கொண்டாடுவதில்லை. பெண்ணின் தாயார் குப்பம்மாள் ஒரு பெரிய மனிதன் வீட்டில் சமையல்செய்து போட்டு ஜீவனம் செய்துகொண் டிருந்தாள். பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிப் பலவாறு முயன்றும், ஸர்வ ஏழையாக சமையல்செய்துபோட்டு ஜீவனம் செய்பவளுடைய பெண்ணை எவனும், முதல் தாரமாக, அல்லது வயோதிக மாகாதவன் இரண்டாந் தாரமாகக் கல்யாணம் செய்துகொள்ள ஸம்மதிக்கவில்லை. கல்யாணம் செய்து கொள்ளுகிறவர் ஸகல செலவையும் தாமே போட்டுக் கொள்ள வேண்டும். மங்கலியம் முதல் அவரே செய்து போட வேண்டும். அப்படிச் செலவு செய்ய ராகவய்யர் போன்று கல்யாணப் பித்து பிடித்தவர்கள் தவிர வேறு எவரும் முன் வரவில்லை.

குப்பம்மாள் அதிக ஸம்பத்தில் வாழ்ந்தவள். அவள் புருஷன் குப்பய்யர் தக்க ஸொத்துள்ளவர். எல்லாம் ரொக்கமாக இருந்தது. நிலங்களாக இருந்தால் பாடுபட முடியாதென்றும், லேவாதேவியில் வியாஜியம் முதலியவை நேரிடுமென்றும் பயந்து பணத்தை பாங்கியில் வட்டிக்குப் போட்டிருந்தார். வட்டியைக்கொண்டு ஸுகஜீவனம் செய்து வந்தார்.

அவர் பெண்ணுக்கு வயது பத்து ஆகும்போது கல்யாணம் செய்ய எண்ணினர். அந்த ஸமயம் ஒரு நாள் அவருடைய பால்ய ஸ்நேகிதர் சேஷய்யர் என்பவர் ஏதோ காரியமாக ஊருக்கு வந்தார். இருவரும் பழைய பழக்கத்தை விடாமல் சேஷய்யர் குப்பய்யர் வீட்டில் சில நாள் தங்கினர். ஒரு நாள் கல்யாணப் பேச்சு வந்தது. ஏதாவது தக்க வரன் உண்டா என்று குப்பய்யர் சேஷய்யரைக் கேட்க சில இடங்களைக் குறிப்பிட்டார். அப்புறம் சேஷய்யருக்கும் ஒரு பையன் உண்டென்றும் தெரிய வரவே, குலங் கோத்திரம் விசாரிக்க வேண்டியதில்லை; நல்ல சம்பந்தமென்று குப்பய்யர் தமது பெண்ணைச் சேஷய்யர் பையனுக்குக் கொடுப்பதாகச் சொன்னர். சேஷய்யரும் ஒப்புக்கொண்டார். சீர் வரிசைகள் முதலியவைகள் எல்லாம் தீர்மான மாயின. நாளும் அந்த வர்ஷம் ஆனி மாஸத்தில் கடையில் குறிப்பிட்டார்கள்.

கல்யாணத்துக் பத்து நாள் முன் குப்பய்யர் பணம் போட்டிருந்த பாங்கி முறிந்து போனதாக ஸங்கதி வந்தது. எழுபத்தையாயிரம் ரூபாய் ஒரே தொகையாக முழுகிப்போயிற்று. அதைக் கேட்டதும் குப்பய்யர் திப்பிரமை கொண்டு இரண்டு நாளில் பரலோகம் போனர்.

குப்பய்யர் இறந்து போகவும், அந்த வர்ஷம் கல்யாணம் நின்றுபோயிற்று. ஆனல் சேஷய்யர் மாத்ரம் சொன்னவாக்குத் தவறக் கூடாதென்று எண்ணினர். குலங்கோத்திரம் விசாரிக்க வேண்டியதில்லை; பெண் நன்ருயிருக்கிறது; ஸொத்தில்லாவிட்டால் போகிறது என்று ஸமாதானம் செய்து கொண்டார். குப்பய்யர் மனைவியோ பெரிய இடத்தில் கல்யாணமானல் தான் ஏழையாயிருப்பதால், ஒரு ஸமயம் அவர்கள் பெண்ணை,

சரியாக வைத்துக் கொள்ளமாட்டார்களோ என்று எண்ணினாள் அதோடு அவளுடைய பந்துக்களில் சிலர் இப்போது உறவு கொண்டாடி அவளிடம் உள்ள நகைகளையும் ஸ்வல்ப ரொக்கத்தையும் பறிக்க எண்ணி, பந்துக்களில் இரண்டொரு பையன்களை வரனாக ஏற்பாடு செய்தார்கள். ஆனால் இந்தக் கல்யாண ஏற்பாடுகள் கடைசியில் தவறிப் போயின. அவளிடம் இருந்த நகைகளும் ரொக்கமும் அழிந்தன. இவை போகவே, அவரவர்கள் பந்துத்வத்தை மறந்து விட்டார்கள்.

அதன் பிறகும் சேஷய்யர் தமது வாக்கை நிறைவேற்ற எண்ணி, குப்பம்மாளையும் அவர் பெண் கமலத்தையும் தமதூருக்கு அழைத்து வந்தார். தனியாக ஒரு வீட்டில் இருக்கச் செய்தார். குப்பம்மாள் பணத்தில் பந்துக்கள் அபகரிக்காமலிருந்த ஸ்வல்ப பணத்தைத் தக்க இடத்தில் கொடுத்து வட்டி கிடைக்கும்படி ஏற்பாடு செய்தார். அந்த வர்ஷமே —, அதாவது, குப்பையர் இறந்த இரண்டாவது வர்ஷம்—கல்யாணம் செய்ய எண்ணினார். ஆனால் பையன் படிப்புக்குக் கெடுதிவருமென்று தோன்றியதால், அவன் படிப்பு முடிந்த பிறகு, தைமாஸத்தில கல்யாணம் செய்யலாமென்றிருந்தார்.

பையன் புத்திசாலி, லக்ஷணமானவன். அடிக்கடி குப்பம்மாள் வீட்டுக்குப் போய்வருவான். பெண்ணிடம் அவனுக்கு அதிகப் பிரியம் ஏற்பட்டது. அவளுக்கும் பையன் மேல் பிரியந்தான். இரண்டுபேர்களும் பிரியமாயிருப்பதைக் கண்டு குப்பம்மாள் தன் பெண் கல்யாணமான பிறகு ஸௌக்கியமாயிருப்பாள் என்று மனக்கோட்டை கட்டினாள்.

ஆனால் மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று செய்வது ஸகஜமாக இருக்கிறது. திடீரென்று சேஷய்யரும் இறந்து போனார். சேஷய்யர் பணக்காரரென்று பெயர் வாங்கியிருந்தாலும், கடன் ஸொத்துக்கு முக்கால் பங்குண்டு. கடன்காரர்கள் ஹிம்ஸை செய்தார்கள். ஒன்றுக்கு முக்காலாகவும் பாதியாகவும் விற்றதில் மிச்ச மொன்றும் தேறவில்லை. கமலம் போலவே பையனும் ஏழையாகிவிட்டான். அதன் மேல் கல்யாணப் பேச்சு நின்று விட்டது. பையனுக்கு பால்ய வயதில் குடும்ப பாரத்தை ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லை. தன் சாப்

பாட்டுக்கே தனது மாமனை எதிர்பார்த்திருக்கும் நிலைமையில், தன் படிப்புக்குக் கூட கஷ்டம்வரும் போலிருக்கையில், கல்யாணம் செய்துகொள்வது யுக்தமாகத் தோற்றவில்லை. ஆனால் தனது நிலைமை சற்று உயர்ந்தால் கமலத்தையே கல்யாணம் செய்துகொள்வதாக மாத்ரம் வாக்குக் கொடுத்தான்.

பெண்ணுக்கோ வயதாயிற்று. அதிக நாள் தாமஸிப்பது இனிக்கூடாது. குப்பம்மாள் ஒரு பெரிய மனிதன் வீட்டில் போய் சமைத்துப்போட்டு ஜீவனம் செய்து வந்தாள். தன் பெண்ணை ஒரு நல்ல இடத்தில் கொடுத்து கவலை ஒழிந்திருக்கலாமென்று எண்ணி, அதற்காக அநேக கல்யாண தரகர்களிடத்தில் சொல்லி யிருந்தாள்.

பையன்—சாம்பசிவன்—தட்டுத் தடுமாறி எப். ஏ-பரிக்ஷை தேறி பட்டணத்தில் போய் நாற்பது ரூபாயில் ஒரு வேலைக்கமர்ந்தான். அவன் தாயாரும் பட்டணத்தில் அவனுடன் இருந்தாள். ராகவய்யர் பெண் தேட எண்ணினபோது, சாம்பசிவனுடைய கல்யாண ஏற்பாடு நின்று போய் எட்டு மாஸமாயிற்று.

சாம்பசிவன் ஒரு உத்யோகத்தில் அமரவே அவனுக்குப் பெண் கொடுக்கச் சிலர் வந்தார்கள். ஆனால் அவன் மனம் கமலத்தையே நாடியிருந்தது. தன் தாயாரிடத்தில் அவன் ஜாடையாகச் சொல்லியும் அவள் சற்றும் ஸம்மதிக்க வில்லை. நான்கு பேர்களுக்கு நாற்பது ரூபாய் போதாதென்று ஆக்ஷேபித்தாள். சாம்பசிவனோ எந்த விதத்தில் கமலம் தனக்குக் கிடைப்பாளென்று யோசனை செய்தான்.

இந்த ஸமயத்தில் அவனுக்குச் சம்பளம் உயர்ந்தது. இப்போது அறுபது ரூபாய். அவனுக்கு சற்று தைரியம் உண்டாயிற்று. மறுபடியும் தன் தாயாரிடம் பிரஸ்தாபித்தான். இந்த ஸமயம் பரம ஏழையான பெண் வேண்டாமென்று அவள் சொல்லிவிட்டாள்.

ஒரு வாரத்துக்கெல்லாம் அவனை வேறு ஊருக்கு மாற்றினார்கள். அவனும் அவன் தாயாரும் அவ்வூரில் போய் தங்கினார்கள். அது தான் ராகவய்யர் இருக்கும் ஊர்.

ராகவய்யர் ஆறுந் தடவை கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாரென்றும் ஒரு பெண்ணை, அநியாயமாகக் கிணற்றில்

தள்ளப்போகிறார்கள் என்றும் அவர்கள் கேள்விப்பட்டார்கள். ஆனால் அந்தப் பெண் யார் என்று அவர்களுக்குத் தெரியாது. கல்யாணத்துக்கு முதல் நாள் குப்பம்மாளும் கமலமும் வந்து சேர்ந்ததும், உண்மையில் சாம்பசிவனைவிட அவன் தாயார் அதிகமாக வருத்த மடைந்தாள்.

சாமா சாஸ்திரிகளை தூஷிக்காதவர்கள் எவர்களும் இல்லை. கமலத்தைக் கண்டு பரிதபிக்காதவர்களும் கிடையாது.

III

"சாமாசாஸ்திரிகளைத் திட்டுவதில் பிரயோஜன மென்ன" என்றான் ஒருவன். சில திண்ணை தூங்கிகள் கல்யாணத்துக்கு முதல்நாள் இரவு ஒரு திண்ணையில் உட்கார்ந்து வம்புபேசினார்கள். "ராகவய்யர் பணக்கொழுப்புப் பிடித்துப்போய் அறுபது வயதில் கல்யாணம் செய்து கொள்ளுகிறாரே. அவரது கொட்டத்தையல்லவா அடக்கவேண்டும். பெண்ணின் தாயாரைத்தான் சொல்லிப் பிரயோஜனமென்ன. வயிற்றுக்கொடுமை. பெண்ணை வைத்துக் கொண்டு தவிக்கிறாள். எவனைக் கேட்டாலும் ஆயிரங்கொடுக்கிறாயா, ஐந்நூறு கொடுக்கிறாயா என்கிறான். நீர் என்ன செய்கிறாய் என்கிறான். ஏழைகளுக்கு பெண்ணிருந்தால் கஷ்டந்தானே?"

"அதென்னவோ எனக்குத் தெரியாது. இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது." என்றான் இன்னொருவன். அவனுக்கும் ராகவய்யருக்கும் எப்போதும் போதாது. அதோடு அவன் பெண்ணைப் பார்த்ததும் பச்சாத்தாபம் உண்டாகிவிட்டது. அவன் பெயர் ராமசேஷன்.

"அதற்கு என்ன செய்கிறது? பெண்ணுக்கோ வயஸாகிவிட்டது. கல்யாணம் நடந்தாக வேண்டும்." என்றான் வேறொருவன்.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பெண்ணுக்கேற்றதாக நம்மூரில் ஒருவனை இப்போதே தீர்மானம் செய்வோம். நாளை பதினம் முகூர்த்த ஸமயத்தில் அவனுக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்து விடுவோம்" என்றான் ராமசேஷன்.

"அது நன்றாயிருக்குமா?" என்றான் ஒருவன்.

"அறுபது வயதுக் கிழவனுக்கு பன்னிரண்டு வயதுப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைப்பது நன்றாயிருக்கிறதா?"

"அது இருக்கட்டும். வரன் யார்?"

'சீதாராமய்யர் பிள்ளை சுப்பிரமணியனுக்கென்ன?"

"பையன் ஈடு போதாது."

இவ்விதம் இரண்டு மூன்று பையன்களை உத்தேசித்து பொருத்தம் பார்த்தார்கள். இரவில் ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் தீர்மானம் செய்து கொண்டார்கள். எப்படியாவது ராகவய்யருக்குக் கல்யாணம் நடக்கக்கூடாது. அதே ஸமயத்தில் வேறு ஒரு பையனுக்கு— எந்த ஊரிலிருந்தாவது கொண்டு வந்து—கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும்.

ராமசேஷன்தான் இதற்கெல்லாம் அக்ஷதை போட்டுக் கொண்டவன். அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து வந்தான். எந்த ஸமயம் கூப்பிட்டாலும் வந்து பொருத்தம் முதலியவை பார்க்க அநந்தநாராயண வாத்தியார் தயாராக இருந்தார். அவருக்கும் ராமசேஷனிடம் பயம். மாட்டேனென்றால் எதாவது கஷ்ட மூண்டாக்குவான். மறு நாள் காலையில் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வந்தன. அநேகமாய்க் கல்யாணம் நடந்துவிடுமென்று தோன்றிற்று. ராமசேஷனுக்கு ஒரு வரனும் நிச்சயமாகவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் வரனைத் தவிர மற்றவைகளுக் கெல்லாம் ஏற்பாடு செய்து விட்டான்.

ராகவய்யர் க்ஷவரம் செய்து கொள்ள அம்பட்டனைப் பார்த்தார். அவன் வருவதாகச் சொன்னவன் வரவில்லை. வேறு அம்பட்டனைப்பார்த்தார். ஸ்வதந்தரக்காரன் மாட்டேனென்று வராமலிருக்க, தான் வேலைக்கு வருவது சரியெல்லவென்று மறுத்து விட்டான். ராகவய்யர் சற்று திகைத்தார். உடனே ராமசேஷனுடைய சிஷ்யன் ஒருவன், அங்கு தயாராக இருந்தவன், இதற்கென்ன பிரமாதம், ஊர் அம்பட்டன்கள் எப்போதும் இப்படித்தான். ஸமயத்தில் இடக்கு செய்கிறவர்கள்.

பக்கத்தூருக்குப் போய் வந்து விடலாமென்று யோசனை சொன்னான்.

"பக்கத்தூர் மூன்று மைல் தூரமாயிற்றே."

"அதற்கென்ன. இப்போது தான் பெரியாத்துக்குக் குதிரை வண்டி வந்தது. இன்னும் போகவில்லை. அதைப் போக வரப் பேசி வைத்துக் கொண்டால் முகூர்த்த நேரத்துக்கு வந்து விடலாம்."

"அப்படியானால் அதை ஏற்பாடு செய்" என்றார் ராகவய்யர்.

இருவரும் ஜட்காவண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். குதிரைவேகமாகப் போகவேண்டுமென்றான் சிஷ்யன். வண்டிக்காரன் சவுக்கால் குதிரையை நாலுதட்டுத் தட்டினான். அப்புறம் குதிரை கட்டுக் கடங்கவில்லை. முகூர்த்த நேரமும் போய் விட்டது. குதிரை நின்றபாடில்லை. ராகவய்யர் வருத்தப்பட்டார். குதித்திறங்கி நடந்து ஊருக்குப் போவதானாலும் ஸாயந்திரந்தான் ஊர்சேரலாம். ஆனால் அவருக்கு ராமசேஷன் மேல் கொஞ்சங்கூட ஸந்தேகங்கிடையாது.

ராமசேஷனோ வானகப்படாமல் தவித்தான். கடைசியாக ஒரு யோசனை தோன்றிற்று. சாம்பசிவன் வீட்டுக்கு ஓடினான்.

"சாம்பசிவய்யர்" என்று கூப்பிட்டான். சாம்பசிவன் வெளியில் வந்தான். "என்ன சமாசாரம்" என்று கேட்டான். இருவரும் உட்கார்ந்தார்கள்.

ராம: "நீர் எந்த ஊர்?"

சாம்: நான்......"

ராம: "உமக்கு இன்னும் கல்யாணமாகவில்லையே?"

சாம்: "ஆகவில்லை."

ராம: "உமது கோத்ரம் என்ன. நக்ஷத்திரம் என்ன."

சாம்: "பாரத்வாஜ கோத்ரம். மிருகசீரஷ நக்ஷத்திரம். ஏன் கேட்கிறீர்"

ராம்: "ஸகோத்ரம் இல்லை. ராகவய்யருக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருக்கிறதே. அது நடக்கக்கூடாது என்று கங்கணம் கட்டியிருக்கிறோம். வேறுவரன் பார்த்தோம். ஒன்றும் சரிப்பட்டு

வரவில்லை. நீர் கல்யாணம் செய்து கொள்ளுகிறீரா? பெண் நன்றாயிருக்கிறாள். நீர் பார்த்திருப்பீரே. ஆனால் ஏழை. ஏழையாயிருந்தாலென்ன. உமக்கு ஈசுவரன் நல்ல சம்பளமுள்ள உத்யோகம் கொடுத்திருக்கிறார். ஆகையால் இதைத் தட்டாதேயும்.

சாம்ப "இந்தப்பெண் ஏற்கனவே எனக்கு நிச்சயமானது தான். அஸந்தர்ப்பத்தால் நின்று போயிற்று. ஒரு தடவை அவள் தகப்பனார் கல்யாணம் நிச்சயமாகியிருக்கையில் பணம் நஷ்டமடைந்து விஸனத்தால் இறந்து போனார். இன்னொரு தடவை என் தகப்பனார் இறந்து போகவே நின்று போயிற்று."

ராம: "அப்படியானால் ஏற்கனவே பார்த்து நிச்சயமானதா. அப்போது திருப்தியாகப் போய்விட்டது. உமக்கு இஷ்டந்தானா?"

சாம்ப: 'என் தாயாரைக் கேட்டுத் தான் சொல்ல வேண்டும்."

ராமசேஷனுக்கு நிற்க நேரமில்லை. சாம்பசிவனுடன் தானும் உள்ளே போனான். விஷயங்களை எடுத்துச் சொன்னான். கல்யாணத்துக்கு ஸம்மதித்தால் ஏதாவது ஆபத்து வருமோ என்று பயந்தாள் சாம்பசிவன் தாயார். ராமசேஷன் எதற்கும் தான் ஜவாபுதாரி யென்றுசொல்லி ஸமாதானம் செய்தான். அதோடு ராகவய்யர் ஊருக்குத் திரும்பி வர ஸயந்திரமாகுமென்பதையும் காரணத்தோடு தெரிவித்தான். அரைமனதுடன் ஸம்மதித்தாள் சாம்பசிவன் தாயார்.

உடனே ராமசேஷன் சாம்பசிவனை தனது சிஷ்யன் ஒருவனிடம் கல்யாணத்துக்குத் தயாராக்க ஒப்புவித்து, குப்பம்மாளிடம் ஓடினான். அவளுக்கு வரனின்னதென்று தெரியவே சந்தோஷமாயிற்று. ஆனால் இப்படி தப்புக் காரியம் செய்வதில் தனக்குக்கெடுதலேற்படக் கூடாதே என்று விசாரப்பட்டாள். ராமசேஷன் எதற்கும் தானிருப்பதாக அபயதானம் செய்தான்.

ராகவய்யருக்கு ஏற்பட்ட லக்கினத்தில் சாம்பசிவனுக்கும் கமலத்துக்கும் விவாகம் நடை பெற்றது. ராமசேஷனுடைய சிஷ்யர்கள் வீட்டைச் சுற்றிலும் காவலிருந்து யாதொரு கலகமும் ஏற்படாதபடி பார்த்துக்கொண்டிருந்தார்கள். ராமசேஷன் அருகிலிருந்து கல்யாண விமரிசைகளை சரிவர நடத்தி வந்தான்.

ராகவய்யருடைய பந்துக்கள் சச்சரவு செய்ய முயன்றார்கள். ஊரிலுள்ளார் சிலர் ராமசேஷனுடைய குணங்களை ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லவே வாயை மூடிக் கொண்டார்கள்.

ஸாயந்திரம் நலுங்கு நடை பெற்றது. தம்பதிகள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து யாவரும் ஸந்தோஷப்பட்டார்கள். அந்த ஸமயம் ராகவய்யரும் சிஷ்யனும் ஒருகுதிரை வண்டியில் வந்து இறங்கினார்கள். கலகம் நடக்குமோ என்று யாவரும் பயந்தார்கள். ராமசேஷன் அப்போது அங்கில்லை. பந்தலில் பெண்ணும் மாப்பிள்ளையும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார் ராகவய்யர். பிரமை கொண்டார்.

காலையில் ஏறிப்போன குதிரை வண்டி சற்று மெதுவாக போன ஸமயம் பார்த்து ராகவய்யர் வண்டியிலிருந்தால் ஏதாவது ஆபத்து வருமென்று பயந்து கீழே குதித்தார். உடனே சிஷ்யனும் குதித்தான். குதிரை வண்டி சிஷ்யன் ஜாடை காட்டவே கட்டுக் கடங்காதது போல் போய் மறைந்து போய் விட்டது. அந்த ஸமயம் எதிரில் ஒரு குதிரை வண்டி வரவே அதில் ஏறிக்கொண்டு ஊர் வந்தார்கள்.

ராம சேஷன் வந்தான்.

“தாத்தா. வாருங்கள். என் இவ்வளவு தாமஸம். நீங்கள் இருந்து நடத்திவைத்திருந்தால் எவ்வளவு திருப்திகரமாக இருக்கும். நீங்கள் வருவீர்கள், வருவீர்கள், என்று ரொம்ப நாழிகை காத்திருந்தோம். லக்னம் தவறிப் போகிறதாயிருந்தது யாரடா, சந்தனம் தேங்காய் வெற்றிலைப்பாக்குக் கொண்டு வா.”

உடனே யமகிங்கரர்கள் வந்தாற் போல ஆறேழு பேர்கள் வந்து சேர்ந்தார்கள். ராகவய்யருக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஏதாவது பேசினால் உதை விழு மென்று தோன்றிற்று. யாரோ சூது செய்து இப்படித் தன்னை ஏமாற்றிவிட்டார்கள் என்று கண்டார். பிற்பாடு யோசித்து செய்யவேண்டியதை செய்வோம்; இப்போது வாயை மூடிக் கொண்டிருப்போம் என்று தீர்மானித்தார். ராமசேஷனுக்கும் தனக்கும் முன்பு நேர்ந்த மனஸ்தாபத்தை எண்ணி அதை இனி மேல் வளர விடக்கூடாதென்று ஸமாதானம் செய்து கொண்டார்.

தாம்பூலத்தைப் பெற்றுக்கொண்டு, "நீ செய்த ஏற்பாடு தான் சரி, பெண்ணுக்கும்பையனுக்கும் பொருந்தியிருக்கிறது." என்றார். வேறு எது சொன்னாலும் யுக்தமல்லவென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். கூட உட்கார்ந்து கொண்டு, தம்பதிகளின் நலுங்குவிளையாட்டைப் பார்க்கலானார்.

# காணாமற்போன நோட்டுகள்.*

"அடே, ஸுந்தரம், கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு வா, கணக்கு எழுதவேணும். உன்னிடத்திலிருந்த மைக் கூட்டையும் பேனாவையுங்கூடக் கொண்டுவா."

"இதோ கொண்டுவந்து விட்டேனப்பா. பெட்டித் திறவுகோல் உங்களிடத்தி லிருக்கிறதோ?"

"என்னிடமில்லை. அலமாரியி லிருக்கும், எடுத்துக் கொண்டுவா."

ஒரு சிறுபையன், 16 வயதிருக்கும், தனது உடம்பை வளைத்துக்கொண்டு மிகவும் சிரமத்துடன் ஒரு பெரிய கனமான பெட்டியைத் தூக்கிக்கொண்டுவந்து தன் தந்தை முன்பாகத் தரையில் வைத்துவிட்டு, அவர்கேட்ட மற்ற மைக்கூடுபேனாவையும் கொடுத்துவிட்டு, வீட்டில் ஒரு அறைக்குள் போய்வாசித்துக் கொண்டிருந்தான்.

பெரியவர், பையனுடைய தகப்பனார், பெட்டியைத் திறந்து, இரண்டு நிமிஷநேரம் அதிலுள்ள கடிதம் முதலியவைகளை எல்லாம் கீழே எடுத்து வைப்பதில் செலவழித்துப் பின்பு மறுபடியும், "அடே, ஸுந்தரம், இங்கேவா," என்றார்.

பையன் அவர் முன்னால் வந்து, "என் அப்பா; கூப்பிட்டீர்கள்?" என்றான்.

---

*முன்பு 'ஜனாபிமானி' பத்திரிகையில் வெளியானது. அதன் பத்திராதிபர் அனுமதியின் மேல் இங்கு சேர்க்கப் பட்டுள்ளது.

"காலையிலே பெட்டியைத் திறந்தாயா?"

"இல்லையே."

"நிஜத்தைச் சொல்."

"நான் எதற்காகத் திறக்கிறேன்? நீங்கள் ஒன்றும் திறக்கும்படி சொல்லவில்லையே, பெட்டியில் காசிருக்கா, பணமிருக்கா? நான் ஏன் திறக்கிறேன்?"

"அதிலே தானடா பணம் வைத்திருந்தேன். நோட்டாக மாற்றிவைத்திருந்தேன். அதை நீ எடுத்தாயா?"

"இன்றையதினம் அந்த அறைப்பக்கம் போகவே யில்லையே. காலையிலே கோவிந்தன் வீட்டிற்குப் போய் வ்யாஸம் எழுதிவிட்டு அதைக் கொண்டு வந்து இங்கு எங்கேயோ வைத்து விட்டேன், அதைக்காணோம், இது வரையில் தேடிப் பார்த்தவண்ணமா யிருக்கிறேன். பெட்டியைத் திறந்தேனா என்கிறீர்கள்."

"பின் அந்த உள்ளே யார்தான் போனார்?"

"அந்தப் பெண் இருக்கிற பக்ஷணத்தையெல்லாம் தின்றுவிடுகிறதென்று தான், அம்மா காலை முதல்கொண்டு அந்த உள்ளைப் பூட்டி வைத்திருந்தாளே."

"என்னடாது, வைத்திருந்த பணம் எங்கேயடா போய்விடும்?.

"எவ்வளவு பணம் வைத்திருந்தீர்கள்?"

"உன் அம்மாவைக் கூப்பிடு, ஏய் இங்கே வா."

ஸுமார் முப்பத்தைந்து வயதுள்ள ஓர் மாது மெதுவாய் நடந்துவந்து "எதுக்குக் கூப்பிட்டீர்கள்?" என்று சொல்லிக் கொண்டு அவர் முன்னிலையில் நின்றாள்.

"நீ பெட்டியைத் திறந்தாயா?"

"நான் என்னத்திற்காகத் திறக்கிறேன்."

"நேற்றையதினம் குப்பய்யரிடம் 500 ரூபாய் கடன் வாங்கப் போகிறேன் என்று சொன்னேனல்லவா? அதை நோட்டாகவே வாங்கிக்கொண்டு வந்து பெட்டியில் வைத்தேன். இப்பொழுது திறந்து பார்த்தால் பணத்தைக் காணோம்."

"காலை முதல்கொண்டு இரண்டு நாழிகைக்கு முன்னால் வரையிலும் கதவு பூட்டித்தான் இருந்தது. ராஜம் கூட அந்த

உள்ளே போகவில்லை."

"பின்னே பணம் போனவழி?"

"பெட்டியில் வைத்திருந்தால் பெட்டியில் தானே இருக்கும்," என்றான் பையன். "பெட்டியை நன்றாய்ப் பாருங்கள். நோட்டுதானே, கடிதாசோடு கலந்திருக்கும், தெரியாது." என்று பையன் சொல்லவே தந்தையும் தனயனுமாக பெட்டியைச் சோதிக்கலானார்கள். தாயாரும் இவர்களைக் கவனித்துக் கொண்டு நின்றாள். கொஞ்சதூரத்தில் அடக்க ஒடுக்கமாய் ரொம்ப லக்ஷணமுள்ள ஒரு சிறுபெண், 13 வயதிருக்கும், நின்றுகொண்டு முன் சொன்ன மூவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள். பெட்டியைத் தேடினது பயன்படாமல் போயிற்று.

"வேறு எங்கேயாவது வைத்தீர்களோ?" என்று கேட்டாள் பெரியவரின் மனைவி.

"வேறு எங்கேயும் வைக்கவில்லையே. குப்பய்யர், தாம் அதிகாலையில் வெளியில் போவதாயும், ஆகையால் தம்மை எழுப்பவரவேண்டும், அப்படி வந்தால்தான் பணம் கொடுக்க முடியும், இல்லாவிட்டால் தாம் ஊருக்குப்போய் வரப் பத்து நாள் செல்லுமென்று சொன்னார். காலையிலே போய் வாங்கிக் கொண்டு வந்தேன். நீ காவேரிக்குப் போய்விட்டாய். இந்த அறையின் கதவு பூட்டியிருந்தது. சாவிக்காகத் தேடினேன். கதவு நிலை மேலிருந்தது. திறந்து நோட்டுகளைப் பெட்டியில் வைத்துப் பூட்டி பழையபடி அறையைப் பூட்டி விட்டுத் திறவு கோலை இருந்த விடத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டேன். —அடே நீ ஏதாவது எடுத்தாயா? சொல்."

"நான் எதற்காகப்பா, எடுக்கிறேன். எனக்கென்ன செலவு?"

"ட்ராமா, கூத்து, ஸர்க்கஸ், எதற்காகவாவது வேண்டுமென்று எடுத்துக் கொண்டாயோ? மணியகார் பிள்ளை 15 ரூபாய் எடுத்துக் கொண்டு பட்டணம் ஓடினானே, அது மாதிரி நீயும் எங்கேயாவது —"

"நானும் என்ன சிறுபயலா, அப்படி ஓட? வைத்திருந்தால் அந்தப் பெட்டியில்தானே இருக்கும். நான் பார்க்கி

றேன்.'' என்று சொல்லிக்கொண்டே பெட்டியை மறுபடியும் சோதிக்கலானான். தந்தையார் சிறுவர்களுக்குப் பொதுவாயுள்ள அயோக்யதையைப்பற்றிக் கொஞ்சம் ப்ரஸங்கம் செய்துவிட்டு பணத்தை யிழந்ததற்காக மிகவும் துக்கப்பட்டுக்கொண் டிருந்தார். ரூ. 500 ஒரு ஏழைக் குடும்பத்துக்கு நஷ்டமாவதென்றால் அது அவர்களால் ஸகிக்கக் கூடியதல்லவே. தமது துக்கத்தை சொல்லாலும் செய்கையாலும் வெளிப்படுத்தி தமது பையன்தான் அப்பணத்தை எடுத்தொளித் திருக்கவேண்டுமென்று குற்றம் சாட்டினார். இந்த முறை பையன் பதில் சொல்லவில்லை. அவன் மிக ச்ரத்தையாய் கடிதங்களைப் புரட்டிக்கொண்டிருந்தான். தாய் பிரமித்தவளாய் நின்றுகொண்டு கணவனையும் குமாரனையும் பார்த்துக் கண்ணீர் விட்டழுதாள். எட்டி நின்றிருந்த சிறு பெண்ணும் சிறிது அருகினில் வந்து நடப்பவைகளை கவனித்தாள்.

"என்னுடைய வ்யாஸம் அகப்பட்டது. இதெப்படி வந்த திங்கே? நான் கூடத்திலல்லவா வைத்திருந்தேன். இதை யார் பெட்டியில் வைத்தார்."

அவர்களெல்லாரும் சிறிது பிரமை கொண்டார்கள்.

"நீ கொண்டுவந்த கடிதம் நீதானேடா இதில் வைத்திருக்க வேண்டும்? நான் எப்படி வைத்திருக்க முடியும்? இப்பொழுது உண்மையைச் சொல்லிவிடு. நோட்டுகளை எங்கே வைத்திருக்கிறாய்? நோட்டுகளை எடுக்கிற அவஸரத்தில் வ்யாஸத்தைப் பெட்டியில் வைத்திருக்கிறாய். நோட்டுகளைக் கொண்டுவந்து கொடுத்துவிடு.'' என்றார் தகப்பனார். பையன் தனக் கொன்றுமே தெரியாதென்று சாதித்தான். தனது வ்யாஸத்தை யாரோ பெட்டியில் வைத்து விட்டார்களென்றும் குறைகூறினான். "அது நம்பத்தக்கதா யில்லையே. இதைவிட வேறே என்ன ருஜு வேண்டும், நீ எடுத்தாயென்பதற்கு. போகிறது ; உடனே தெரிந்ததே. நீ எடுத்துக்கொண்டு எங்கேயாவது கம்பி நீட்டிவிட்டால்.'' என்றார் தகப்பனார். என்ன சொல்லியும் பையன் தான் எடுக்கவில்லை யென்றான். பயமுறுத்தினார்கள். வைதார்கள். கெஞ்சினார்கள். அடித்தார். ஒன்றுக்கும் அவன் தான் எடுத்ததாக ஒப்புக்கொள்ளவில்லை.

இதற்குள் ஜனக்கூட்டம் கூடிவிட்டது. ஸங்கதி தெரிந்தவுடன் சிலர், "ஸுந்தரம் அப்படி எடுக்கப்பட்டவனல்லவே. அவன் ரொம்ப யோக்யனாயிற்றே. அவனை விசாரிக்காமல் என் அடிக்கவேண்டும்" என்றார்கள். சிலர் "வேறென்ன ஸாக்ஷி வேண்டும். இதுதான் நன்றாய் வ்யக்தமாய்த் தெரிகிறதே. பெட்டியைத் திறந்திருக்கிறான். நோட்டுகளைக் கண்டவுடன் அதை எடுத்துக்கொண்டு பெட்டியைப் பூட்டும் அவஸரத்தில் தனது வ்யாஸமா? அதென்ன காம்போஸிஞ? அதை வைத்துவிட்டு வந்துவிட்டான். வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறதே" என்றார்கள்.

ஸுந்தரம் தற்கால நாகரீகம் மிகுதியும் வாய்ந்த பையனாகவிருந்தால், தான் அப்பணத்தை எடுத்தாலுஞ் சரி, எடுக்காவிட்டாலுஞ் சரி, தனது தந்தை இவ்வளவு தொந்தரை செய்ததற்கு ஒன்று, தந்தையுடன் எதிர்த்துப் போராடியிருப்பான்; அல்லது சண்டை தொடங்கின உடனே எங்கேனும் ஓடியிருப்பான். இவ்விதம் நல்ல பூசை பெற்றுக்கொண்டு அவர் சொல்லும் வசை மொழிகளைக் கேட்டுக்கொண்டிருக்கமாட்டான். ஸுந்தரத்தின் தாயும் பிள்ளையினுடைய செய்கைக்கு மிகவும் வாடி அவனுக்குச் சிலவசை மொழிகள் கூறினாள். பெற்றோர்கள் கூறிய மொழிகள் சொன்னபடி பலிதமாயிருந்தால், பையன் அன்று ஒரே நாளில் பலமுறையும் பல காரணங்களால் இறந்து மீண்டும் மீண்டும் உயிர்த்திருக்கவேண்டும். இருவரும் தன்னை நிர்ப்பந்திக்கிறதைப் பொறுக்கமாட்டாமல் வீட்டின் பல விடங்களிலும் தப்பிப்போய் எட்டி நின்றான். என்ன செய்தென்ன. அவர்கள் கோபம் அடங்குவதாயில்லை. தந்தையார் "உள்ளம் கவர்ந்தெழுந்தோங்கு சினம்" அடக்க இயலாதவராய் ஒரு பெரும் தடிகொண்டு தலையில் நையப் புடைத்து ரக்தகாயம் உண்டு பண்ணி ஓரிடத்தில் உட்கார்ந்து இளைப்பாறினார்.

பையன் கொல்லைக் கூடத்தில் விழுந்து கிடக்கிறான். தந்தை வாயிற் புறத்தில் உட்கார்ந்து வாய் புதைத்துக் கண்ணீர் விடுகிறார். தாய் கூடத்தில் தூணோடு சாய்ந்து தேம்புகிறாள். 500 ரூபாய் என்பது குறைந்த தொகை யல்லவே!

அந்தச் சிறிய பெண் மாத்திரம் அடிபட்டுக் கிடக்கும்

ஸுந்தரத்தினிடம் சென்று அங்கு நின்றாள். அப்பொழுது ஸுந்தரம் "அப்பா! என் ஜீவன் போகவில்லையே! இதற்காகவா பிள்ளை பிறந்தேன். ஒன்று மறியாத எனக்கு இவ்வளவு ஏன் வரவேண்டும்? ஜகதீசா!" என்று சொல்லித் திரும்புகையில் பெண் நிற்பதைப் பார்த்து, "ராஜம், ஒரு கந்தைத்துணியும், ஜலமும் சிறிது சர்க்கரையும் கொண்டுவா, என் கண்ணே, நீயாவது எனக்குதவியாயிரு" என்று பரிதாபமாய் சொல்ல, அதற்கு முன் அவனுடன் பேசியறியாத அப்பெண், "இதோ கொண்டு வந்து விட்டேன்" என்று சொல்லிக் கண்ணீர் விட்டு வருத்தப்பட்டுக் கொண்டே உள்ளே சென்று வேண்டியவற்றைக் கொணர்ந்து அவனுடைய காயங்களை அலம்பிச்சர்க்கரை வைத்து ரத்தம் வாராதபடி துணியால் கட்டி அவனுக்கு வேண்டிய சிச்ருஷை செய்தாள். "எனக்குத் தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா," என்றான் பையன். அவளும் சீக்கிரம் கொண்டுவந்து கொடுத்தாள். "எனது வேஷ்டி ஒன்றும் மேல்துண்டு ஒன்றும் கொண்டுவா." அவைகளையும் கொண்டுவந்து கொடுக்கவே, "ராஜம், நான் போய் வருகிறேன். இந்த வீட்டில் இருக்க எனக்கு இஷ்டமில்லை. திருடன் என்று பேர் வைத்துக்கொண்டு இங்கு இருக்கலாமா? நானோ அதில் ஒரு தூசு கூட அறியேன். என் தகப்பனார்தான் என்னவோ என்பேரில் ஸந்தேகப்பட்டு விட்டார், நீ மாத்திரம் என்பேரில் ஸந்தேகம் கொள்ளாதே. நான் பொய் சொல்லவில்லை. நான் ஒன்று மறியேன்."

இவைகளை அவன் சொன்ன பிறகு ஒரு நிமிஷம் ஒருவரும் பேசவில்லை. பெண் பேச முயன்றாள். மறுபடி சொற்களை மனதிற்குள் அடக்கிக் கொண்டாள். மனம் ஸமாதானம் கொள்ளவில்லை. பின்பு தைர்யம் கொண்டவளாய், "நீங்கள் எங்கு போகிறீர்கள்? நீங்கள் போய்விட்டால், எனக்கார் துணை?" என்று தழுதழுத்த குரலுடன் கேட்டாள்.

"கதி இல்லாதவனுக்கு இன்ன இடம் என்றுண்டா? மனம் போன போக்கெல்லாம் போகவேண்டியதுதான். உனக்கு உன் மாமா இருக்கிறார், மாமி இருக்கிறாள்."

"அப்படிச் சொல்லலாமா. நீங்களல்லவா எனக்குத் துணை

வர். நீங்களல்லவா—"

"அதெல்லாம் ஒன்றும் சொல்லாதே. உனக்கு மாங்கல்ய பலம் ரொம்ப அதிகம். உனக்கு அத்ருஷ்டமிருந்தால் நான் திரும்பி வருகிறேன். இல்லாவிட்டால் என்னைக்காண முடியாது. அவருக்குக் கோபம் தணிந்து நான் வரவேண்டுமென்று விரும்பினல் அப்பொழுது பார்த்துக்கொள்வோம். என்னிடத்தில் ஒரு காசும் இல்லை. 500 ரூபாய் திருடினதாக மாத்திரம் பேர். ஈசா, என்னை இப்படிக் கஷ்டப் படுத்துவாயா."

"என்னிடம் ஒரு ரூபாயிருக்கிறது" என்று சொல்லியதைக் கொண்டு வந்து கொடுத்தாள் ராஜம். அவன் அதை வாங்கிக் கொண்டு, "நீ தான் ஆபத்துக் காலத்தில் உதவுகிறவள்." என்று சொல்லி அவளைத் தன் பக்கமணைத்து ஒரு முத்தம் கொடுத்து விட்டுக் கொல்லைப்புறமாய்ப் போய்விட்டான். அவளும் அவன் செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள்.

## II

முதற் பிரிவில் கூறிய ஸம்பவங்கள் நடந்து ஸுமார் இரண்டு வருஷத்துக்கு மேலாயிற்று. அதே வீட்டில் வாயிலில் இரண்டொரு பரங்கிப் பூ வாடிக்கிடந்தன. கோலங்கள் சிறுவர்களால் அழிக்கப்பட்டு அலங்கோல மடைந்திருந்தன. ஆசிரியராகிய நாம் அவ் வீட்டுக்குள் பாவனை யென்னும் உடலத்துடன் சென்ற போது மாலையில் 25 நாழிகைப் பொழுதிருக்கலாம். வீட்டிலுள்ளோர், மூவர், கூடத்திலிருந்தார்கள். அவர்களுள் ஒருவரே புருஷர். அவர் தரையில் ஓர் ஆஸனப் பலகையில் உட்கார்ந்திருந்தார். ஓர் மாது, அவர் மனைவி, சிறிது தூரத்தில் நின்றுகொண் டிருந்தாள். ஓர் பெண், 15 வயதிருக்கும், ஓர் மூலையில் ஒரு பெரிய புஸ்தகத்தை வைத்துக் கொண்டு வெறித்த நோக்குடன் உட்கார்ந் திருந்தாள். இவர்கள் யாவரென நாம் கூறவேண்டுவ தவசியமில்லை.

"அவனால் நமக்கு உண்டான கஷ்டம் இவ்வளவு அவ்வளவல்ல." என்றார் ராமய்யர். "அவன் போனது முதற் கொண்டு கஷ்டத்துக்கு மேல் கஷ்டம் வந்துகொண் டிருக்கிறது."

"என்ன செய்கிறது. தலைவிதி" என்றாள் அவர் மனைவி.

"தலைவிதி பணத்தை எடுக்கச் சொல்லிற்று? ஆனமட்டும் கேட்டேனே. கெஞ்சினேனே. ஒன்றுக்கும் அசையவில்லையே."

"அதுவும் அவன் தலைவிதிதான்."

"மணியகாரருக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று 500 ரூபாய் கடன் வாங்கினேன். அதுவும் போயிற்று. ஐந்நூறும் ஐந்நூறும் ஆயிரமாயிற்று. அதற்கு வட்டி இருநூறு ரூபாய். அவர்கள் பணத்தைக் கொடு என்று அரித்தார்கள். என்ன செய்கிறது! நிலத்தை எல்லாம் விற்றாயிற்று. ஈட்டுக்கடன் பேரில் பணம் கொடு என்று யாரைக்கேட்டாலும் பணமில்லை என்றார்கள். போக்யம் வைக்கவும் ஸம்மதப்படவில்லை. நிலம் விற்றாயிற்று. என்ன செய்கிறது? அதுவும் நமது தலைவிதி." என்று பெரியவர் தமது தலையில் மனம் கசிந்து அடித்துக்கொண்டார். அவர் மனைவி கண்ணீர்விட்டுத் துக்கித்தாள்.

"சோற்றுக்குத் திண்டாட்டமாய்ப் போகவே நகையெல்லாம் விற்றோம். பாத்திரங்கள் முதலியவற்றையெல்லாம் விற்றோம். ஆயிற்று அந்தப் பணமும். இன்றோடு தீர்ந்துவிட்டது. போகிப் பண்டிகையுடன் கைப்பணம் ஆஸ்தியெல்லாம் தீர்ந்தது. வீட்டையோ தொடுவதற்கில்லை. அதன் மேலுள்ள கடனோ தினம் வளர்ந்துகொண்டிருக்கிறது. எருமை மாடோ செத்துப்போய் விட்டது. நாளை ஸங்கராந்தி பொங்கலுக்கு ஸாமான் வேண்டுமே, பணத்துக்கென்ன செய்வது," என்றிப்படியாகப் பலவிதமாக புருஷனும் பெண்சாதியும் வெகுநேரம் அங்கலாய்த்து விட்டு,

"அவனுக்கு ஆயுஸு பலம் ரொம்ப இருக்கிறது. நாளைக்கு ஸங்கராந்தி இல்லாவிட்டால் அசுபமென்றல்லவா எண்ண வேண்டும்" என்றார்.

இந்தப் பேச்சுகளையெல்லாம் கேட்டிருந்த நமது கதாநாயகி "மாமா, அசுபம் வரவேண்டாம். என்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது. அதைத் தருகிறேன். நாளையதினம் ஸங்க்ராந்தி நடக்கட்டும். அசுபமான பேச்சே வரவேண்டாம். அதைக் கேட்க என் மனம் என்னவோ போலிருக்கிறது" என்று சொல்லி உள்ளே சென்று தனது சிறிய பெட்டியிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டு வந்து தனது மாமனாரிடம் கொடுத்தாள்.

ராமய்யர் அதைப் பெற்றுக் கண்ணில் ஒற்றி, "நாளைய தினம் சுபதினமாகவே இருக்கட்டும்" என்று ஸந்தோஷத்துடன் கூறினர்.

"அப்படியே யாகட்டும்" என்று அவர் மனைவியும் மொழிந்தாள்.

"சீதா போன போது, ராஜம் சிறு பெண். 'அண்ணு, என் பெண்ணுக்கு உன்னைத் தவிர வேறு யாவரும் பந்துக்களில்லை' என் புக்ககத்தில் எல்லாரும் எனக்கு வேண்டாதவர்கள். அவர்களும் நெருங்கின பந்துவல்ல. என் பெண்ணை நீ தான் காப்பாற்றவேண்டும். நம்ம ஸுந்தரத்துக்கு அவளைக் கொடுத்துவிடு. ஒன்றுக்குள் ஒன்றுயிருக்கட்டும். நான் வேண்டிக் கொள்வது அதுதான். ஸுந்தரமும் ராஜமும் அகமுடையான் பெண்சாதியாயிருப்பார்கள் என்று நீ வாக்குக் கொடுத்தால் நான் சந்தோஷமாய் உயிர் விடுவேன்' என்றாள். நானும் 'அப்படியே ஆகட்டும். ஸுந்தரத்துக்கு ராஜத்தையே கல்யாணம் செய்து வைக்கிறேன், நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. என் பெண்ணைப்போல் பாவிக்கிறேன். என் அகமுடையாளும் அப்படியே ஒன்றுக்குள் ஒன்று ஸம்பந்தம் செய்யவேண்டு மென்கிறாள்' என்றேன். அதன்படியே நடந்தது. அவன் ஓடிவிட்டானே. யோக்யனென்று நினைத்தேன். பாவிப் பயல் மோசம் செய்து விட்டானே."

"மாமா, அப்படி ஒன்றும் சொல்லாதேயுங்கள். அவரைப் பற்றி ஒன்றும் சொல்லாதேயுங்கள். எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவரைப்பற்றி ஏதாவது சொன்னுல் என் மனம் ஸங்கடமடைகிறது" என்று அழுது சொல்லிக்கொண்டே அவ்விடம் விட்டு அகன்று சென்றான். பையனின் பெற்றோரும் சிறிது நேரம் துக்கித்துவிட்டு தங்கள் கார்யத்தில் கவனம் செலுத்தலானார்கள்.

அன்றிரவு ராஜத்துக்கு மிகவும் சிரமமாய் விட்டது. அவள் தன் கணவனை விட்டுப் பிரிந்தது முதல் துக்கத்திலேயே மூழ்கிக் கிடந்தாள். தன் கணவனைப் பிரிந்தது முதல் அவன் சொன்ன சொற்களை நினைந்து நினைந்து வருந்தினாள். கணவனைப் பிரிந்தால் என்ன கெடுதி என்று எண்ணிப் பார்த்தவளல்ல. ஏதோ ஒரு பீதி, இன்னதென்று இயம்ப இயலாதது

அவள் மனதில் குடி கொண்டது. ஒரு வருஷம் கழித்து அவள் ருதுவாகி மனம் விசாலமடைந்ததும், அவள் பய மதிகரிக்கலாயிற்று. ருதுவாகாத விதவைகளும் பக்வமடைந்து கணவனையிழந்தவர்களும், இன்னம் மற்ற அமங்கலிகளும், அமங்கலமானவர்கள் என்று பிறரால் தூற்றப்பட்டு சுப காரியங்களில் கலக்கப் பெருமல் தனித்து நிற்பதை யறிய அவளுக்குக் கவலைக் கிடமாயிற்று. தன் கதியும் அவ்வாருகுமோ என ஏங்கினுள். பிற பெண்கள் தம் கணவனுடன் உல்லாஸமாய்க் காலங்கழித்து வருவதைக் கண்டும் கேட்டும் புஸ்தகங்களில் வாசித்தும் காதல் நோயின்னதென ஒருவாறு மனதில் பாவிக்கவே அந்நோய் ஒரு புறம் சில ஸமயம் வாட்டலாயிற்று. இவ்வாறு இருவகையிலும் மனந்தளர்ந்து ஸந்தோஷம் தவிர்ந்து கவலை மேலிட்டவளாய் வருந்திஞள். தன் கணவனுடைய உண்மையான நிலைமையை அறிய இயலாதவளாய் ஏங்கஞள். அவருடைய தந்தையும் தாயும் பல தடவைகளில் அவரைப்பற்றி தூஷிப்பது பொறுக்காமல் அவர்களிருக்குமிடம் விட்டு விலகி வேறு இடத்திற்குச் சென்று கண்ணீர்விட்டழுவாள். "நீ மாத்திரம் என்பேரில் ஸந்தேகப்படாதே; நான் பொய் சொல்லவில்லை' என்ருரே. அவர் என்னிடத்தில் ஏன் பொய் சொல்லவேண்டும். ஊரைவிட்டோடும்போதும் தம்மிடம் பணம் கொஞ்சமுமில்லை என்ருரே. நான் கொடுத்த ரூபாயை அன்புடன் ஏற்றுக்கொண்டாரே. அவரா திருடக் கூடியவர்? இவர்கள் தான் என்ன முரட்டுத்தனமாய் பழி வார்த்தை சொல்லுகிருர்கள்" என்றிவ்வாறு புலம்புவாள். ஸுந்தரம் அவளிடம் விடை பெற்றுச் செல்லுங்கால் அவளுக்குக் கொடுத்துப்போன ப்ரதி யுபகாரத்தை நினைக்கும்போதெல்லாம் அவளுக்கு வருத்த முண்டாகும். அவரைத் திரும்பவும் காணும் பாக்யம் எப்பொழுது கிடைக்கும் என்றேங்குவாள்.

பெற்ருேர்களும் சிறிது சிறிதாக தங்களுடைய புத்ரன் மேல் உள்ள கோபத்தை யொழித்து அவன் ஓடிவிட்டதற்காக வருத்தப்பட்டார்கள். "அவன் திரும்பி வந்துவிட்டால் போதுமே. எப்படியாவது பிச்சை எடுத்தாவது ஜீவிக்கலாமே. அவனைக் காணுமல் என்மனம் படும்பாடு இவ்வளவு அவ்வளவல்

லவே', என்று ஊரில் பலரிடத்தும் சொல்லி வருவார்கள்.

ராஜம் அன்றிரவு நித்திரையே கொள்ளவில்லை. படுக்கையில் புரண்டு அழுதாள். தன் விதியை நொந்தாள். ஸந்தாத்தை நினைந்து உருகினாள். அவன் கூறிப்போன மொழிகளை எண்ணி வருந்தினாள். "நான் அத்ருஷ்டசாலியானால் இந்த 2 வருஷ காலத்துக்குள் திரும்பிவந்துவிட மாட்டாரா! அவர் சொன்ன வார்த்தைகளெல்லாம் வீண் வார்த்தைகளெனத் தோன்றுகிறது. இனிமேல் வரப்போகிறதைப்பற்றி யார் என்ன சொல்ல முடியும். அவர் சொன்னவை யெல்லாம் எனக்குத் தேறுதலாகச் சொன்ன வார்த்தைகள்" என்று எண்ணி மனங் கசிந்தாள். இப்படிப் பலவிதமாக எண்ணி தான் பூமியிலிருப்பது பாரமாதலால் தனது நல்ல நிலைமையிலேயே உயிர்விடுவது மேலானதென நிச்சயித்தாள்.

பொழுதுவிடிந்தது. ஆனால் அவளுக்கு இன்னம் விடியுங் காலம் வரவில்லை. ஆயினும் தனது மாமியுடன் படுக்கையை விட்டெழுந்தாள். அவளுடன் வீட்டு வேலைகளை கவனித்தாள். அந்தணர் அதிகாலையிலேயே ஆற்றங்கரைக்குச் சென்று விட்டார். அவர் மனைவியும் நாலு நாழிகையானதும் தனது மருமகளை ஆற்றுக்கு வரும்படி அழைத்தாள்.

"எனக்குத் தலைவலிக்கிறது. உடம்பு என்னவோ செய்கிறது. நான் வேண்டுமானால் பிறகு போய்க்கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் கிணற்றிலே ஸ்நானம் செய்கிறேன்." என்றாள் ராஜம்.

மாமியாரும் ஆற்றுக்குபோய் விட்டாள். தான் மாத்திரம் தனியாயிருக்கவே அவளுக்குப் பலபல யோசனைகள் தோன்றின. அவற்றின் பயனாக அவள் ஒரு பெரிய கயிற்றை ஓர் அறையில் உயரத்திலிருந்து கட்டி, கயிற்றில் சுருக்குப்போட்டு ஏணிமேலேறி அந்தச் சுறுக்கை தனது கழுத்திலிட முயன்றாள். பிறகு பயங்கொண்டு கீழே இறங்கினாள். மறுபடியும் ஏறினாள்.

"ஜகதீசா, என் கணவர் பிரிந்த பிற்பாடும் நான் உயிர் வைத்திருக்கவேண்டுமா. என் எண்ணத்தை நிறைவேற்ற தைர்யம் கொடு, உன்னை நமஸ்கரிக்கிறேன். அத்ருஷ்டமிருந்தால் இத்தனைநாளாக அவர் வராமலிருப்பாரா? ஜகதீசா, என்

னுயிரை வாங்கிக்கொள்ளும், அவரைக்காணு மிருக்கவென்னால் முடியவில்லை.” என்று சொல்லிக்கொண்டே கழுத்தில் சுருக்கிட்டு ஏணியிலிருந்து கீழே குதித்தாள்.

உடனே படீரென்று கதவு திறந்தது. “என்னைக்கண்டு உயிரோடு இரு” என்று ஒருவர் சொல்லிக்கொண்டே உள்ளே வந்தார். வந்ததும் பெண் இருக்கும் நிலைமையைப் பார்த்து உடனே ஏணிமேலேறி அவளைத் தூக்கி கயிற்றை வாங்கிவிட்டு கீழே இறக்கினார். அதற்குள் அவள் கண்மூடி ஸ்வாசமும் இல்லாமல் போய்விட்டது. வந்தவர் அவளைத் தம்மடிமே லிருத்தி வேண்டிய சைத்யோபசாரமெல்லாம் செய்து அவள் மூர்ச்சை போயிருந்ததால் (சுருக்குடன் அரைநிமிஷமும் இருக்கவில்லை) அவளுக்கு ஸ்மரணை உண்டாக்கினார்.

ராஜத்துக்குச் சிறிது தன்னினைவு ஏற்படவே, அவள் தனது கண்களைத் திறந்து பார்க்க தன் கணவன் மடியில் படுத்திருப்பதை யறிந்து சரேலென்று எழுந்திருந்து ஒரு புறத்தில் நின்றாள். “ராஜம், என்னகாரியம் செய்தாய், இப்படி செய்யலாமா? உனக்கார் துணை என்றாயே, எனக்கார் துணையென்று இப்படிச் செய்தாய்” என்று சொல்லியவளை யணைத்து முத்தமிட்டார். நாம் அவர்கள் ஸம்பாஷித்தவைகளை யெல்லாம் சொல்லவேண்டியல்லை.

கால்மணி நேரத்துக்கெல்லாம் ஸுந்தரத்தின் பெற்றோர் வரவே, ஸுந்தரம் அவர்காலில் பணிந்து வணங்கினான். அவர்களும் ஆசி கூறினார்கள்.

என்றாலும் தந்தைக்கு மகன்மேல் இன்னம் ஸந்தேகமிருந்தது. அதை யப்போது தெரிவித்தால் எங்கு பையன் ஸங்கராந்தியின் ஸந்தோஷத்தைக் கெடுத்துவிடுவானோ என்றெண்ணி சும்மாயிருந்தார். எல்லாரும் அன்று ஸந்தோஷமாகவே யிருந்தார்கள். ஒரு மணி ஸுமாருக்கு ப்ராம்மணர் பூஜையாரம்பிக்க யத்தனிக்கையில் கூடத்திலுள்ள ஒரு நீண்ட குறுகியவாயுடன் இருந்த ஒரு பிறையில் அடைத்திருந்த பழங்கந்தைகள் அவர் மேல்பட்டுவிட்டன.

“ஏ, கழுதை, இங்கேவா, இந்தத் துணிகளை எடுத்துவிடு என்று எத்தனை தரம்சொல்லுகிறது? பார் என்மேல் பட்டுவிட்

17890



டது. நான் மறுபடியும் ஸ்நானம் செய்யவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே குச்சியால் கந்தைகளை வெளியில் எடுத்துத் தள்ளினார். பிறையின் உள்புறத்தில் ஏதோ வெளுப்பாயிருந்தது. அதுவும் கந்தையாயிருக்கலாமென்று எண்ணி குச்சியால் தள்ளக் கடிதங் சுருளாயிருந்தது. "இதென்ன கடுதாசிகள், பார், ஸுந்தரம்." என்றார் அந்தணர். அவன் எடுத்துப் பார்த்தான். உடனே ப்ரமைகொண்டு சுவரில் சாய்ந்தான். "அதென்னடா அது?!!

அவன் பதில் சொல்லாமல் அவைகளை அவரிடம் கொடுத்தான். "ஏய், இதைப்பார், காணாமற்போன நோட்டுகள், பாழும்பணமே, உன்னாலல்லவோ இவ்வளவு கஷ்டங்களும் நேர்ந்தன! அப்பா! ஸுந்தரம் உன் மேலிருந்த ஸந்தேகமெல்லாம் போய்விட்டது." என்றார். யாவரும் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்

"இப்பொழுது தான் ஞாபகம் வருகிறது, நோட்டுகளை இந்தப் பிறையில் வைத்துவிட்டுத் தான் திறவுகோலைத் தேடினேன்.

"நானும் இதில்தான் எனது வ்யாஸத்தை வைத்தேன்' என்று யோசனையாய்ச் சொன்னான் ஸுந்தரம்.

சரிதான். நோட்டுக்குப்பதிலாக வ்யாஸத்தை எடுத்துப் பெட்டியில் வைத்துவிட்டேன்"! என்றார் ப்ராமணர்.

அன்றையதினம் எல்லாரும் பொங்கலை மெதுவாக ஸாப்பிட்டார்கள். ஸந்தோஷத்தால் விலாப்புடைக்கத் தின்றார்கள்.

இனிக் கதையை முடிப்போம். ஓடிப்போன ஸுந்தரம் கும்பகோணம் சென்று சில கனவான்களுடைய உதவியால் தன் படிப்பை விருத்திசெய்து ஒரு ராஜாங்க உத்யோகத்தில் அமர்ந்து தனது பெற்றோர் தன்னைக் காணவிரும்புவதாக தன்னூர் நண்பன் ஒருவனாலறிந்து அவர்களையும் தன தன்புக்கிடமான மனைவியையும் காண ஊருக்குவந்தான்- அவனும் அவன் மனைவியும் ஸந்தோஷித்து விளையாடியதை இடமதிகரிப்பதால் எழுதவில்லை. நேயர்கள் மனத்தில் பாவித்துக் கொள்வார்களாக.

முற்றிற்று,